
1959
MADRAS

# இராசராசேச்சுரமும் பிற சோழர் கோயில்களும்

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை



தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தாரால்
வெளியிடப்பெற்றது.
1958

Q23:453.21ll93,2
N58
109956

# இராசராசேச்சுரமும், பிறசோழர் கோயில்களும்.

தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தருள் சோழரது வள்ளன்மையும் சமயப்பற்றும் இன்றும் உலகம் சிறப்புறக் கொண்டாடப்படுவனவாம். தமிழ் மூதாட்டியார் அவரைக் கூறுமிடத்து,

"தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும்சோழ மண்டலமே"

என நீர், இறை, நிலம் என்னும் மூன்றையும் ஒருங்கு போற்றுவாராயினர். பரணி யாசிரியரும்,

"பல்கொடி தாழ மேருவிலுயர்ந்த செம்பியர்
தனிப்புலிக்கொடி தழைக்கவே"

எனப்புகழ்ந்து பாடினர். சூரிய குலத் தோன்றல்களாகிய சோழ மன்னர்கள் சரித்திர காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சீரும் சிறப்புமெய்தியிருந்தமை பலசான்றுகளால் அறியக்கிடக்கின்றது. அவர்களுள் தலைசிறந்து விளங்கிய சிலர் பெயரையே பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.

சோழர்கள் ஆங்காங்கு எடுப்பித்த கற்றளிகளே, அன்னாரை நினைப்பூட்டும் வெற்றித்தூண்களாக இன்றுவரை நின்று நிலவுகின்றன. பண்டைச் சோழர்களும் அவர் பின் வந்த சரித்திரகால பல்லவ பாண்டிய சோழர்களும் பழைய கோயில்களைப் பெரியவை ஆக்கியும், சீர்பெறப் புதுப்பித்தும், புதிய கோயில்களில் திருச்சுற்றாலயம், எழு நிலைக் கோபுரம், விமானம் முதலிய பல உறுப்புகளுடன் எடுப்பித்தும் தங்களுடைய வலியையும் புகழையும் நிலைநாட்டினர். ஆயினும் தமிழகத்திலே புராதன காலமுதல் அழகினாலும், உருவத்தினாலும், அற்புதச் சிற்பங்களாலும், நாட்டியுள்ள கடவுட் திருமேனிகளாலும் கண்டோர் வியக்கும்படி எண்ணற்ற கோயில்களைக் கட்டிய பெருமை சோழர் குலத்தாருடையது.

சோழர்களுள் முன்னோகிய முசுகுந்த சக்கிரவர்த்தி இந்திரனுக்குச் செய்த உதவியின் நன்றியாகப்பெற்ற ஏழு தியாகராசவிடங்க மூர்த்திகள் கோயில்கொண்ட இடங்கள் சப்த விடங்கத்தலங்களெனக் கூறப்பெறுகின்றன. அவை திருவாரூர், திருநாகைக் காரோணம், திருக்காறுயில், திருக்கோளிலி, திருமறைக்காடு (வேதாரணியம்), திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய பதிகளிலுள்ள திருக்கோயில்களென, கந்தபுராணம், கந்த விரதப்படலச் செய்யுட்களால் அறியலாம். அதற்கடுத்து மனுச் சோழன், கிள்ளிவளவன், கோச்செங்கணன் ஆகிய இவர்கள் காலத்துச் சைவமதம் சிறப்புற்றிருந்ததென்றும், செங்கணன்,


"எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்துலகாண்ட
செங்கட் சோழன்"

என்றும் தமிழ்மறை* கூறுகின்றது.

காலப்போக்கில் சோழமன்னரின் சீரும் சிறப்பும் குன்றவே மூன்றும் நூற்றுண்டில் அன்னோர் அன்னியர்களின் பேரரசுக் குட்பட்டவராகியும், ஆங்காங்கு சிற்றரசர்களாகவும், சேனைத் தலைவராகவுமிருந்து, பிறகு பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடைவிடாது நடந்த போரில் மாறிமாறி இருபக்கங்களிலும் சேர்ந்து துணைபுரிந்ததாகவும் தெரிகிறது. வேள்விக்குடி செப்பேட்டிலும், வேலூர்பாளையம் பட்டயத்திலும் இவ்விடைக் காலச் சோழமன்னர்களைப் பற்றி அருகிய குறிப்புகள் காணப்படுகின்றன. 7-ஆவது, 8-ஆவது நூற்றுண்டிலுங்கூட பொன்னி நாடெனப்படும் தஞ்சாவூர் சில்லாவிலும் அதற்கு அருகிலும் அவர்கள் இருந்திருந்தனர் என்பது, பல்லவர், பாண்டியர், மேலைச்சாளுக்கியர், இராட்டிரகூடர் முதலியோர் கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது. அரசியற்றுறையில் பொலிவிழந்த இக்காலத்திலுங்கூட இச்சோழர்கள் சைவசமய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்தமையும், சோழ அரசன் மகளாகிய மங்கையர்க்கரசியார் பாண்டியற்கு மாதேவியாகி, அமண்சமயம் மிகுந்திருந்த பாண்டிநாடு மீண்டும் சைவசமயம் நிலைபெற்றோங்கச் செய்த செய்தியும், ஆளுடைய நம்பிகள் ஆலவாய்க்கெழுந்தருளிய காலத்து, ஆண்டு "தென்னவர்கோன் மகளா

---

* சம்பந்தர் தேவாரம். திருவைகன் மாடக்கோயில். 1, 4, 5. திருவம்பர்; சுந்தரர்: திருநன்னிலம். 10. திருநறையூர்ப் பதிகங்கள்.



நன்றி:
இந்திய தொல்பொருள்
ஆராய்ச்சியினர்

தஞ்சை இராசராசேச்சுரம், 1798.
(ஒரு ஓவியத்திலிருந்து)

ரைத் திருவேட்டு" இனிதமர்ந்த சோழனைப்பற்றிய செய்தியும், பிறவும் பெரிய புராணம் என்ற அருள்நூலில் காணப் படுவனவாம்.

பல்லவர்கள் காலந்தொட்டு இந்நாள்வரை நம் நாட்டில் கோயில் கட்டும் முறை பெரும்பான்மையும் சோழர்கள் கையாண்டு வந்ததே. ஆதிகாலக் கோயில்கள், சுதையாலும், செங்கல்(சுடுமண)லாலும், மரத்தாலும் கட்டப்பட்டவை யாகும். அதனுல் அக்காலத்திலிருந்த கோயில்களுள் ஒன்றுமே காணப்படவில்லை. பின்பு, பல்லவர்கள் தலைப்பட்டு மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் முதலிய ஊர்களில் மகேந்திரவர்மன் விஷ்ணு கோயில்களும்; சீயமங்கலம், பல்லா வரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப் பள்ளி, திருமயம் முதலிய இடங்களில் சிவன் கோயிலும், மண்டகப்பட்டில் திரிமூர்த்திகள் கோயில்களும், சித்றன்ன வாயிலில் சமணர் கோயிலும், குகைக்கோயில்கள் போன்று மலைகளையும், பாறைகளையும், உட்புறமாகவே குடைந்து இறை வனுக்குக் கோயில்கள் சமைத்தனனென்று மகேந்திரவர்மனது மண்டகப்பட்டு கல்வெட்டாலும்[1] பிறவற்றாலும் நன்குதெரி கிறது.

அதற்கு அடுத்தபடியாக, நரசிம்மவர்மன் I காலத்தில் அக் குகைக் கோயில்களின் உட்புறமேயன்றி வெளிப்புறத்திலும் பாறைகளையே விமானங்கள் போன்று செதுக்கி அமைத்தமை, மாமல்லபுரம் கடற்றுறையோர மலைக்கோயில்களிலிருந்து தெரி கிறது. அவை 'எழுரதக் கோயில்' களென மகாபலிபுரத்தில் இன்றும் சிறப்புடன் விளங்குவது யாவரும் அறிந்ததே. பின்னர், சிவசூடாமணி என்ற இராசசிம்ம பல்லவன் காலத்து உண்டாய காஞ்சியிலுள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோயிலும், அவ் விடமே நந்திவர்ம பல்லவமல்லன் எடுத்த ஸ்ரீ வைகுண்டப்

(1) பல்லவன் மகேந்திரவர்மனுடைய (கி. பி. 600-640) மண்டகப்பட்டு சாசனம். Epi. Ind. xviii; Ins. 51 of 1914.

செங்கல்லால் கட்டப்பெற்ற திருவைகாவூர் மகாதேவன் கோயிலை கற்களால் கட்டுவதற்கும், ஏற்கனவே உள்ள தேவதான நிலங்கள் போதாமையிற் கோயிலின் செலவுக்கும் ஏற்ப மற்றும் நிலதானம் கொடுத்துதவும் முதற் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு அறி விப்பது காண்க.

பெருமாள் கோயிலும், கல்லாலும் சாந்தாலும் ஆக்கப் பெற்றவை. கோயில்கள் பெருங்கற்களை இசை தெரியாமல் அடுக்கி எழுப்பியனவாகும். இத்தகைய கோயில்கள் முதற் படியாக இறைவன் கோயிலும் முன் மண்டபமுமாகவே அமைந்து, பின்பு தனிப்பட்ட சுற்றுலைகளும் ஏற்படுத்தப் பட்டன. இவைகளின் காலம் ஏழுமுதல் ஒன்பதாவது நூற் ருண்டாகும். இக்காலத்தனவும் இதற்கு முற்பட்டனவுமான கோயில்கள் பல திறப்பட்டனவாக அப்பமூர்த்திகள் தேவாரத் தில் காணப்படுகின்றன.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்கோயிலெழு
[பதினேடெட்டும் மற்றுங்,
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில் கருப்பறியல் பொருப்
[பனைய கொகுடிக்கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில் மணிக்
[கோயில் ஆலக்கோயில்,
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத்
[தீவினைகள் தீரும் அன்றே"

**(அப்பர்—அடைவு திருத்தாண்டகம். 5)**

இவைகளின் சிறப்பியல்புகள் தெளிவாக காணக் கிடையா விடினும் இவைகளின் தன்மைகள் ஆராய்தற்குரியனவாகும்.[2] இதற்கடுத்து சோழர் ஆதிக்கத்தில் கட்டியவைகளின் கருப்ப கிருகத்தின்மேல் உயர்ந்து விளங்கும் விமானங்கள் கட்டப் பட்டும், அச்சுவர்கள்மீது பல அரிய சிவமூர்த்தங்கள் அமைக் கப்பட்டும், அடிப்பாகங்களிலும் கல்வெட்டுக்கள் எக்காலமும் எளிதாய்ப் புலப்படும் தெளிவுடன் பொறிக்கப்பட்டும், உள்ளன. காலஞ்செல்லச் செல்லத் தனிப்பட்ட கோயில்கள் இறைவிக்கும், சுப்பிரமணியர், விநாயகர், சபாபதி முதலியவர் களுக்கும் இச்சுற்றுலைகளில் ஏற்படுவனவாயின.

ஒன்பதாவது நூற்றுண்டின் இடையில், சோழர் ஆதிக் கத்தை மீண்டுந் தலையெடுக்கச் செய்தவன் **விசயாலயன்** ஆவான். இவனே சரித்திரகாலச் சோழர்களின் பேரரசுக்கு அடிகோலினவன். செந்தலைக் கல்வெட்டால்[1] முத்தரையர் என்ற குறுநிலமன்னர், தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும்

---

(1) Epi : Ind : xiii pp. 134—148 ; xv p. 49 ; கள்ளர் சரித்திரம். p 23.
(2) தமிழ்ப் பொழில் xv p. 83 : சோழர் கோயிற் பணிகள். ப. 7–8 பார்க்க.

இடைப்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பைக் காத்துவந்த செய்தி புலனுகின்றது. இச்சமயத்தில் சோழமரபினர் தஞ்சை சில்லாவின் மற்ருெருபால் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு பல்லவரின் கீழ் அரசு செலுத்தியிருக்கையில், தஞ்சையை அப்போது ஆண்டுவந்த பெரும்பிடுகு முத்தரையனை வென்று கைப்பற்றிய வரலாறு திருவாலங்காடு[1] செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு தஞ்சாவூரில் சோழ அரசை நிலைநாட்டிய விசயாலயன் அங்கு துர்க்கைக்கு **நிசும்பசூதனி** என்ற பெயரால் கோயில் சமைத்தான்.[2] அஃது இஃதெனக் குறிப்பிட முடியாதிருப்பினும் தற்போதைய தஞ்சை விண்ணுற்றங்கரைப் பாதையில் உள்ள கோடியம்மன் கோயிலாகவோ, தஞ்சைக் கீழவாயில் கோட்டத்துப் பூமாலை ராவுத்தன் கோயில் அணித்தாயுள்ள வடபத்ரகாளியம்மன் கோயிலாகவோ அமையலாம். தேவியாரின் திருவுருவம் பழமையான சிற்ப முறையில் நின்ற திருக்கோலமாயுள்ளது. இஃதன்றிப் புதுக்கோட்டை சீர்மையில் எட்டுச் சிறு குன்றுகளாற் சூழப்பட்ட நார்த்தாமலை என்ற சிறு கிராமத்தில் மேலைமலை என்ற தென்மேற்குக் குன்றின் மேலுள்ள **விஜயாலய சோழீச்சுரம்** என்ற ஓர் அழகிய கற்றளியும்[3], திருப்பூர் சோழீச்சுர முடையார் கோயிலும் * இவன் எடுத்தனவே.

---

* J. O. R. XII. iv, p. 300.

(1) S. I. I. III p. 415.

(2) பிற்பகுதியில் கருந்திட்டைக்கோயில்களின் வரலாற்றில் மற்றும் விபரங்காண்க.

(3) *Vide* No, 282 of Pudukkottai inscription, இம் மேலைமலையில் மற்றும் பல்லவ மகேந்திரவர்மனது **சமணகுடகும்,** பிந்திய பல்லவர் காலத்து **பழியிலீசுவரமு**மாகிய இரண்டு குடைவரைக் கோயில்களும் உள. " இவ்விரண்டு கோயில்களுக்கும் எதிராகவுள்ளது கற்கோயிலான **விஜயாலய சோழீசுவரம்**. இக் கோயில், மத்தியில் பிரதானகோயிலும் சுற்றிலும் ஏழு சுற்றுக்கோயில்களும் இவைகளைச் சூழ்ந்துள்ள கல்மதில்களும் அடங்கியது. கோயில் மேற்குப் பார்த்தது. மேற்கேயும் வடகிழக்கேயும் இரண்டு வாயில்கள் உள. கர்ப்பக்கிருஹம் ஓங்கார வடிவமுடையது குறுக்கில் 9 அடியும் உயரத்தில் 8 அடியும் உள்ளது. வட்டச்சுவர் 5 அடி கனமுள்ளது. நாலு மூலையிலும் சதுர வடிவு உடையது. இது முழுவதும் 29 அடி சதுரமுள்ள மண்டபத்திலிருக்கிறது. கர்ப்பக்கிருஹத்துக்குமேல் அதே மாதிரி இரண்டு தளங்கள் இருக்கின்றன. சிகரம் வரவரக்

விசயாலயனுக்குப்பின் அவன் மகன் இராசகேசரிவர்மனுன முதலாம் ஆதித்தன் கி. பி. 879 முதல் 907 வரை, இருபத்தெட்டுயாண்டுகள் ஆணை செலுத்தினுன். "தொண்டைநாடு பரவின சோழன்" எனத்தில்லைத்தானம் கல்வெட்டு ஒன்று இவனைச் சிறப்பித்திருக்கின்றது. இவன் கல்வெட்டுக்கள் வடக்கே திருக்கோவலூர், காஞ்சி, உக்கல் முதலிய இடங்களிலும், தெற்கே திருக்கோகரணம், குற்றுலம், சுசீந்தரம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களின் மீதும் பொறிக்கப்பட்டுள்ளன. தக்கோலம், திருக்கழுக்குன்றம் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளால் இவன் காலத்துத் தொண்டை மண்டலம் முழுதும் இவன் ஆணைக்குள் அடங்கி யிருந்ததென்பது புலனும்.

---

குறுகிக் கடைசியில் கல் ஸ்தூபியுடையதாய் வட்டமாய் முடிகிறது. இது பல்லவ சிற்பமான மஹாபலிபுரத்தில் உள்ள தர்மராஜ ரதத்தின் சிகரத்தை ஒத்திருக்கின்றது. நான்கு பக்கங்களிலும் நான்கு சிம்மலாடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் கீழ் வரிசையில் நான்கு திக்குகளிலும் நான்கு ரிஷபங்கள் விளங்குகின்றன. நான்கு புரைகளில் கற்சிலைகள் உள. மேற்கில், சிவனும் பார்வதியும், தெற்கில் வீணுதர தக்ஷிணுமூர்த்தியும் காணப்படுகின்றனர். கர்ப்பக்கிருஹத்திற்கு முன் ஓர் அர்த்த மண்டபம் உள்ளது. இது சுவருடன் உள்ளடங்கிய அரைத் தூண்களால் (pilasters) அடைபட்ட மண்டபம். இதன் வெளிப் புறத்தில் புரைகள் இல்லை. இம்மண்டபத்தைத் தாங்க மத்தியில் கற்றூண்கள் இருக்கின்றன. தூண்களின் தலைப் பாகத்திலுள்ள போதிகை பல்லவர் காலத்தவை போலச் சாதாரணமாயும் நடுவில் பட்டையாயும் இருபக்கத்திலும் சுருள்சுருளாயும் வருவினதாயும் இருக்கிறது.

அர்த்த மண்டபத்தின் வாசலுக்கு இருபுறத்திலும் ஐந்தடி உயரமுள்ள இரண்டு துவாரபாலகர்கள் இருக்கின்றனர். கால்கள் ஒன்றன் மேல் ஒன்று போட்டபடி இருக்கின்றன. ஒருகையில் கதை உளது. மற்ருெரு கை '**விஸ்மய**' க்குறி காட்டுகிறது. அவர்கள் சடாமகுடதாரிகளாக விளங்குகின்றுர்கள். சிரசின் கொம்புபோல் இரண்டு வளைவுகள் உள. இக் கொம்புகள் அநேக பல்லவ குகைக்கோயில்களிலுள்ள துவாரபாலகர்களுக்கும் உள. காதில் பத்ர குண்டலமும், உடம்பில் கடிபந்தமும், உதரபந்தமும், சலங்கைபோன்ற குஞ்சத்துடன் முறுக்கின துணிபோன்ற யஞ்ஞோபவீதமும் (பூணூலும்), கையில் வளையங்களும் காணப்படுகின்றன. இம் மூலக்கோயிலைச் சுற்றி ஆறு சுற்றுக்கோயில்கள் இருக்கின்றன—ஏழுகோயில்கள் இருந்திருக்கவேண்டும். இவை சூரியன், சத்த மாதர்கள், கணபதி, சுப்பிரமணியர் ஜேஷ்டாதேவி, சண்டேசுவரர், சந்திரன் இவர்களின் தளிகளாயிருக்கவேண்டும். இவைகள் யாவும் கற்றளிகள். அஸ்திவாரமுதல் ஸ்தூபிவரையில் முழுதும் கருங்கல்லே, சுண்ணும்பு இல்லாமல் செவ்வையாகவும், சாமர்த்தியமாகவும் இணைக்கப்பட்ட கற்களால் ஆக்கப்பட்டவை.—"கலைமகள்." xiii. p. 30-31.

இதன் வெற்றியின் ஞாபகார்த்தமாக எடுத்த பல கற்றளி களில், திருப்புறம்பயத்துள்ள ஆதிச்சேச்சுரம் என்ற கோயி லும்; பண்டாரவாடை ரயில்பாதை தலத்திற்கு அணித்தான திருச்சேயலூர் என்ற தேவராயன் பேட்டைக் கோயிலும்[1] கண்ணனூர் சுப்பிரமணியர்[2] கோயில் மற்றும் பலவுமாம்.

ஆதித்தசோழன் இறந்த இடம் திருக்காளத்திக்கு அண் மையிலுள்ள தொண்டமானூற்றூர் என்னும் தொண்டம நாடு என்பதாம். அச்சிற்றூரிலுள்ள கோதண்ட ராமேசுவரர் என்பதாகிய ஆதித்திய ஈசுவரர் கோயில் அச்சோழன்

---

(1) *Vide* Epi. Rep: 1924. இராஜகேசரி சதுர்வேதிமங்கலம் என்பது இப்போது இராஜகிரி என்ற சிற்றூராக உள்ளது.

(2) கண்ணனூர், புதுக்கோட்டை தலைநகரின் தென் மேற்கே 23 மைல் தூரத்திலுள்ள சிறு கிராமம். "சுப்பிரமணியர் கோயில்" ஆதித்தனது ஒரு கற்றளி. முழுவதும் சுண்ணும்புசி சம்பந்தமில்லா மல் செவ்வையாய்ப் பொருந்தும்படி இணைக்கப்பட்ட கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான கோயில்கள் சில பல்லவர் காலத்தும், பழைய சோழர் காலத்தும் கட்டப்பட்டன. இது கருப்பக் கிருகம், அந்தராளம், மூடப்பட்டுள்ள முகமண்டபம், பிராகாரம் என்ற பாகங்கள் அடங்கியது. கோபுர வாயிலின் நடுவிலுள்ள இரு கல் ஸ்தம்பங்களே தற்காலம் மிஞ்சியுள்ளன. இக்கோயிற் கல்வெட்டு களைக் கவனிக்குமிடத்து முக மண்டபம் 13-ம் நூற்றூண்டைச் சார்ந்த தெனினும், கருப்பக்கிருகமும் அந்தராளமும் பழமையானவை.

கருப்பக்கிருகத்தில் சிலை மாத்திரமல்லாமல் சுப்பிரமணிய தேவ ருக்கே யானை வாகனத்துடன் தனிக்கோயிலாக அமைந்திருக்கிறது. கோயில் கிழக்கு மேற்கில் 49 அடி நீளம் உள்ளது. கருப்பக்கிருகம் சதுரமானது. ஒவ்வொரு பக்கமும் 12½ அடி நீளம் உள்ளது. கிழக்குத் திக்கைப்பார்த்த கோயில். கருப்பக்கிருகத்தைச்சுற்றிக் கனமான சுவர்களும் இடையில் பதித்த அரைத்தூண்களும் (pilasters) இருக்கின்றன. ஒவ்வொரு தூணும் திருக்கட்டளைச் சுந்தரேசுவரர் கோயில் தூண்களைப்போல் நேர்த்தியான **கால், கலசம், கும்பம், பலகை** என்ற முக்கிய பாகங்கள் அடங்கியவை.

நார்த்தாமலை விசயாலய சோழீசுவரத்துக்கோயிற் போதிகை யைப்போல், பக்கத்தில் சாய்வு வாய்ந்த (angular profile of the corbel). காளியாபட்டி, திருப்பூர்க்கோயிற் போதிகைகளும் இத்தகை யனவே. **போதிகைக்கும் கபோதத்திற்கும்** இடையில் விசயாலய சோழீசுவரத்தைப்போல் ஒரு பூதகணவரியுள்ளது.

கபோதத்தின் மூலையில் அழகிய சித்திரங்கள் வரையப் பட்டுள்ளன. மேலே **யாளிவரிமானமும் கிரீவமும்** விளங்குகின்றன. கிரீவத்தில் நான்கு தேவ கோஷ்டங்கள் இருக்கின்றன. தற்காலம்

நினைவாகவோ, அவர் சமாதைக் குறிக்கவோ எழுப்பிய பள்ளிப்படை எனத் திருமால்புரம்[1] கல்வெட்டால் தெரிகிறது. பெரியவர் அடங்கிய இடத்திலும் அவர்களை நினைவு கூர்தற்கென எடுக்கும் கோயில் பள்ளிப்படை என்ற பெயருடையதென்பது சோழபுரம் கல்வெட்டாலும் தெரிகிறது.

ஆதித்தன் மகன் முதற்பராந்தகன் சிவபக்தன். தில்லை நடராசருக்குச் சிற்றம்பலத்தைக் கனக சபையாக ஆக்கப் பொன்ஓடு வேய்ந்தான். அரியபல நிபந்தங்களை (endowments) ஏற்படுத்தியும் வழிபட்டான். இவன் கட்டிய கோயில்கள், திரிசிரபுரத்திற்கடுத்த மலையின் மீது கட்டப்பெற்ற திருவெறும்பீசுவரமுடைய மகாதேவர் கோயில், திருவாவடு

---

இரண்டில்தான் சிலைகள் உள. இத்திருவுருவங்கள் என்னவென்று தெரியவில்லை; அவ்வளவு தேய்ந்து போயிருக்கின்றன. இதைச் சுற்றி நான்கு திக்கிலும் நான்கு யானைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு யானையும் இரண்டடி மூன்றங்குல நீளமும், ஓர் அடி எட்டு அங்குள உயரமும் உடையது. இதேமாதிரி மற்றொரு யானை முகமண்டபத்தில் இருக்கிறது. இதனால் யானை இக்கடவுளின் வாகனம் என்று தெரியவருகிறது. பத்துப்பாட்டு, பரிபாடல், புறநானூறு என்ற சங்கநூல்களில் பிணிமுகமென்னும் பெயருடைய யானையொன்று முருகக் கடவுளின் ஊர்தியாகச் சொல்லப்படுகிறது.

இக்கோவிலின் சிகரம் மணி வடிவுடையது. சிகரத்தின் தலைப்பில் மகாபத்மம், பட்டிகா என்ற பத்ம இதழ்களும், அவற்றிற்குமேல் அழகு வாய்ந்த கல்ஸ்தூபியும் இருக்கின்றன.

கருப்பக்கிருகத்தின் வெளிச்சுவர்களிலுள்ள மூன்று புரைகளிலும் தேவகோஷ்டங்களில் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவைகளில் தெற்கேயுள்ள கோஷ்டத்தில் **ஞான தக்ஷிணாமூர்த்தி** உருவ மாத்திரமே தற்காலம் மிஞ்சி நிற்பது. கருப்பக்கிருகத்தில் புதிய சிலை யொன்றை வைத்துப் பூசை செய்து வருகிறார்கள். பழைய உடைந்த சிலை இப்பொழுது முகமண்டபத்திலிருக்கும் நின்ற கோலத்திலமைந்த விக்கிரகமாகும். இவ்வுருவம் $3\frac{1}{2}$ அடி உயரமும், $1\frac{1}{2}$ அடி குறுக்களவும், அரையடி கனமுமுள்ளது. நான்கு கைகள் உடையது. மேற்கைகளில் **சக்தியும் அக்கமாலையும்** இருக்கின்றன. கீழ் வலதுகை **அபயஹஸ்தமும்** இடதுகை தொங்கும் நிலையுமுடையன. மார்பில் இரண்டு அக்கமாலைகளைக் குறுக்காக அணிந்துள்ளார். **கரண்ட மகுடமும்** தரித்துள்ளார் இது மிகப்பழமையான சிலை*

---

* "கலைமகள்." xiii. p. 205—211.

(1) Epi : Ind : VII p. 193 ; Ins. No. 286 of 1906

துறைக் கோயில்[1] காட்டு மன்னர் குடிக்கடுத்த உடையார் கோயில், முசிறித் தாலூகா சினிவாச நல்லூர் குரங்கனாதர் கோயில்[2], தில்லைக்கடுத்த எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில்[3] முதலியனவாம்.

பராந்தகனின் முதல் மகனான இராசாதித்தனால், தென்னாற்காடு சில்லா திருநாவலூரில் 'இராசாதித்தேச்சுரம்'[4] என்ற ஆலயம் கட்டுவித்தான். இவ்வூரே சுந்தரமூர்த்திகள் வளர்ந்த ஊர்.

(2) குரங்கநாதர் கோயில் அளவில் சிறிதேயாயினும், பழைய சோழர் காலத்துக் கோயில்களின் இலக்கணத்திற்கியைய விமானப் பகுதியுள்ள கருப்ப கிருஹமும், அதற்குமுன் நான்கு கற்றூண்கள் நிறுத்திய அந்தராள மண்டபமும் பொருந்தியதாகும். இவ்விரண்டதின் மத்தியில் மூடப்பெற்ற வழிநடையுமுள்ளது அர்த்தமண்டபமுமாகும். இவைகளின் நீளம் ஐம்பது அடி. விமானக்கோயில் ஐம்பது அடி உயரம். கருப்பகிரகம். 12 அடி உள்சதுரமானது. வெளிச்சுவர் 25 அடி சதுரம். அந்தராள மண்டபம் 25 அடி நீளம், 20 அடி அகலம், 16 அடி உயரம்.

இக்கோயில் தென்னிந்தியக் கோயில்களின் வளர்ச்சியில், பல்லவரது கைதேர்ந்த சிற்பக்கோயில்களுக்கும், சோழரது பிற்காலத்துப் பெருங் கோயில்களுக்கும் இடையே, ஒரு சிறப்பியலைப் பெற்றதென்னலாம். இதற்கு முன்னதான கோயில்களை ஒத்து நோக்குமிடத்து இக்கோயிலின் அகலப்போக்கும், சிற்பநுட்பங்கள் மிகுந்தில்லாததும், சுவற்றின் பாகங்களில் வெளியிடை மிகுந்துமிருப்பது நோக்கற்பாலது. சிற்பங்கள் சிலவே யாயினும் வனப்புற்றவையாகும். மற்றொன்று, இதன் பிற்காலச் கோயில்களில் பெரிதும் காணப்படும், பூதகணங்களின் தலைவரிசைகள், கோயிலின் கீழ் வரியில் நசுக்குண்டு வெளிக்கிளம்புவதுபோல் சித்தரித்திருப்பது இதுவே முதலாவதென்னச் சொல்லலாம். சிவ மூர்த்தங்கள் பல, கோயிற் சுவர்ப்புரைகளில் உயிரளவனவாகத் திலங்குகின்றன. அவற்றுள் தென்முகப் பரமாசிரியனது தொகுதி உருவங்களே மிக்க அருமையானவை. இவ் வேலைத் திறனுக்கு மாமல்லபுரத்து சிறந்த சிற்பங்களே அடிப்படையெனவும் கூறலாகும்.

---

(1) Ins. 143 of 1925. இதைக் கட்டுவித்தவன் சேனாதிபதியாகிய திருக்கற்றளிப்பிச்சன். இத்தொண்டிற்கு முதற் பராந்தகன் 500 கழஞ்சு பொன் அளித்தான்.

(2) *Vide* Journal of the Indian Society of Oriental Art. II i p. 3.

(3) Epi : Rep ; 1914 p. 94.

(4) Ins. 335 of 1902.

பராந்தகனது இரண்டாம் மகன் முதல் கண்டராதித்தன் காலத்தில் சிவன்கோயில் கட்டும் வழக்கம்பெருகிற்று. இக் கண்டராதித்தன் சிவபக்தனாக விளங்கினான். இவன் மனைவி உடையபிராட்டியார் செம்பியன் மாதேவி[1] தன் பக்தி விளங்க எடுப்பித்த கற்றளிகளும் அவற்றிற்கு அமைத்த நிபந்தங்களும் மிகப்பலவாகும். விருத்தாசலத்து ஸ்நாபன மண்டபம், கோபுரம், திருச்சுற்றுமாளிகைகள், பரிவாராலயங்கள் யாவும் இவ்வம்மையார் கட்டியவை; இவையன்றி மிகப்பல நிபந்தங் களையும் அளித்துள்ளார். மற்றும் திருவாரூரில் திருஅறநெறிக் கோயிலும் இவராற் கட்டப்பெற்றதே. திருமணஞ்சேரி கோயிலில் பல நிபந்தங்களும் காண்க. இவ்வம்மையாரது நீண்ட சைவ வாழ்க்கையே, பின் தோன்றிய சோழமன்னர்கள் பெருங்கோயில்களைக் கட்டுவதற்கு ஊக்கம் அளித்ததெனக் கரு தவும் இடமுண்டு. இவர் மகன் உத்தம சோழன் ஆட்சியில், தாயார் செம்பியன் மாதேவியாரால்[2] எடுப்பிக்கப்பட்ட கோயில்களுள் 'திருநல்லம் (கோனேரிராஜபுரம்), திருமணஞ் சேரி, ஆடுதுரை புகைவண்டி நிலையத்திற்கு வடபாலுள்ள தென்குரங்காடுதுறை[3] ஆகிய திருப்பதிகம் பெற்ற மற்ற கோயில்களுமாம்.

## வடகுரங்காடுதுறைக் கோயில்

இக்கோயில் தஞ்சை அரண்மனை ஆட்சிக்குட்பட்டது. காவிரியின் வடகரையிலுள்ள அறுபத்துமூன்று சிவத்தலங் களிலொன்று. அய்யம்பேட்டை ரயில்தொடருக்கு வடபுரம் மூன்று மைல் தூரத்திலும், திருவையாற்றுக் குடந்தைப் பாதை மார்க்கத்தில் ஏழு மைலிலுமுள்ளது. முன்கோபுரம் ஐந்து அடுக்குத் தோற்றமும், உள்நுழைந்ததும், வட புறம் 32 கற்றூண்கள் நிருவிய வசந்த மண்டபமும், சிறிது தூரத்தில் அம்பிகையின் சந்நிதியும், அதற்கடுத்து தனிப் பிராகாரம் அமைந்த இறைவன் கோயிலும் உள்ளது. அதன் உள் நுழைந்ததும் 24 கற்றூண்கள் நிறுத்திய மண்டபத்தின் வடபால் நடராஜப்பெருமானுக்கு மூலத்தானம் சிறப்பாக இத்தலத்தில் ஏற்பட்டிருப்பது காணலாம். அந்தராள மண்டபம் ஆறு தூண்களாலும், மகா மண்டபம் 12 தூண்

(1) Epi : Rep : 1914. p. 21. (2) S. I. I; III-iii
(3) Ins. 356–70 of 1907.

களாலுமானவை. சுற்றுத் தனிக்கோயில்கள் விநாயகருக்கும், சண்டேசுவரருக்கும் உள்ளன. சுவாமி பெயர்: அழகு சடைமுடிநாதர், குலேவணங்கீசர், வாலி நாதர், ஆபத் சகாயர், தயாளீசுவர சுவாமி என்பன; அம்மையார், அழகு சடைமுடியம்மை.

சுவாமியின் பெயருக்கு ஏற்ப, இக்கோயில் கொண்டருளிய ஈசனுக்கு பல வரலாறுகளுண்டு. பக்தி சிறந்த செட்டிப் பெண்ணின் தாகத்தைத் தீர்க்க இறைவன், அங்குள்ள தென்னையால் தன் குலே வணங்கி இளநீர் கொடுத்துதவியதும், இரு தென்னைகள் இத்தல விருக்ஷமாக யிருப்பதும் காணலாகும். இச் செட்டிப் பெண்ணின் உருவச்சிலே கோயிலில் உள்ளது இன்றும் காணலாம். வாலி பூசித்ததால் வாலிநாதர் என்றும், சிட்டுக்குருவிக்கு அருள் சுரந்தமையால் சிட்டுலிங்க நாதர் என்றும், பல பொருள்பட தயாளீசுவரரென்று இன்றும் அழைக்கப்படுகிறார். இவ்வரலாற்றுக்கேற்ப, சுவாமி சந்நிதி விமானத்திலும் இந்த ஐதீகங்கள் சாந்தாகாரமாக உருவகப் படுத்தியிருப்பது காண்பதாகும்.

கோயில் மிகப் புராதனமானது. ஏழாம் நூற்றாண்டில் சைவ சமயாசாரியர் திருஞான சம்பந்தர், இறைவனைத் தரிசித்து தேவாரம்[1] பாடிய திருத்தலமுமாகும்.

சமீபகாலத்தில் 1907-இல், மகாராட்டிர வமிசத்தில் இராணி மாதுஸ்ரீ ஜிஜாம்பாபாய் சாகேப் அவர்களால் இக் கோவில் பழுதுபார்த்து கும்பாபிஷேகம் செய்யப்பெற்றதென்றும் தெரிகின்றது.

---

## திருவடகுரங்காடுதுறைத் தேவாரம்.[1]

### திருஞானசம்பந்தர்.

பண்—சாதாரி

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளா ரிடமென விரும்பினரே. (1)

மந்தமா யிழிமதக் களிற்றிள மருப்பொடு பொருப்பின் நல்ல
சந்தமார் அகிலொடு சாதியின் பலங்களுந் தகையமோதி
உந்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
எந்தையார் இணையடி யிமையவர் தொழுதெழும் இயல்பினரே.

செம்பியன் மாதேவியார் நினைவுக்குறியாக நாகைக்கடுத்து செம்பியன் மாதேவி என்ற ஊர் ஒன்று உளது. முதற் கண்டராதித்தன் சிவலிங்கத்தை வழிபடும் படிமத்தைக் கோனேரி ராசபுரத்துக்கோயிலுட் காணலாம். முதல் கண்டராதித்தன் தம்பி அரிஞ்சயன் மகன் இரண்டாம் பராந்தகனை சுந்தரச்

---

முத்துமா மணியொடு முழைவளர் ஆரமும் முகந்துநுந்தி
எத்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மத்தமா மலரொடு மதிபொதி சடைமுடி யடிகள்தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணமன்றே. (3)

கறியுமா மிளகொடு கதலியின் பலங்களும் கலந்துநுந்தி
எறியுமா காவிரிவடகரை யடைகுரங் காடுதுறை
மறியுலாங் கையினர் மலரடி தொழுதெழ மருவுமுள்ளக்
குறியினா ரவர்மிகக் கூடுவார் நீடுவானுலகினூடே. (4)

கோடிடைச் சொரிந்ததே னதனொடுங் கொண்டல்வாய் விண்ட
[முன்னீர்
காடுடைப் பீலியும் கட றுடைப் பண்டமுங் கலந்துநுந்தி
ஓடுடைக் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி யடிகளா ரிடமெனப் பேணினரே. (5)

கோலமா மலரொடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினர் திருந்துமாங் கனிகளுந்தி
ஆலுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை நினையவல் வினைகள் வீடே. (6-7)

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடுதுறையே. (8)

பொருந்திறல் பெருங்கைமா வுரித்துமை யஞ்சவே யொருங்கு
[நோக்கிப்
பெருந்திறத் தநங்கனை அநங்கமா விழித்ததும் பெருமை
[போலும்
வருந்திறற் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
அருந்திறத் திருவரை யல்லல்கண் டோங்கிய அடிகளாரே. (9)

கட்டமண் தேரருங் கடுக்கடின் கழுக்களுங் கசிவொன்றில்லாப்
பிட்டர்தம் மறவுரை கொள்ளலும் பெருவரைப் பண்டமுந்தி
எட்டுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைச்
சிட்டனா ரடிதொழச் சிவகதி பெறுவது திண்ணமாமே. (10)

தாழிளங் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியான் அருமறை ஞானசம் பந்தன் கருதுபாடல்
கோழையா அழைப்பினுங்கூடுவார் நீடுவா னுலகினூடே. (11)

திருச்சிற்றம்பலம்.

சோழனும், அவன் பட்டத்தரசி வானவன் மாதேவியாரும் சிவபக்தர்கள். இவன் காஞ்சிமாநகரில் பொன் மாளிகையில் இறந்தான். இவன் இறந்தபோது இவனது மனைவியார் உடன்கட்டை ஏறினர். இதனைத் திருவாலங்காட்டுச் சாசனத்துக் காண்க. இவ்விருவர் படிமங்களையும் இவர்தம் மகளார் குந்தவையார் (முதலாம் இராசராசனின் அக்கை) தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளுவித்து நிபந்தங்கள் கொடுத்துள்ளதைக் கல்வெட்டுகளில் [1] காணலாம்.

"பழையாறை நகர்ச் சுந்தரச்சோழரை யாவரொப்பார்களித் தொன்னிலத்தே"

என்ற பழந்தமிழ்ச் செய்யுள் இச்சோழனைப் புகழ்ந்திருப்பது தெரியலாகும். இவனது ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று திருவியலூர் சிவயோகநாத சுவாமி கோயிலில் உள்ளது. இக் கோயிலின் உள்கோபுரமும், திருச்சுற்றுலயமும் இராசேந்திரச் சோழன் I[2] காலத்துக் கட்டப்பட்டதென்பது மற்றொரு கல்வெட்டால் [3] தெரிகிறது. ஆகவே இக் கோயிலானது சுந்தரச் சோழனால் ஆரம்பிக்கப் பெற்று நாளடைவில் மற்ற சோழர்களால் பெரிதாக அமைக்கப்பட்டதென்பதும் புலனும். இம்மாதிரியாகவே, கோயில்கள் நாளடைவில் வளர்ச்சி பெற்றமை கல்வெட்டாராய்ச்சியால் அறியலாம்.

## திருவியலூர்

**திருவியலூர்.** சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்ற வேம்பற்றூர் இப்போது **திருவியலூர்** என்ற பெயருடன் கும்பகோணத்துக்கு கிழக்கே நான்கு மைல் தூரத்திலுள்ளது. காவிரியின் வடபாலுள்ள 63 சிவத்தலங்களில் ஒன்று. சுவாமி பெயர் சிவயோகநாதர்; அம்பிகை சௌந்தர நாயகி; தீர்த்தம் சடாதீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்களுடையது. புராதனச் சோழர் காலத்துக் கோயிலும், ஏழாம் நூற்றாண்டில்

(1) Ins. 287 of 1917; 47 of 1918
(2) *Vide* Ins. 357 of 1907; 314-55 of 1908.
(3) Epi: Rep: 1904 p. 36.

சமயகுரவர் திருஞான சம்பந்த மூர்த்திகள் தேவாரம் பாடிய திருத்தலமுமாகும்*. ஆகவே சரித்திர காலத்தில், உத்தம

## திருவியலூர்த் தேவாரம்.*

### திருஞானசம்பந்தர்.

பண்—நட்டபாடை.

குரவம்கமழ் நறும்மென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்அலை புனலும்இள மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. (1)

ஏறூர்தரும் ஒருவன்பல வுருவன்நிலை யானான்
ஆறூர்தரு சடையன்அன லுருவன்புரி வுடையான்
மாறூர்புரம் எரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீறூர்தர நின்றானிடம் விரிநீர்விய லூரே. (2)

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழும் அருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. (3)

அடைவாகிய அடியார்தொழ அலரோன்தலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார்தர அகிலார்கழை முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே. (4)

எண்ணார்தரு பயனாயய னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர் பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரும் உருவாகிய கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. (5)

வசைவில்கொடு வருவேடுவ னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவான்நிலை யவனை
அசையப்பொரு தசையாவணம் அவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. (6)

மானார்அர வுடையான்இர வுடையான்பகல் நட்டம்
ஊனார்தரும் உயிரானுயர் விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. (7)

பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங் கதிர்நீள்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம் விரிநீர்விய லூரே. (8)

சோழன், செம்பியன் மாதேவியார்,[1] ஆதித்த கரிகாலன், இராசராசன் I; இராசேந்திரன் I; இராசாதி ராசன் I; மூன்றும் குலோத்துங்கன் முதலானோரும் இக்கோவிலுக்கு விட்ட நிபந்தங்கள் பல, இக்கோயிற் சுவர்களிலுள்ள 94 கல்வெட்டுக்கள் ஆராயப்பெற்றுள்ளன. அவற்றுள், முதல் இராசராசசோழன் இக்கோயிலில் துலாபாரதானமும், அவன் தேவி தந்திசக்திவிடங்கியார் ஹேமகர்ப்பதானமும் செய்தது[2] ஒரு கல்வெட்டில் உள்ளது. இதனை நிருபணம் செய்த அனந்தசிவன் என்ற சிற்பி, இறைவனை புட்பம் பழங்களுடன் இலிங்கபூசை செய்கிற பாவனையும் தெற்கு வெளிப் பிராகாரச் சுவரில் பொறித்துள்ளது.[3] முன்னது சமீபத்தில் திருப்பணி செய்யும்போது அறியாமல் கற்றுளியால் செதுக்கப்பெற்றது வருந்தற்குரியதாகும். (படம் பார்க்க)

வடமொழி திருவியலூர்ப் புராணம் தமிழில் மொழி பெயர்த்துள்ளது. இந்த இடம் ஆதியில் வில்வக்காடாக இருந்தமையால் வில்வவனமென்ற பெயரையுடையதெனவும்; புராதனன் என்ற அசுரன், இங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவன் சந்நிதியில் இறந்து பதவி பெற்றமையால், புராதனபுரமென்றும்; சிவயோகர் ஒருவருக்கு முக்தி அளித்ததால் இறைவனுக்கு சிவயோக நாதர் எனவும் பெயர் வழங்குவதற்குக் காரணமும் கூறுவது.

---

வளம்பட்டலர் மலர்மேலயன் மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணுவகை அழலாகிய அண்ணல்
உளம்பட்டெழு தழல்தூணதன் நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. (9)

தடுக்கால்உடல் மறைப்பாரவர் தவர்சீவர மூடிப்
பிடிக்கேயுரை செய்வாரொடு பேணார்நமர் பெரியோர்
கடல்சேர்தரு விடமுண்டமு தமரர்க்கருள் செய்த
விடைச்சேர்தரு கொடியானிடம் விரிநீர்விய லூரே. (10)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதோர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழும் அடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்உடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

(1) Ins. 28 of '07.

(2) Ins. 42 of '07. இராசராசன் தன் இடை பொன்தானமும்; தேவியார் பொன்னால் செய்த பசுவின் வயிற்றினுட்புகுந்து, அப் பசுவினைத் தானமும் செய்ததாகும்.

(3) Ins. 50 of 1907.

மற்றும், சித்தாந்த சாத்திரம், திருவுந்தியார் அருளிய உய்யவந்த தேவருக்கு மாணாக்கரும், திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனருக்கு குருவுமாகிய ஆளுடைய தேவநாயனர் அவதரிக்கப்பெற்றும்; மகாராட்டிய மன்னர் காலத்து, ஆரிய திராவிட வித்துவசிகாமணிகள் நிறையப்பெற்று, அவர்களுக்கு இக்கிராமத்தை சாஜி மன்னர் தன் பெயரால் **சாஜிராஜபுரம்** எனப் பெயரிட்டு தானமாக விடப்பட்டதும், அப்புலவர்களின் சிறந்த ஸ்ரீதர வெங்கடேச்சார் என்ற ஐயாவாள், வசித்து வந்ததும், தன் தனயன் சிராத்ததினத்தில் பட்டினிப்பிணியால் வருந்துமொரு புலையனுக்கு அன்னமிட்டது தவறன்று எனக்காட்டிய பெருமையை யுடைய இடமுமாகும்.

இக்கோயில் 1933-ல் திருப்பணியாளர் தேவகோட்டைத் திருவாளர் அ. ராம. அ. லெ. அருணசலஞ் செட்டியாரவர்களால் மிகுந்த பொருட்செலவு செய்து திருப்பணிசெய்து புதுப்பித்துள்ளது. அம்மன் சந்நிதியும் திருவாளர் தேவகோட்டை கரு. மெ. கதிரேசஞ் செட்டியாரவர்களும் திருப்பணி செய்துள்ளது.

## முதலாம் இராசராசன் அமைத்த "இராசராசேச்சுரம்".

இங்ஙனம், சோழ வேந்தர்கள் தமிழ் நாட்டில் எடுப்பித்த கோயில்களுள் தலைசிறந்து விளங்குவது முதலாம் இராசராச சோழன் தஞ்சையிலே அமைத்த "பெரியகோயில்" ஆகும். இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை இருபத்தொன்பது ஆண்டு வெகு கீர்த்தியுடன் சோழர் பேரரசைத் தாங்கினன். முதற் பராந்தகனைப் போலத் தில்லைச்சிற்றம்பலத்திற்கு நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டமையின் தில்லை வாழந்தணர் இவனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் "இராசராசன்", "சிவபாத சேகரன்" என்னும் பட்டங்களைக் கொடுத்தார்களெனக் கல்வெட்டறிஞர் வெங்கய்யா கூறுகின்றார். அருண்மொழி வர்மன் என்பது அவனது இயற்பெயர். இராசராசன் என்பது சிவநண்பனும், செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனுக்குரிய பெயர்களுள் ஒன்று. இத்தகைய அருமையான பெயர்கள் கிடைத்த பின்னரும், தனது வெற்றியும், புகழும் எங்கும் நிலவிட, நாடுமுழுதும் அமைதியாக இருந்தமையின் தன் எண்ணத்தைக் கடவுட்டிருப்பணியில் செலுத்தி, தனது புதுப்பெயரால் கோயில் எடுக்கும் எண்ணம் இயற்கையாக உண்டாகி அவனது பத்தொன்பதாவது ஆண்டாகிய கி. பி. 1003-ல் கோயில் கட்ட ஆரம்பித்திருத்தல் வேண்டும். இவன் மேலைச்சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனை

வென்றதற்காகப் பொற்பூக்கள் பல இவ்வாலயத்துப் பரம சுவாமிக்குக் கொடுத்ததாக,

"ஸத்யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீ பாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருப்பொற்பூ"

என்பதனால் தெரிகின்றது. அவ்வெற்றி இவனது 22-ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகும். அவ்வாண்டினில் பொற்பூவால் அர்ச்சிப்பானுயின் இவ்விமானவேலை ஒருவாறு முடிந்திருத்தல் வேண்டும். யாண்டு 23 முதல் 27 வரையில் பொற்சின்னங்களும் பொன்னுபரணங்களும் கொடுத்ததாகச் சாசனம் கூறுகின்றது. இதனால் இருபத்துமூன்றும் யாண்டில் இக்கோயில் திருப்பணி பெரும்பாலும் முடிந்தும்,

"யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினால் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கக் கொடுத்த செப்புக்குடம் ஒன்று"

என்னும் சாசனப் பகுதியால் ஸ்தூபிக்கு செப்புக்குடம் கொடுத்துத் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நடந்ததும், இக்கோயில் விமானத்தில்

"யாண்டு இருபத்தாறுவது நாள் இருபதினால் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ விமானக் கல்லில் வெட்டுக"


எனச் சாசனம் வெட்டுதற்கு அவன் கட்டளை இட்டிருப்பதும் காணும்போது அவனது பத்தொன்பதாவது (கி. பி. 1003) யாண்டில் தொடங்கி, யாண்டு இருபத்தைந்தில் அதாவது கி. பி. 1009-இல் திருப்பணி முடிவுற்றதென்னலாம்.

"பாண்டிய குலாசனிவளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரம்"

எனச் சாசனத்தில் காணப்படுதலின் இப்பெரிய கோயிலுக்குப் பெயர் **இராசராசேச்சுரம்** என்பதும், இது ஒரு கற்கோயில் என்பதும், இக்கோயில் எடுத்துள்ள இடம் தமது நாட்டின் பெரும்பகுதியான பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்பதும் விளங்கும். "பாண்டிய குலாசனி" என்பது இராசராசனின் விருதுப் பெயர்களில் ஒன்று. இதற்குப் பாண்டிய குலத்திற்கு இடியேற்றை ஒப்பவன் என்பது பொருள்.

**திருக்கோயிலின் விளக்கம்.**

தஞ்சை, 'இராசராசேச்சுரம்'[1] இப்போது சிவகங்கை சிறு கோட்டையின் தென்பாதியிலிருப்பதைக் காணலாகும். அதனை அணுக, அக்கோட்டையின் அகழைக் கடந்து, கோட்டைச் சுவரிலாக்கிய வளைவுக்குள் நுழைந்தும், சிறிது தூரத்தில் எதிர்ப்படும் அழகிய கோபுரத்தைக் கடந்தும், மற்றும் சிறு



[2] [ வெற்றிவேல் ]

கோட்டை உள்வாயிலும் முதற் கோபுரமும்

தூரத்திலுள்ள இராசராசன் கட்டிய மற்றொரு அகன்ற கோபுரத்தைக் கடந்தும் அடையலாம். உள் நுழைந்ததும், கருங்கல், செங்கல்லாலும் பரப்பப்பெற்ற சுமார் 500 அடி நீளமும் 250 அடி அகலமுமுள்ள ஒரு பரந்த பேரவைபோன்ற வெளிமுன் அமைந்த மேடையில் நந்திப்பெருமானின் பெருந் தோற்றமும், அதனைப் பாதுகாக்கக் கட்டிய நாயக்கர் மண்டபமுமுள்ளது. எதிரில் இறைவன் கோயில் விமானமும், அடுத்து அம்மையாரின் திருக்கோயிலும் காணலாகும். உட்

(1) "The Tamul races were perhaps the greatest temple builders in the world; *the great pagoda at Tanjore......by far the grandest temple in India......*" Architecture"— *Encyclopaedia Brittanica*, 9th edition, II. p. 396.

(2) இதனைத் தொடர்ந்த ஏழு அழகிய தோற்றங்கள் தஞ்சை வெற்றிவேல் அச்சகத்தார் அன்புடன் உதவியவையாகும். நன்றி.


கோயிலானது, இறைவன் சந்நிதியான கருப்பக்கிருஹம், அதனைச் சுற்றியுள்ள பிரதக்ஷண மண்டபமுள்ள அர்த்தமண்டபம், இருபக்கமும் தூண்களுள்ளதும், வெளிவாசலுமுள்ள மகா மண்டபம்; தியாகேசர் சந்நிதியுள்ள ஸ்தாபன மண்டபம்; கோயில் எடுபிடிகள் வைத்துள்ளதும் வேலைக்காரர்கள் இருக்கையுள்ளதுமான நர்த்தன மண்டபம்; வாத்யமண்டபம் என்ற ஆறுபகுதிகளையுடையது. கோயிலிலுள்ள ஏழு வாயில்களிலும், 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள ஏழு இருதுவாரபாலகர்கள் காப்புச்செய்து கொண்டிருக்கின்றனர். அவைகளுள் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலின் முன்னுள்ளவைமாசற்ற கருங்கல்லால்மிக்க வனப்புற அமைந்துள்ளவை.

இவ்வாலயத்திற்கு மூன்று திருவாயில்களென குறிப்பிட்டிருப்பன. அவை முதற்கோபுரவாயிலாகிய, "கேரளாந்தகன்" (சேரர்களுக்கு யமன்) என்பது. மற்றது, இரண்டாவது கோபுரமாகிய, "இராசராசன் திருவாசல்" என்ற பெயருடையது. மூன்றுவது, கோயில் உள்வாயிலாகிய, "திரு அணுக்கன் திருவாசல்" ஆகும். இறைவன் சந்நிதியை அணுக இவ்விமானத்தின் தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. ஒவ்வொன்றும் படிகளால் எய்துபவையாம். கம்பீரத்தோற்றமுள்ள துவாரபாலகர் இவ்வாயில்களிற் காப்புச் செய்கின்றனர். விமானத்தின் தெற்கு வாசலுக்கு "விக்ரமன் திருவாசல்"* எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாயிலின் கீழ்ப்பாகத்து மகாலக்ஷிமியின் உருவமும், வடக்கு வாயிலின் கீழ்ப்பாகத்து சரசுவதியின் வடிவமும் வனப்புறத் திகழ்கின்றன. திருஅணுக்கன் திருவாயில் இருபுறமுமமைந்த படிகளாலேயே (transverse steps) முன்னுளில் எய்துவதாகும். இப்படிகளே கோயில் எடுப்பித்தபோது உடன் உண்டானவை. இக்காரணம் கொண்டும் நிலப்பரப்புக்குமேல் உயர்ந்த மேடையில் நிறுவப்பெற்ற தன்மையினாலும் இக்கோயில் **மாடக் கோயில்** என்பதற்கேற்ற இலக்கணம் பெற்றதென்பர். திருஅணுக்கன் திருவாயிலுக்கு எதிரே இப்போது அமைத்துள்ள நேரானபடிகள் பிற்காலத்தில் சரபோஜி மன்னன் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். கோயிலின் நீட்டளவு 793 அடி. குறுக்களவு 397 அடி.

---

* Ins. 414 of 1924.

கோயிலின் கருப்பகிருகத்திற்கு மேலேயுள்ள அழகிய விமானம் சதுர வடிவமானதும், பதின்மூன்று கோபுரமாடிகள் கொண்டதுமாகும். உச்சியில் சதுரவடிவமுள்ள பிரமரந்திரத் தளக் கல்லின் மேல் கலசமும் அதன்மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளன. இச்சிறந்த விமானம் "தக்ஷண மேரு" என்றும் உத்தம விமான மென்றும் அழைக்கப்படுகிறது.



இராசராசேச்சுரம் உத்தம விமானம்

இது 216 அடி உயரமுடையது. இதன் ஸ்தூபிக்குடம் செம்பினுற் செய்யப்பட்டு மேலே பொற்றகடுபோர்த்ததாகும். செப்புக்குடம் 3083 பலம் நிறையுடையது. அதன்மேல் போர்த்துள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு என்றும் கூறப்படுகிறது. விமான உச்சியில் போடப்பட்ட பிரமரந்திரத்தளம் ஒரே கருங்கல். அது 25½ அடி சதுரம், நிறை 80 டன் என்பர். இதனைத் தஞ்சைக்கு நான்கு மைலுக்கப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற கிராமத்திலிருந்து சாரம் போட்டு இச்சிகரத்தில் ஏற்றினர்களென்பது கிராமத்துப் பெயரால் ஊகிக்கப்படுகிறது. சதுரக் கல்லின் நான்குமூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித்தனி 6½ அடி நீளமும் 5½ அடி அகலமும் உள்ளன. அவற்றை யொத்த நந்தியொன்று உமாபரமேச்வரியின் (அம்பிகை) சந்நிதிக்கு எதிரே திருச்சுற்று மாளிகையில் இருப்பதைக் காணலாம். பிரமரந்திரத் தளக் கல்லைப் பற்றிப் பல கதைகளுண்டு. விமான வேலை நடத்தும்போது சிற்பிகளுக்கு உணவு, நீர் முதலியன கொடுத்துதவிய

ஒரு முதியாளிடம் தங்கள் நன்றியைக் காட்டுதற்கு அறிகுறியாக அச்சிற்பிகள் அம்முதியாள் விரும்பியபடி அவள் வீட்டிலிருந்த கல்லொன்றை விமானத்தில் சிகரத்தின் நடுவில் அமைத்துக் கோயிலைக் கட்டி நிறைவேற்றினார்களென்றும், ஒருநாள் சோழனது கனவில் எம்பெருமான், "யாம் கிழவி அளித்த நிழலில் உவந்திருக்கின்றேம்," எனத் திருவாய்மலர்ந்தருள, சோழன் உண்மையறியாது மயங்கிப் பின்னர் அறிந்தனனென்றும் வழங்கும் வரலாறு ஒன்று. இது பிரகதீசுவர மகாத்மியத்திற் கண்டது. இதனை மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்,

"அம்மையார் நிழலில்யா மமர்வோமென் றருள் செய்த,
செம்மையார் வீற்றிருக்குந் திருத்தஞ்சை"—(திருநாட்டுப். 54)

என மாயூரப் புராணத்திலும்; 'தஞ்சைப் பெருவுடையாருலா' ஆசிரியர்,

"பொன்னி
நதியுடைக்கோன் முன்னோர் நரை முதியாணிழல்
வதிகின்றேமென்ன வந்தான் வந்தான்"—70

எனவும் கூறியுள்ளார்கள். இதனை மீண்டும் நிரூபிக்க, தஞ்சை நாட்டாண்மைக் கழக பனகால் கட்டடத்திற் கருகிலுள்ள அழகிக்குளம், அழகித்தோட்டம் என்ற இடங்கள் இம்முதியளாகிய அழகி என்பாளுக்குச் சோழ அரசனால் கொடுக்கப்பட்ட இடங்களென்றும், அவை சமீபகாலம் வரை அரசியலார் பைமாஷ் கணக்குகளிலும் அப்பெயர்களாலேயே வழங்கிவந்தன வென்றும் தெரிகின்றது. வேறொன்று: ஓர் இடைச்சி இக்கோயில் விமானத்திற்குதவிய இக்கல்லின் நிமித்தமாக இராசராசன் அவள் பக்தியை வியந்து அவள் ஊரில் ஒரு கோயிலைக் கட்டுவித்தான் எனவும், அவ்வூர் அப்போது "இராசராசேச்சுரம்" என்று அழைக்கப்பெற்று, பிற்காலத்து மருவித் **தாராசுரம்** என்றாயிற்றென்பதும் கூறுவர். தாராசுரம் என்பது கும்பகோணத்துக்கு 3 மைலருகில் ஒருசிற்றூராக உள்ளது. இக்கோயில் வரலாறு பின் குறிக்கப்பட்டிருப்பது காண்க.

**கோயிலிற் காணும் திருமேனிகள்.**

இராசராசனுடைய அளவுகடந்த சைவப்பற்றும் விசாலமான சமய நோக்கமும் இப்பெரியகோயில் விமானங்களிலும், மற்றும் பல பாகங்களிலும் மலிந்து கிடக்கும் சைவ வைணவ

புரான சம்பந்தமான சிலைகள், சிற்பங்கள் ஆகிய இவற்றால் அறிவுறுத்தப் பெறுகின்றன. திருக்கோயிலின் நாற்புறமும் உயர்ந்த மதில்களின்மேலிருந்து விழுந்தும், பிறர் எடுத்துப் போனவைபோக எஞ்சிநிற்கும் 343 நந்தி உருவங்களும் இதனையே வலியுறுத்துவன. கோயில் விமானத்தின் தென்புற மதில் பக்கத்தில் சோழவீரர்களுடைய உருவங்களும், பிள்ளையார், திருமால், பிச்சாடனர், சூலதேவர், தக்ஷிணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர் சிலைகளும், மேல்பக்கத்தில் லிங்கோத்பவரும், அர்த்த நாரீசுவரரும், வடபாகத்தில் கங்காதரர், கலியாணசுந்தரர், மகிஷாசூரமர்த்தனி திருவுருவங்களும் வனப்புடன் உள்ளன.

இன்னும், இராசராசன் சமயப்பற்றுடன் உணர்வு கலந்த கலாரசிகன். தில்லைத்தாண்டவமூர்த்தியின் ஒப்பற்ற பக்தன். இறைவனின் எழுவகை ஆடல்களில் ஈடுபட்டவன். ஆகவே, இறைவனின் தாண்டவ 108 கரணங்களை, இக் கோயில் இரண்டாம் தளத்தின், உட்பாகத்து அடிவரிசையில் அவைகளை சிற்பமாகச் செய்ய ஏற்பாடுசெய்தான். இப்போது அவைகளில் எண்பத்தொன்றேதான் காண்பதாகின்றன. எக்காரணம் பற்றியோ 82-ஆவது ஆரம்பிக்கப்படவில்லை. 108ம் பூர்த்தியாகவுமில்லை. எஞ்சிய 81ம், இறைவனே சதுர்புஜங்களுடனும், மானுடவும், மழுவாடவும், யக்ஞோபீதத்துடனும் ஆடும் தாண்டவம் கலா ரசிகரும் கண்பெற்ற பயனுடையோரும் பார்க்கத்தகுந்தவையாக உள்ளன.[2]

மற்றும், திருச்சுற்றுமாளிகையின் தென்பாகந் தவிர மற்ற பாகங்களில் மகாலிங்கங்கள், நாககன்னிகைகள், சமயகுரவர் படிமங்கள் முதலியவை பிரதிட்டித்தும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்குத் தனித்தனி ஆலயங்கள் எடுப்பித்து இருப்பதும் காணலாகும். மற்றும் கோயிலின் தெற்கு விக்கிரமன் திருவாயிலின் கீழ் பாகத்தில் பௌத்த உருவச் சிலைகள் சில காணப்படுகின்றன. இராசராசனது கல்வெட்டுக்கள் சிலவற்றால் அவன் கடார தேசத்து[1] அரசனை மாரவிஜயோத்துங்க வர்மனால் நாகையில் எடுக்கப்பட்ட **சூடாமணி விகாரம்** எனப்பட்ட பௌத்தப் பள்ளிக்குப் பல நில தானங்கள் செய்தமையும், சமணர்களுக்கும், பௌத்தர்களுக்கும் ஒரேவிதமாகப் பல நில

(1) Kedah in Malaya. (2) V. T. N. R. in the *Swadesamitran* Annual for 1956.



நன்றி
இந்திய தொல் பொருள்
ஆராய்ச்சிக் கழகம்.


முதல் இராசராசனும் கருவூர்த் தேவரும்
[தஞ்சைச் சிற்பம்]

தானங்களை இறையிலியாகத் தந்தமையும் காணக்கிடக்கின்றன. வடகோபுரத்தின் கீழ்பாகத்தில் மற்றைய மூன்று உருவச்சிலைகளுடன் சிரசளவில் ஒரு ஐரோப்பியனுடைய உருவமொன்றும் காணப்படுகின்றது. அதைக்குறித்து பல அபிப்பிராயங்கள் வழங்குகின்றன.

விமானத்தை அமைத்த சிற்பி, இச்சோழ தேசத்தை முன்னும் பின்னுமாக அரசாளும் வர்க்கத்தாரை மேற்காட்டிய உருவங்களாற் குறிப்பிட்டிருக்கின்றாரென்பர். அன்றியும் பல கோயில்களை நிருபணஞ்செய்த நாயக்கர் பரம்பரையில், பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த இரகுநாத நாயக்கர் அவையில் செல்வாக்கு மிக்குயர்ந்த டேனிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் தலைவனான ரோலண்ட் கிரேப் என்பானது உருவம் என்பது மற்றொன்று; இனியும், இச்சிலையானது பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவுக்கு வந்துபோன சிறப்புவாய்ந்த மார்க்கோபோலோ என்ற வெனீஸ் பிரயாணியின் உருவமென்பர் மற்றொரு சாரார். கோயில் கட்டிய காலத்தே மேனாட்டு வர்க்கத்தார் சோழ தேசத்தில் தோன்றியிருந்தனராக அவர்களின் ஞாபகமாக குறிக்கப்பட்டிருப்பினும் இருக்கலாம். எப்படியாயினும் அதன் உண்மை சரிவரத் தெரிந்திலது.

இக்கோயில் பிரதிட்டையைப்பற்றி ஒரு வரலாறு உள்ளது. அது வருமாறு: கோயிற்றிருப்பணி முடிந்து அருள் திருமேனியாகிய சிவலிங்கத்தினைக் கோயிலில் எழுந்தருளச் செய்து ஆதிசைவரைக் கொண்டு மருந்துசாத்திப் பந்தனம் செய்வித்தபொழுது, ஆவுடையார் உருவம் பெரியதாயிருந்தமையின், மருந்திளகிப் பந்தனமாகாமற் போயிற்று. அது கண்டு இராசராசன் வருந்தி நிற்கையில், "கருவூர்த்தேவர் ஈண்டு வரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்" என விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக்கேட்ட அரசன் கவலை நீங்கி, அப்பெரியார் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்? என அங்கிருந்தாரை உசாவிய போது, தம் உருமாறி அவ்விடத்தில் இருந்த போகநாதரென்னும் யோகியார், 'அரச! கவலற்க; கருவூர்த்தேவரை இங்கு வரவழைப்போம்' என்றுரைத்து ஓலை எழுதித் தம் தவவன்மையால் அதனைக் காக்கையின் காலிற் கட்டி விடுத்தனர்.

அவ்வோலையைக் கண்ணுற்ற கருவூர்த்தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போகநாதரது ஆணைபெற்றுக் கோயிலுட் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வனே நிறுத்தித் தம் வாயிற்றம்பலத்தை மருந்தாக உபயோகித்து இறுகப் பிடித்திட, பொன்னை உருக்கி வார்த்ததுபோலப் பந்தனமாயிற்று. அப்போது அரசனும் பிறரும் 'அன்பர்தம் செய்கையை யாரே அறிகுவர்' என ஆச்சரியமெய்தி மகிழ்ந்தனர் என்பது.[1]



இராசராசேச்சுரம் உள் தோற்றம்.

தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளிய சுவாமியின் பெயர் 'இராசராசேச்சுர முடையார்' என இராசராசனால் வழங்கப்பட்டுளது. கல்வெட்டுக்கள் முழுதுமே அவ்வாறு கூறுகின்றன. இக்கோயில் விமானம் தக்ஷிணமேரு என முற்கூறப்பட்டது. இதில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனுக்குத் "தக்ஷிணமேருவிடங்கர்", "ஆடவல்லான்" எனவும் பெயர்கள் வழங்கின. அக்காலத்தில் சைவ சமயஉணர்ச்சி சிதம்பரம் கோயில் பற்றி எழுந்தமையாலும், தில்லை நடராசருக்கு ஆட

(1) இவ்வரலாறு கருவூர்ப்புராணம், கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கத்துக் காணப்படுகிறது. இதன் உண்மை அறிதற்பாலது. இதற்குக் கல்வெட்டில் ஆதாரம் இல்லை.



நம்பி ஆரூரர்—நங்கை பரவையார்

(இராஜராஜன் காலத்துத் திருமேனிகள்)

வல்லான் என்பது ஒரு பெயராதலாலும், இக்காரணங்கள் பற்றியே இப்பெருமானுக்கும் அப்பெயரிட்டனன் என்பர். சிவமூர்த்தங்கள் பல காணப்படினும் அம்மையின் பெயரெல்லாம் வெவ்வேருக இல்லாமல் **உமாபரமேச்வரி** என ஒன்ருகவே இருக்கின்றது. பிற்காலத்தில் இக்கோயில்கொண்ட இறைவனுக்குத் திருநாமம் **பெருவுடையார்** எனவும், இறைவிக்குப் **பெரியநாயகி** எனவும், அவை வடமொழியில் **பிருகதீசுவரர், பிருகந்நாயகி** எனவும் வழங்கி வருகின்றன.[1] ஸ்ரீ பெருவுடையார் அருள் திருமேனி இலிங்கசொரூபமானது. நருமதை நதி தீரத்திலிருந்து இங்கு இராசராசனுல் கொணரப்பட்டதென்பர். அதற்கு அமைந்த மகாத்மிய ஆதாரமும், சித்திரைவிழா அஷ்டகொடியன்று இராசராசன் தஞ்சை அறுபத்துநான்கு மனே வேளாஞ் செட்டிமார்களை அழைப்பித்துச் சிறப்பிக்கும் சம்பிரதாயமும் குறிப்பிடற்பாலன.

இக் கோயிலில் பிற பல சிவ மூர்த்தங்களேயல்லாமல், விஷ்ணு திருமேனியும், நம்பி ஆரூரர், நங்கை பரவையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்த அடிகள், சிறுத்தொண்டர், சண்டேசுவரர் முதலிய அடியார் திருமேனிகளும், இராசராசன், அவன் பட்டத்தரசி லோகமாதேவியார் படிமங்களும் பிரதிட்டை செய்விக்கப்பட்டிருந்தன.

**கோவில் நிபந்தங்கள் :**

இராசராசன் இப்பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் மிகப்பலவாம், கோயிலுக்கு வேண்டிய அமைப்புக்களில் ஒன்றனேயும் குறைவுபடாது செய்வதையே அப்பெருமான் தனது வாழ்வின் பயனுகக் கொண்டான். தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த பொருள்கள் யாவற்றையும் அக்கோயிலுக்கே அளித்தனன். நானுவித ஆபரணங்களும், பாத்திரங்களும், நெல்விளையும் கிராமங்கள் பலவும், தினவிதிகளுக்கும், விழாக்களுக்கும் வேண்டிய அளவு பொன்னும், பொருளும், கடவுட்குச் சூட்ட நறு மலரும், நாடோறும்

---

(1) சிற்றம்பலத்திற்கு சிதம்பரம் என்றும் குடுமிநாதருக்கு சிகரநாதர் என்றும், பெத்தாரண்ணன் என்னும் தெய்வப்பெயரை ஆபத் உத்தாரணன் என்றும், திருமறைக்காட்டை வேதாரண்ணியம் என்றும், மயிலாடுதுறையை மயூரமென்றும், குரங்காடுதுறையை கபிஸ்தலம் என்றும், தூய தென்மொழிப் பெயர்களையெல்லாம் வடமொழிப் பெயராக மொழி பெயர்க்கப்பட்ட வழக்கு அறியற்பாலது.

பெறத் தந்துவந்ததோடு தீபங்களுக்கு நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு, நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறத்தந்து என்றைக்கும், யாவும், மிகவும் தாராளமாகத் தருமாறு வரும் படி யமைத்துத் திருப்பணியை நிலைபெறச்செய்தான்.

இக்கோயிலில் சிறுகாலை, உச்சம்போது, இரவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது.

> "ஸ்ரீராஜராஜீச்வரமுடையார் ஆடி யருளும் திருமஞ்சன நீரிலும் தண்ணீர் மீதிலுமிட பெருஞ் சண்பக மொட்டுக்கும், ஏலவரிசிக் கும், இலாமச்சத்திற்கும்"

என்னும் சாசனப்பகுதியால், "பெருஞ் சண்பக மொட்டு, ஏலவரிசி, இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். பழவரிசியாற் சமைத்த பேர்னகம், நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, கறியமுது, பருப்பமுது என்பவற்றுடன், திருவிழாக்காலங் களில் பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் என்ற இவற்றோடு செய்த அப்பக்காய் கறியமுதும், பொரிக் கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப் பழம், புளி, தயிர், நெய், கடுகு இவைகொண்ட புளியங்கறியமு தும், புளியிட்டடுங்கறியமுதும் நிவேதிக்கப்பட்டன. அச் சமயத்தில் நாற்பத்தெண்மர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய, ஆரியமும் தமிழும் பாடுபவர் பாட, கனபாடிகள் சாமகானம் செய்திட, மத்தளம், பக்கவாத்தியம், வீணைகளுடன் காந்தர்வி கள் இன்னிசை பாடி நடனம் செய்தனர். மொரலியம், வங்கி யம், பாடவியம், உடுக்கை, முத்திரைச்சங்கம், உவச்சுப்பறை சகடை முதலிய முழங்கின. நெய்கொண்டு திருவிளக்குகள் எண்ணிறந்தன எரிந்தன.

இராசராசேச்சுர முடையாருக்கு இராசராசசோழதேவ ரால் வைரம், வைடூரியம், கோமேதகம், முத்து முதலிய நவரத் தினங்களாலாகிய ஆபரணங்கள், பொன், வெள்ளியாலாகிய பாண்டங்கள் பல, பொன்னாற்செய்து 'சிவபாதசேகரன்' என் றும், 'ராசராசன்' என்றும் செதுக்கிய காளங்கள், திருப்பள் ளித்தொங்கல் மகுடம், தவளச்சத்திர மகுடம், திருக்கொற்றக் குடை மகுடம், ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி

முதலியவும், ஸ்ரீமுடி, வீரப்பட்டம், திருஉதரபந்தனம், திருவடிக்காறை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பை, தோடு, ராஜாவர்த்தம், திரள்மணிவடம், தாலிமணிவடம், ஸ்ரீசந்தம், முதலிய பொன்னுபரணங்களும், வடுகவாளி, முத்துமாத்திரை, ஏகாவலி, முத்தின் சூடகம், திருக்கால்வடம் முதலிய முத்தாபரணங்களும், கண்டநாண், புல்லிகைக்கண்டநாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, ஸ்ரீவாகுவலயம், பதக்கம், ரத்னவளையல், ரத்னகடகம், ரத்னமோதிரம், நவரத்னமோதிரம், பிருஷ்டகண்டிகை முதலிய ரத்னுபரணங்களும், பொன்னுலும் வெள்ளியாலும் செய்த ஓட்டுவட்டில், கலசம், குடம், தட்டம், குறுமடல், கிடாரம் முதலிய பரிகலங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[1]

கோயில் காரியம் பார்ப்பவரை ஸ்ரீ காரியம் பார்ப்பவர் எனவும், அவரை கண்காணிப்பவரை ஸ்ரீ காரியக்கண்காணி நாயகம் எனவும் அக்காலத்தில் அழைத்தனர். திருமுன்னர் தேவாரத்திருமுறைகளை விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கைவாசிப்பான் ஒருவன், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஐம்பதின்மர் இருந்தனர். இவர்களையன்றி கனபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசை பாடுநரும் இருந்தனர். இராசராசன் பாடலிலும் ஆடலிலும் மிக்க ஆர்வமுடையவன். **இராசவித்யாதரன்** எனப்பெயரும் அவனுக்குண்டு. இவ்வாலயத்துக்குரிய பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும், சோழநாட்டுப் பிறகோயில்களினின்றும் பதியிலார் நானூறு பேர்

---

(1) S. I. I. Vol. II. ii. pp. 203—217 also Ins. 69 of 1888 சோழர்காலத்து அணிகலன்களின் அட்டவணை என விரிவாகக் காணலாம். ஆபரணங்களைக் கூறுமிடத்து அரக்கு செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிப்பித்துப் பெற்றிருப்பின் அவை இத்துணை, இவ்வளவு நிறையுடையன, இன்னின்ன தன்மையுடையன என்றுரைத்து விலை இத்தனை காசு என்றும் கண்டிருப்பது வியக்கத் தக்கது. இரத்தினங்களைக் குறிக்குமிடத்து, பொறிவு, முறிவு, காகபிந்து, ரத்தபிந்து என்ற இவ்விதங்களிலெல்லாம் அவை குறைவுபட்டன என்றும் காணக்கிடக்கின்றது. ஒருவித ஆபரணத்திற்கு ''சோனகச்சிடுக்கின்கூடு'' என்றிருத்தலும், சோனகன் என்ற பதம் அக்காலத்தில் அராபியர்களையுமே குறித்ததும், அக்காரணமாக 11-ஆவது நூற்றுண்டிலேயே, அராபியர் முதலிய அன்னியர் சோழ தேசத்திற்கு வந்தமையும் குறிக்கின்றது.

களைக்கொணர்ந்து இராசராசேச்சுரத்தை அடுத்து வடபுறத்தினும் தென்புறத்தினும் தளிச் சேரிகள் என்றழைக்கப்படும் இருநீண்ட வீதிகளை அமைத்து அங்கு இவர்கட்காகத்தனித்தனி மனைகள் கட்டிக்கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் நூறு கலம் நெல்விளையும் ஒவ்வொரு வேலி நிலமும் தந்து அவர்களைக் கோயிற்பணியிற் புகுத்தியாதரித்தான்.[1] அவர்களுள் ஆடல் பாடல்களில் தேர்ச்சியுள்ளார் பலர் இருந்தனர். அவர்களுள் பாடுவோர் காந்தர்விகள் எனவும், அவர்களுக்கு பாடங் கற்பித்தவர் காந்தர்வர் எனவும் அழைக்கப்பட்டனர். பின்னவர் எழுபத்தைவராவர். மற்றும் கொட்டி மத்தளக்காரர், பக்க வாத்தியர், வீணைவாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கு முதலிய இசைக்கருவி முழக்குவோர் என்னும் வகையினர் பலர் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறை விசேடங்களுமிருந்தன. மற்றும், இக்கோயிலில் பண்டாரிகள் (பொக்கிஷதார்) கணக்கர், மெய்காப்பார், பரிசாரகம் செய்பவர், திருவிளக்கிடுவார், திருப்பள்ளித் தொங்கல்பிடிப்பவர் (மாலைக்கட்டுவோர்), வண்ணமிடுவோர் (கோலமிடுவோர்), சோதிடர், தச்சர், தட்டார், கன்னர், குயவர், தய்யார் (தையற்காரர்), நாவிதர், வண்ணார் முதலியோர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுக்கு பரம்பரையாக வேலை கொடுக்கப்பட்டுவந்தது. இவர்கள் யாவரும் சம்பளமாகப் பெற்றது நெல்லாகும்.


சோழர் முன்னோனாகிய முசுகுந்தச் சக்கரவர்த்தி பிரதிட்டை செய்த

"ஆரூர்த்தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சியலகில் புகழ் பெறு ராசராச மன்னர்."

தஞ்சையில் கோயில் அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த் தியாகேசரை நாடோறும் சென்று வழிப்பட்டு வந்ததனால், தஞ்சைக் கோயிலை அமைத்தபொழுது திருவாரூர்க் கோயிலினுள்ள ஏற்பாடுகளையே பிறகு கைக்கொண்டதாகத் தெரிகிறது. [2] இக்கோயில் வழிபாடு முறைகளை சைவ ஆகம பண்டி

(1) S.I.I. II. pp. 259-309. இராசராசனது 66-ஆவது சாசனம்.

(2) இதன் உண்மை இப்பொழுது காணப்படுவனவற்றுள், "திருவாரூர்க் கோயிலில் தியாகேசர் ஸ்தாபிக்கப் பட்டிருப்பது போலத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் தியாகேசர் ஸ்தாபிக்கப்



நன்றி :
டாக்டர் ஆ. ஜோதி
பாண்டியன்

நந்தி மண்டபம்
தஞ்சை இராசேச்சுரம்.

தர்களைக் கொண்டு நடத்தியதாகவும், அவர்கள் சைவாச்சாரிய சர்வசிவ பண்டிதர்[1], ஈசானசிவபண்டிதர் முதலானவர்களென்றும் தெரிகின்றது. இத்தலத்துக்குரிய ஆகமம் **மகுடாகமம்**[2] இத்தலத்திற்குரிய தீர்த்தம் சிவகங்கை, அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் கூறியுள்ள **தஞ்சைத் தளிக்குளம்** இதுவே என்பர். இதனடுவே சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளப் பெற்றுள்ளது. **தேரைத் தீர்த்தம்** எனப்பட்ட குளமொன்று இப்பொழுதுள்ள நடராசர் திருமண்டபத்திற்கடுத்து இருந்தது எனவும், இது இப்போது மூடப்பெற்று ஒரு கிணற்றளவே அவ்விடத்தில் இருப்பதாகவும், சரபோஜி மன்னர் கல்வெட்டு[3], ஒன்று குறிக்கின்றது.

இவ்வாலயத்திலுள்ள பெரிய நந்தி ஒரே கல்லில் செதுக்கப் பெற்று இறைவன் சந்நிதிக்கு எதிரே உயர்ந்ததோர் மேடை

---


பட்டிருக்கிறார். திருவாரூர்த் தியாகராசாவுக்கு விடங்கரென்று பெயர் இருப்பது போலத் தஞ்சையிலும் விடங்கரென்றே பெயர். திருவாரூரில் தியாகராசாவுக்குரியது அஜபா நடனம். தஞ்சையிலுமஃதே. திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவதுபோல தஞ்சையிலும் வஸந்தோத்ஸவம் 18 நாள் நடைபெறுகின்றது. திருவாரூரில் தியாகராஜாவுக்குரிய சுத்த மத்தளம், எக்காளம் தஞ்சையிலும் உள. திருவாரூரில் தியாகராஜா எந்தத் தினங்களில் எவ்வாறு புறப்படுகின்றாரோ அவ்விதமே தஞ்சையிலும். திருவாரூரில் தியாகராஜாவுக்குப் பூஜை நடந்தபின் மூலலிங்கத்துக்குப் பூஜை, தஞ்சையிலும் அவ்விதம். திருவாரூரில் உற்சவத்தில் குறவஞ்சி நாடகம் நடைபெறும்; தஞ்சையிலும் குறவஞ்சி நாடகம் உற்சவகாலத்தில் நடைபெற்று வருகிறது. திருவாரூரில் சிலகாலமாய்க் குறவஞ்சி நடைபெறுவது நழுவியிருப்பதாகத் தெரிகிறது. திருவாரூரில் சுவாமி புறப்படும்போது சுந்தரமூர்த்திகள் விக்கிரகம் முன்கொண்டு போவது வழக்கம், ஆனால் இராசேந்திரன் காலத்தில் அந்த தானத்தில் தன் பிதாவாகிய இராசராசனது விக்கிரகத்தைக்கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது.''—K. S. ஸ்ரீனிவாசப்பிள்ளையவர்கள், **தமிழ் வரலாறு** ii, 162.

(1) S.I.I. II. p. 109 ஆரியதேசம், மத்ய தேசங்களிலிருந்து கொணரப்பட்ட சைவ ஆச்சார்யர் சர்வ சிவ பண்டிதருக்கும், அவர் சிஷ்யர், மாணுக்கர்களுக்குமாக ''கோவிலில், ஆடவல்லானெனும் மாக்காலால் உள்ளூர் பண்டாரத்தெ நிரைச்சளவாக இரண்டாயிரக் கல நெல்லு ஆட்டாண்டு தொறும் பெறத்திருவாய் மொழிந்தருள'' என்று இராசேந்திரன் நிபந்தம் ஏற்படுத்தியிருப்பது காண்க.

(2) Grantha MS. No, 1526 of Tanjore Saraswathi Mahal Library, Burnell's List No. 11428.

(3) Ins. 419 of 1924.

மண்டபத்திலுள்ளது. இந்தியாவிலுள்ள பெரிய நந்திகளுள் இஃது இரண்டாவதாகும்[1]. பன்னிரண்டடி உயரமும் பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகால் அடி அகலமுமுடையது. இது கால அளவில் வளர்ந்து வந்ததாகவும்,



**இராசராசேச்சுரமும் நந்தி மண்டபமும்.**

அதனைத் தடைப்படுத்த முதுகின் பின்புறத்தில் ஒரு ஆணி அறைந்ததாக ஒரு கதையும், அதன் வளர்ச்சிக்குக் காரணமாக அதன் உள்ளிருந்த தேரை ஒன்றை எடுப்பித்து தேரையைத் தேரைத் தீர்த்தத்தில் சேர்ப்பித்தாரென ஒரு கதையும், இவற்றைப்போல மற்ற வரலாறுகளுமுண்டு. இந்நந்தியானது திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூருக்கு அணித்தான பச்சைமலையினின்றும் கொணரப்பட்டதென்பர். இந் நந்தி மண்டபத்தூண்களில் தஞ்சை நாயக்க அரசர்களின் பிரதிமைகள் செதுக்கப்பட்டிருப்பதால் இம்மண்டபம் அவர்களால் கட்டப்பட்டதாகும்.

ஆலயத்திலுள்ள சிவசொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். அவர் பெயராலேயே கோயில்களின் வரவு செலவு கணக்குகள் எழுதுவதும், விலை கொள்

---

(1) முதலாவது அநந்தப்பூர் ஜில்லா, இந்துப்பூர் தாலூகா, லேபாக்ஷி, வீரபத்திர சுவாமி கோயிலிலுள்ளதாகும்.

வதும், விற்பதும் நடைபெற்று வந்தன. ஆதலால் முதல் பிராகாரத்தில் அவருக்கு மாத்திரமே இறைவன் சந்நிதியை அடுத்துக் கோயில் கட்டுவது முற்கால வழக்கம். அதற்கிணங்க இராசராசனும் பிராகாரத்தில் சண்டேசுவரருக்கு ஆலயம் கட்டுவித்து இக்கோயிலைச் சார்ந்தவை யாவும் அவர் பெயரால் நடைபெற ஏற்பாடு செய்தான்[1]. இச்சந்நிதியையும், கோயிலின் கீழ்பக்கமுள்ள இராசராசன் திருவாயில் கோபுரத்தையும் இராசராசன் தனது இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் முந்நீர் பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்றதற்கு முன்பே கட்டியிருந்திருக்க வேண்டும். இராசராசேச்சுரர் கோயிலையடுத்து இச் சண்டேசுவரர் கோயில் மட்டுமே இம் முதற் பிராகாரத்தில் அந்நாளில் கட்டப்பட்டதாகும். மற்ற சந்நிதிகள் அதற்கடுத்த பிராகாரங்களில் இருந்திருத்தல் கூடும். பிற்காலத்தில், அவையாவும் இம் முதற் பிராகாரத்துள் கொணர்ந்து கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.




உமா பரமேசுவரி சந்நிதி

உமாபரமேசுவரி அம்மையாரின் கோயில் இவ்வாலயத்திற்கு வடபுறத்தில் உள்ள சிவகங்கைத் தோட்டத்தில் முன்னம் இருந்திருந்து, பின்பு ஒரு நாயக்கர் காலத்து இடிக்கப்பட்டும்,

(1) இம்முறை விக்கிரம சோழன் கி. பி.—1118 வரை வழக்கிலிருந்து பின்னர் கைவிடப்பட்டதென்று தெரிகிறது.

மற்றொரு நாயக்கர் காலத்து இப்போதிருக்கும் தானத்தில் **உலகமுழுதுடையாள்** என்ற திருநாமத்துடன் அமைக்கப் பெற்றதென்றும்[1]; இதன் "மூர்த்தியம்மன்" மகாமண்டபம் மல்லப்ப நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டதென்றும் தெரிகிறது.



ஆறுமுகப்பெருமான் சந்நிதி.

கோயிலின் வடமேற்குப் பிராகாரத்திலுள்ள **ஆறுமுகப் பெருமானின் கோயில்** தென்னிந்தியச் சிற்பவேலைகளுள் சிறந்த தொன்றும். இதன் சிற்ப நுட்பங்களைக் கவனிக்குமிடத்து இது கட்டப்பெற்ற காலம் 16-17-வது நூற்றாண்டாகும்[2]. இக்கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் ஒன்றுமே இதனைப் பற்றிக் கூறவில்லை. இக்கோயில் தஞ்சையில் ஆட்சிபுரிந்த நாயக்கர் காலத்ததென்றும், அக்காலத்தில் இக்கோயிலில் சிற்பங்களை அமைத்த சிற்பி ஒருவன், தான் தன் தொழிலில் ஆழ்ந்து வேலை செய்துகொண்டே தன் ஏவலாள் சிறுவனிடம் அடைக்காய்க்குக் கை நீட்ட, அவன் அங்கில்லாதிருக்கவும், அத் தருணத்தில் சிற்பியின் வேலையைக் காணவந்த தனது அரசனது

---

(1) *Vide* S.I.I. Vol. II. pp. 247-8. also Ins. 62.

(2) 16-வது நூற்றாண்டதென்பர் புதுச்சேரி டுவே. துப்பராய் *Vide*, Archaeologie Sud de l' Inde. I : architecture.

கையால் கொடுக்கப்பட்ட அடைக்காயை சுவைத்தவளவில் உண்மை தெரிந்து, தனது அறியாத தவறுக்குப் பரிகாரமாகத் தன் திறமையெல்லாம் விளங்க இக்கோயிலை நிரூபணம் செய்தானென்ற ஒரு கதையும் உண்டு[1]. ஆறுமுகப் பெருமானின் அருட்திருமேனி மிக்க வனப்புடையது. மயிலும், ஆறுமுகக் கோலமும், திருவாசி உள்பட ஒரே சிலையில் அமைந்துள்ளது. அவரைப்பற்றி அருணகிரியார் திருப்புகழில் மூன்று பாக்கள் பாடியுள்ளார். அவற்றை அனுபந்தத்தில் காணலாம். இக் கோயில் யானை குதிரைகள் பூட்டிய இரதம் போன்று அமைத் திருத்தலும் சிறப்பாகும்.


பரிவாராலயத்துப் பிள்ளையாராகிய சுற்றுக்கோயிற் பிள்ளையார் மேலைச்சுற்றுலயத்து வீற்றிருப்பதால் இற்றை நாளில் காணப்படும் **கணபதி கோயில்** தஞ்சை மகாராட்டிர மன்னராகிய இரண்டாம் சரபோஜி கி. பி. 1803-இல் எடுத்தனர் என்பர். கோயில் தென்னண்டைச் சுற்று லயத்தில் செதுக்கியுள்ள கல்வெட்டு[2] ஒன்றால் கணபதி கோயிலை எடுப்பித்தும், பழைய கணபதி திருவுருவத்தை எடுத்துப் புதியதொன்றைப் பிரதிட்டித்தும், தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்குப் படிகள் எடுப்பித்தும், பெருவுடையாருக்கு வெள்ளி யால் ரிஷபம், யானை, மான் முதலிய வாகனங்களும், பல பிற ஆபரணங்களும் கொடுத்தும், கோயிலுக்குத் தளவரிசை போட்டும் பல திருப்பணிகள் செய்தனரென்றும் தெரிகிறது.

கோயிலின் உட்பிராகார வடகிழக்கில் காணப்படும் நடராசப் பெருமானின் சந்நிதியும், பிற்காலத்ததே. நாற்புறமும் திருமதில்களுக்கடுத்த திருச்சுற்று மாளிகைகள் இராசராசன் ஆணையின்பேரில் கட்டப்பெற்றன. அவ்வரசர்பிரான் தன் சேனாதிபதியும், திருமந்திரவோலை நாயகனுமான கிருஷ்ணன் ராமனை மும்மடிச்சோழ பிரம மாராயனைக்கொண்டு மேற் புறத்தையும் தெற்கில் உள்ள பிராகாரத்தையும் கட்டினானென்றும், மற்ற இருபுறங்களிலுமுள்ள திருச்சுற்றாலைகளையும் அகன்ற உள்கோபுரத்தையும் அரசனே முற்றுவித்தானென்

(1) இக்கர்ணபரம்பரை வரலாறு மதுரை நாயக்கர் வமிசத்துத் திருப்பணிகள் பெரும்பாலானவற்றிற்குச் சொல்வது வழக்கமாயுள்ளது.

(2) Epi. Rep 1925 ; Ins. 420, 423 of 1924. Ins. 30 of 1927.

றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேற்கு, வடக்கு, திருச்சுற்றாலைகளிலுள்ள இலிங்கங்கள் மகாராட்டிர மன்னர் காலத்துப் பிரதிட்டை செய்யப்பெற்றன வென்பர். அதனிடையே திக்குப்பாலகர் எண்மருக்கும் அவரவர்க்குரிய திசைகளில் சிறிய சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் அவற்றின்மீது கற்கலசங்களே காணப்படுகின்றன. ஆனால் அவைகளுக்காக பொற்றகடு சுருக்கின செப்புக்குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசான சிவபண்டிதரால் கொடுக்கப்பட்டன என்பது ஒரு சாசனத்தால் விளங்குகின்றது.



**கருவூரார் சந்நிதி, மேற்குப்பிராகாரம்**

இக்கோயில் மேலைப்பிராகாரத்தில் வேம்பும் மந்தாரையும் நிற்கின்ற கிழக்கு நோக்கிய கருவூரார் மேடை ஒன்று புராதனமாக இருந்துவந்தது. சற்றேறக்குறைய ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் கருவூரார் கோயிலென அவ்விடத்தில் ஒரு சிறு கோயிலெடுத்து, அங்கே யோகியர் உருவச்சிலையமைத்து, நாடோறும் பூசையும், வியாழன்தோறும் சிறப்புறு பூசனைகளும் புரிந்து வழிபட்டுவருவதை யாவரும் காணலாம். இவரே இராசராசன் காலத்து இங்கே வந்துதவிய சித்தர் பெருமானாதல் வேண்டும். இவரைப்பற்றிச் சித்தர் நூல்களில் விரிவாகக் காணலாம். ஆதலின், இக்கோயிலில் இப்பெரியார்க்குத் தனியிடம் உண்டாய தொடர்பு உணரற்பாலது, மற்றும் கருவூர்ப் புராணத்



நன்றி
இந்திய தொல்பொருள்
ஆராய்ச்சிக் கழகம்.

கருவூர்த் தேவரும், முதல் இராசராச சோழனும்
(தஞ்சை இராசராசேச்சுரம் சோழர் கால ஓவியம்)

தில் கூறப்பெற்றவர் திருவிசைப்பாப் பதிகங்களின் ஆசிரிய ரான கருவூர்த் தேவரெனவும், அவர் 'இராசராசேச்சுரம்' 'கங்கைகொண்டசோழீச்சுரம்' ஆகிய இவ்விரு பெரிய கோயில் களின் மீதும் பாடல்கள் இயற்றினமையின் இராசராசன், இராசேந்திரன் காலத்தில் இருந்தவர் ஆவர்.

அக்காலத்தே, இத்திருவிசைப்பா ஆசிரியர் இறைவன் கோயிலை 'இஞ்சிசூழ் தஞ்சை யிராசராசேச்சரத்திவர்க்கே,' எனக் குறித்திருப்பதால் இக்கோயில் நகரின் மத்தியில் அமைந் திருத்தல்வேண்டுமென்றும் தோன்றுகிறது. கால இயல்பாலும், அரசியல் குழப்பத்தாலும், பிற்காலத்தில் நகரம் குன்றி இரு கூறுக்கப்பட்டதென்பதும் புலப்படும். இக்காலந்தொட்டே கோயிற் சிறப்புக்களில், மற்ற நகரவழக்கத்திற்கு மாறாக இறைவன் கோயிலைச் சுற்றிவராமல் நகரை வலம்வரும் ஏற் பாடு உண்டானதென்பதை அறியலாம்.

இத்தலத்திற்குப் **பிரகதீசுவர மகாத்மியம்**, **சமீவனக்ஷேத் திர மகாத்மியமென்**னும் வடமொழிப் புராணங்களும் மேற் கூறிய **திருவிசைப்பா** திருப்பதிகமும், **திருப்புகழில்** மூன்று பாக் களும், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய '**தஞ்சைப்பெருவுடையாருலா**' என்ற பிரபந்தமும் பிறவு முள்ளன.

இராசராசன் இப்பெரிய கோயிலை எடுப்பித்ததன் பய னுகக் குடிகள் அரசன்பால் மிக்க அன்புபாராட்டி அச்சோழன் காலத்தில் வைகாசிப் பெரிய விழாவில் '**இராசராசேசுவர நாடகம்**' என்னும் ஒரு நாடகத்தை இக்கோயிலில் நடத்தி வந்தனர். இவன் பேரன் இரண்டாம் இராசேந்திரன் ஆட்சி யின் நான்காம் ஆண்டில் இந்நாடகம் ஆடுவோனுக்கு ஆண் டாண்டுதோறும் நூற்றிருபதின் கலநெல் ஏற்பாடு செய்யப் பட்டதென ஒருகல்வெட்டு கூறுகின்றது. அக்காலத்தில் நட னங்களும், நாடகங்களும் அநேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்கமண்டபங்களிலேயே நடைபெற்றன. **திருவிசைப்பா** ஆசிரியர்.

"மின்னெடும் புருவத்திளமயிலனையார் விலங்கல் செய் நாடகசாலை,
யின்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை,"

எனக்கூறுவதால் நகரில் பல ஆடரங்கும் நாடகசாலையும் இருந் தன எனலாம். மற்றும் இசை நாடகங்களில் வல்ல நாடக

மய்யன், சாக்கை, கானபாடி, வாத்தியமாராயன் முதலியோரும் இருந்தனரெனவும் தெரிகிறது. இராசராசேசுவர நாடகம் வெகுகாலமாக வழக்கிலில்லை. தஞ்சையில் பிற்காலத்து அரசாண்ட சரபோசி II மன்னர் காலமுதல், அம்மன்னர் மீது கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்' சித்திரை ஆண்டுவிழாவில் அஷ்ட கொடி விழாவன்று நடைபெற்று[1] வந்து சமீபத்தில் கைவிடப்பெற்றுள்ளது. (விளக்கம் அடுத்த பக்கம் காண்க.)

**கோயிற் சிறப்புகள் :**

சோழர் காலத்தில் மாதந்தோறும் திங்கள் விழாவென இராசராசன் பிறந்தநாளாகிய சதயநாள் விழா பன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாள் ஒன்றும், ஆகப் பதின்மூன்றும் நிகழ்ந்தன. இம்மாதவிழாக்களன்றி ஆண்டுவிழாவாக வைகாசிப் பெரிய விழாவும் நடைபெற்றது. பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும், ஆடவல்லான் எழுந்தருளும் நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். அஃது ஒன்பது நாள் நடைபெற்றது. பின்பு திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவதுபோல இவ்வாட்டை விழா பதினெட்டுநாளாகச் சித்திரையில் நடைபெற்று வருகிறது. மற்றும் வசந்தவிழா, திருவாதிரை முதலிய சகல விழாக்களும் நடைபெறுவன. 1934-ம் ஆண்டுமுதல் இராசராச சோழனின் பிறந்த தினமான திருச்சதய விழாவும், இக்கோயிலில் மறுபடியும் தேவஸ்தானத்தாரால் தொடங்கப்பெற்று ஐப்பசிதோறும் சிறப்பாக நடந்து வருகிறது.

இராசராசேச்சுரத்திலுள்ள கல்வெட்டுக்கள் பலவாகும். இராசராசன் காலத்தவை

> "நாம் குடுத்தனவும், நம் அக்கன் குடுத்தனவும். நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் வெட்டுக"

என அவன் மொழிந்த முறைப்படி வெட்டப்பட்டுள்ளன. அவைகள், இராசராசனும், அவன் தமக்கை குந்தவையாரும் கொடுத்தன மட்டும் நடுவிமானத்திலும், பெண்டிரும் பிறரும்

---

(1) இந்நூல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களது குறிப்புரையுடன் திருப்பனந்தாள் காசி மடம் அதிபர் அவர்களால் 1932-இல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

நந்தவையாவும் மற்ற விடத்திலும் காணப்படுகின்றன. விமானத்தின் வடபுறத்தில், திருமஞ்சன நீர்வந்து விழும் இடத்திற்கருகில்

"ஏதத் விச்வச்ரேணி மௌலி"

எனத் தொடங்கும் கல்வெட்டே முதன் முதலில் வெட்டியதாகும். இவைகளையும் பிற்போந்தார் காலத்து வெட்டிய கல்வெட்டுகளையும் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்காவினர் அரிய குறிப்புக்களுடன் வெளியிட்டிருக்கின்றனர்.[1] இக்கோயிலுள்ள கல்வெட்டுக்களில் முதல் இராசராசன் காலத்தவை 64, முதல் இராசேந்திரனது 29, முதல் குலோத்துங்கனது 1, விக்கிரமசோழனது 1, கோனேரின்மைகொண்டானது 3, மற்றும் நாயக்க அரசர்கள், சரபோசி II மன்னன் முதலியவர்களுடையதுமான பல கல்வெட்டுக்களுமுண்டு.

---

(1) South Indian Inscriptions Vol. II Pts. 1-5.

* இக்குறவஞ்சி, நாடகவகையுள் சேர்ந்தது. இஃது அஷ்டகோடி குறவஞ்சியென்றும், குறவஞ்சிநாட்டியம் என்றும் வழங்கும். குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், அவளைக் குறவன் தேடிவந்து காணுதல் முதலிய செய்திகள் இதன்பால் அமைத்திருத்தலின் **குறவஞ்சி** எனப்பெயர் பெற்றது. இக்கூத்து எவ்விதம் நடத்தப்படுகிற தென்பது இவண்கூறற்பாலது. குறவஞ்சிக் கூத்தில் வாயால் பாடுகிறவர்களும், கருவியில் வாசிக்கிறவர்களும் கவந்துகொள்ளுகிறார்கள். நடனமாதர்கள் குறைந்தது நால்வர் குறவஞ்சிப் பாட்டுகளைத் தக்க இராகங்களில்பாடி ஆடுகிறவர்களது திறமைக்குத் தக்கபடி நடித்து மகிழ்விக்கின்றனர் குறவஞ்சி நாட்டியம் ஆரம்பிப்பான்

"பார்கொண்ட புகழினேங்கும் பதியெனுந் தஞ்சைமேவும்
தார்கொண்ட மார்ப னெங்கள் சரபோஜி மன்னன்மீது
சீர்கொண்ட தமிழினலே திகழ் குறவஞ்சி கூறப்
பேர்கொண்ட பிரகதீசர் பெறுகணபதி காப்பாமே,"

என்னும் காப்பும், மங்களமும் கூறியபின் கட்டியக்காரன், தோன்றி, சரபோஜி மன்னரின் வீரப்பிரதாபங்களைப் பற்றி உரத்தகுரலில் சொல்லி, அவ்வரசன் பவனி வருதலைக் கூறி, பின் நடைபெறவிருக்கிற இக்கூத்து யாதொரு விக்கினமின்றி முடிவுறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கும்படி அவன் சபையோர்களைக் கேட்டுக்கொள்ளுகிறான். பின்னர் தெருக்கூத்தில் நடைபெறுவதுபோல், ஒரு பெண், பிள்ளையார்

குறிப்பாக இராசராசன் கல்வெட்டுகளால் அக்காலத்தில் பலராலும் பிரதிட்டை செய்விக்கப்பட்டுள்ள திருமேனிகள், அவைகளுக்கு அவர்கள் கொடுத்த விளைநிலங்கள், திருப்பரிகலங்கள், திருச்சின்னங்கள், திருவாபரணங்கள் முதலியவற்றிற்கு விபரமும், எவரும் எவ்வித குறையும் கூறுவதற்கு இடமின்றி உப்பு முதல் கற்பூரம் வரைக்கும் வேண்டிய எல்லாப் பண்டங்கட்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடும் பிறவும் நன்கு உணரலாகும்.

---

வேடந்தரித்துக்கொண்டு சபைக்கு வந்து முன்னும் பின்னுமாக அசைந்து சாதாரண ஒரு நர்த்தனம் புரிவாள். அப்போது கட்டியக்காரன் அந்தப் பிள்ளையாரை நோக்கி இக்கூத்து யாதொரு இடையூறுமின்றி நடைபெறும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திப்பான். அதன் பிறகு இருவரும் மறைந்துவிடுவார்கள்.

பின்பு தலைவன் பவனி வருகையும், தலைவியொருத்தி (மோஹினி) அவனைக்கண்டு காமுறுதலும், நிகழும். பின்பு மோஹினியின் தோழிகள் (சகிகள்) திடீரெனச் சபைக்கெதிரில் தோன்றி நுட்பமும், திறமையும், அழகும், இனிமையும் பொருந்திய நடனம் புரிவார்கள். அதன்பின் மோஹினியும் சபை முன்தோன்றி அவள் தான் சரபோஜி மன்னன்மீது கொண்டுள்ள விரக வேதனையால், மன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்பித் தன் காதலைத் தனது தோழியருக்கு உணர்த்துவாள். தங்கள் தலைவி விரக தாபத்தால் படும் பாட்டைத் தோழிகள் பார்த்து, அவள் காதலனை அவளிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பதென்று வகை தெரியாது திகைத்து நிற்பார்கள். அப்போது மோஹினி சோகமேலிட்டு மெய் சோர்ந்து கீழே விழப்போவாள். அத்தருணம் மலைகளில் சஞ்சாரம் செய்யும் குறத்தியின் கானத்தைக்கேட்டு உற்சாகங்கொள்ளுவாள். தலைவி அக்குறத்தியை அழைப்பிக்க, அவள் வந்து வாசல் வளம் கூறுவாள். பின்னர் தலைவி குறத்தியை யாரென வினவ குறத்தி தன் தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம் முதலியனவற்றைக் கூறுவாள். பிறகு தலைவி, தன் கையைப்பார்த்து குறிசொல்ல வேண்டுமென்று கேட்டதும், குறத்தி தெய்வங்களைவேண்டிப் பின்பு குறிசொல்லத் தொடங்கித் தலைவியின் உள்ளக் கருத்தையறித்து மோஹினியின் காதலைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்லி, தலைவன் உன்னை விரைவில் மணந்தருள்வான் என்றும், கூறுவாள். இத்துடன் குறவஞ்சி நாடகம் முடிவுபெறும். இக்கோயிலில் நடிக்கப்படும் குறவஞ்சிக் கூத்தில் மோஹினியின் காதல் இவ்வாறு முடிவடைய, நாடகப் பகுதியில் குறத்தி, குறவன், அவன் கையாள் சிங்கன், இவர்களுடைய செய்கைகளும் காதல் நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன.




Courtesy :
Archaeo'l Survey

Flying *Apsaras*—St. Sundarar's Panel
A Rajarajeswaram fresco.



Copyright :
Archaeo'l Survey

A Dancing *Apsara*
Panel of " St. Sundarar on way to Kailas "
A Rajarajeswaram fresco.

சோழர்—நாயக்கர் கால ஓவியங்கள் :

பெருவுடையார் (பிருகதீச்சுரர்) மூலத்தானத்து உள் சுற்று மாளிகையில் சுமார் 950 ஆண்டுகள் மறைபட்டிருந்த கலைக்கருவூலமாகிய ஒன்றின்மேலொன்றதான இரு அரிய ஓவியங்கள் 1931-ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்து சரித்திர உதவியாசிரியர் திருவாளர் எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை, எம்.ஏ., அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, அவைகளுள், மேலுள்ளது நாயக்கர் காலத்தவை யென்றும், அதனுள் மறைபட்டிருப்பவை சோழர் காலத்தியவை என்றும், இந்திய ஓவியக் கலைஞானத்தில் இச்சோழர் காலத்தவை மிக்க உயரியதோர் வரிசையில் வைத்தற்குரியவை என்றும் அறிஞர் எண்ணுகின்றனர். சிற்சில ஓவியங்களே இப்போது காணக் கிடக்கின்றன. மற்றவை, நாயக்கர் காலத்தில், முந்திய ஓவியங்களின்மேல் பூசிய ஒரு மெல்லிய சுண்ணச்சாந்தின்மேல் தீட்டிய நாயக்கர் கால ஓவியங்களின் கீழ் மறைப்பட்டிருக்கின்றன. கிடைத்தவை சைவ சமய குரவராகிய சுந்தரமூர்த்தி நாயனுருடைய சரித்திரப்பகுதிகள், திரிபுர ஸம்ஹாரம், வேறு புராண வரலாறுகள், அக்கால வாழ்க்கையை உணர்த்தும் உருவங்கள், இராச ராசன், தேவிமார். ஆகியவற்றின் தொடர்புடையன காண்போரைப் பரவசப்படுத்தக்கூடிய வகையில் தீட்டப் பெற்றுள்ளன. இவை அக்காலத்து ஓவியக் கலைவளர்ச்சியையும், சிறந்த சைவ சமய உணர்ச்சியையும் புலப்படுத்தி விளக்குகின்றன [1].

ஆகவே, இப்பெரிய கோயிலானது முற்காலத்தில் கலையிலும் கைத்தொழிலிலும் மேம்பட்டிருந்தாருடைய தொழில் நலத்தைப் பிற்காலத்திற்கு நினைப்பூட்டும் ஞாபகச் சின்னமாகவும், இராசராசன் தன் தலைநகரமாகிய தஞ்சையில் ஜய சீலனுக வீற்றிருந்ததற்கு அடையாளமாக எடுப்பித்த வெற்றி நிலயமாகவும், அவனுக்கு இறைவன்பாலுள்ள அளவில்லாத

(1) இவை இந்திய அரசாங்கத் தொல்பொருள் ஆராய்ச்சி இலாக்காவினரால் பாதுகாக்கப்பட்டு அவைகளின் சொந்த வர்ணத்தில் நகல் எடுக்கப்பெற்றுள்ளன.

*Vide* Journal of the Annamalai University Vol. II i pp. 1—10.

அன்பைக் காட்டுதற்குரிய ஆபரணமாகவும் விளங்குகிறது. இதன் பரந்த இடமும், சிறந்த சிற்பங்களும், அணிவகுத்த சந்நிதிகளும், பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தி நின்று நிலவுகின்றன*. இப்பொருளின் விரிவை, ஆசிரியரின் 'சோழர் கோயிற் பணிகள்' என்ற நூலில் பரக்கக் கண்டுகொள்க.

## II

தஞ்சை இராசராசேச்சுரத்தோடு பிற கோயில்கள் பல இரீசராசசோழன் எடுப்பித்தான். மேல்பாடிக் கல்வெட்டால் சயங்கொண்ட சோழ மண்டலத்தில் தேவதான இறையிலியாக நிலம் பெற்று அரிஞ்சயேச்வரம் எடுப்பித்ததும், ஈழத்தில் மாதோட்டமான இராசராசபுரத்தில் உள்ள இராசராசேச்சுரமும், பழையாற்றில் அருண்மொழித்தேவேச்சுரமும், திருவலஞ்சுழி ஆலயத்துள் கேத்திரபாலர்க்கு[1] ஓர் ஆலயம் எடுத்ததுவும் பிறவும் அறியக் கிடக்கின்றன.

இனி இராசராசனின் பட்டத்தரசி உடையார் ஸ்ரீராசராசதேவர் நம்பிராட்டியார் தந்தி சத்திவிடங்கியரான ஸ்ரீ உலகமாதேவியார், "வடகரை............. திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோக மாதேவியீச்வரம்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் திருவையாற்று ஐயாறப்பன் கோயிலின் வடபால் 'வடகைலாசம்' எனப் பெயரிய கோயிலைக் கட்டுவித்ததும் தெரிகின்றது.

**முதலாம் இராசேந்திரனும் கங்கைகொண்ட சோழீச்சுரமும்:**

இராசராசனுக்குப் பிறகு அவன் மைந்தன் முதலாம் இராசேந்திரன் கி. பி. 1014 முதல் 1044 வரையில் அரசுபுரிந்தான். அவன் தன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து மாற்றினான். தனக்கென இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் தாலூகாவிலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை உண்டாக்கி அதனையே தலைநகராகக் கொண்டான். இந்நகரே இச்சோழர் பரம்பரை இறுதிவரை (கி.பி. 1279) வரை தலைநகராக யிருந்தது. அதில் தஞ்சைக்கோயிலை முழுதும் பின்பற்றி கங்கைகொண்ட சோழீச்சுரம்[2] என்ற கோயிலை எடுப்பித்தான். சுவாமிபெயர் பிரகதீசுவரர், அம்பிகை பிரகந்நாயகி.

(1) S.I.I. III i. p. 23 ; Ins. 633 of 1902.

(2) *Vide* A. S. R. 1911-2 p. 173 for his northern expedition and his fetching the Ganges water. *Ann. Epi. Rep.* 1932. Ins. III from Triloki, 10 miles from Gangaikondacholapuram, mentions

சோழர் காலத்துக்கோயில்களின் முதிர்ச்சி தஞ்சைக் கோயில் நிருமாணத்திலே தலைசிறந்ததென்றும், அதற்கு அடுத்தபடியாக முதலாவது இராசேந்திரன் எடுப்பித்த **கங்கை கொண்ட சோழீச்சுரத்தில்**[1] அமைந்ததெனவும் கூறலாம். சமயப்பற்றிலும், சிற்ப நுட்பங்களிலும் விளங்கிய கோயில்களின் தொகுதியை மிக்குடைய கும்பகோணத்திற்கும் சிதம்பரத்திற்கும் இடையே ஏற்பட்ட இக்கோயில், பல நூற்றாண்டுகளுக்கிடையே இராஜரீகம் சீர்குலைந்த நிலைமையிலும், ஜில்லாப் பெருவழிகளுக்கு (Highways) புறம்பாகவும் அமைந்திருப்பதினால், புறக்கணிக்கப்பட்டும், தற்போது அதனைச் சுற்றியுள்ள குக்கிராமத்தின் மத்தியில், இக்கோயில் விமானமொன்றே, இராசேந்திரனது வெற்றித் தூணென ஏறிட்டு நிற்கின்றது.

கங்கைகொண்ட சோழீச்சுரம் திருமதிள்களின் மேற்கிலும், தென்மேற்குமூலையிலும், அரண்கள் (Bastions) பொருந்தியனவாய் தற்காப்புக்கென எழுப்பிய கோட்டைச் சுவர் போன்ற சுவர்களின் நடுவே, மிகப்பரந்த இடத்தில் அமைந்துள்ளது.

தஞ்சைக் கோயிலைப் போலவே இறைவன் விமானத்திற்கு முன்னுள்ள மண்டபங்களும், அடுத்த சண்டேசுவரர், பிரகந்நாயகி அம்மையார், துர்க்கா தேவி சந்நிதிகளும் மற்ற அமைப்புக்களும் இதற்கு தாழ்வாகயிருப்பதும் சேய்மையிலிருந்து பார்க்கும்போது, கம்பிரமான அழகிய பெருமிதத் தோற்றத்தோடு விளங்குவதையும் காணலாகும்.

இக்கோயிலின் நீளம் 340 அடி, அகலம் 100 அடி. இதனுள் மகாமண்டபம் 175 அடி நீளமும், 95 அடி அகலமு

---

Rajendra while returning with the water of the Ganges, " ராஜேந்திர சோழ தேவர், கங்கைகொண்டு எழுந்தருளுகின்ற யிடத்து திருவடி தொழுது " mentioning the incident of the chola worshipping the sacred feet of the Lord at this village in A.D 1023.

(1) " The other temple at Gangaikondacholapuram, produced a little later, has not those virile qualities, the masculine vigour of its predecessor, but it possesses a rich voluptuous beauty that suggests its feminine counter part "–Percy Brown.—J. I. S. O. A. II. i. 4.

See also Ind: Ant: IX. p. 119; Sewell's Antiq: I. p. 264.

மானது. கருப்பகிருஹத்திற்கும் அந்தராளமண்டபத்திற்கும் இடையே அர்த்தமண்டபத்தின் இருபக்கங்களிலும் தெற்கிலும் வடக்கிலும் அழகிய திருவாயில்கள் படிகளுடன் உள. கோயிலை அணுகும் திருவாயில் கிழக்கேயுள்ளது. இதனுட் செல்லவே, மகாமண்டபத்தின் கம்பீரத்தோற்றம் நமக்குப்புலனாகும். அகலத்தில் எட்டு பந்திகளாய் 140 கற்றூண்கள் வரிசை வரிசையாகக் காணலாம். நடுப்பத்தி 18 அடி உயரமாகவும், இருபக்கங்களும் 16 அடி உயரியதாய் மேலே கல்லால் மூடிய மண்டபமுமாகும். இப்பரந்த பெருமித மண்டபமே, பிற்காலத்துப் பெரிய கோயில்களில் ஏற்பட்டுள்ள ஆயிரக்கால் மண்டபம் போன்ற பெருமண்டபங்களுக்கு அடிப்படையாகிய தென்னலாம். கருப்பகிருஹத்திற்கு எதிரேயுள்ள முன்மண்டபம், இரு வரிசைகளாலான பெரும் சதுரக்கற்றூண்களாலாகியவை. இறைவன் சந்நிதியின்மேல் விளங்கும் விமானமானது 186 அடி உயரமாகும். சுவாமியின் இலிங்க சொரூபமும் மிகப் பெரியதாகும். திருக்கோயிலின் அடிப்பாகம் 100 அடி சதுரமானது. இதன் உயரம் 35 அடிக்குமேல், இரண்டு மேல் மாடிகளையுடையது. இதற்குமேல் எட்டு மாடிகள் உளதாய் விளங்கும். இவ்வரிய விமானம், இதன்கண் கலசம் ஸ்தூபி வரையிலுள்ள சிற்பங்களும், கோயிலின் வெளிப்பாகத்துள்ள சிற்பந்திகழ் உருவங்களும் மிக்க வனப்புற்றவை. தென்னிந்தியாவிலுள்ள சிற்பங்களிலும், அவற்றைப் பின்பற்றிய ஜாவாத்தீவிலுமுள்ள உயர்ந்த சிற்பங்களிலும் இவை மேம்பட்டவை என்பர். தென்மேற்கில் சபாபதியும், மேற்கில் லிங்கோத்பவர் அருணசல ஈசுவரரும், தெற்கில் விநாயகரும், வடக்கில் திருவாயிலுக்கு அணித்தாய், சண்டேசுவரருக்கு இறைவன் அனுக்கிரகம் செய்கின்ற அருட்கோலமாய் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தியும் அருமை வேலைப்பாடுடையன. மற்றும் கணங்களும், அப்ஸர மாதர்களும், இராக்கதக் கூட்டங்களுமாக எவ்விடத்திலும் அமைந்துள்ள உருவங்கள் இக்கோயிலின் தோற்றத்திற்கு வனப்பையும், கம்பீரத்தையும் தருவனவாகும். இவற்றுள் பெரும்பாலானவைகளுக்கு நரசிம்மவர்மனது மாமல்லபுரத்து சிற்பங்களே அடிப்படையாயின எனக்கூறினும், இவைகளுக்கு சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்குப் பின்பு எழுந்த இவ்வுருவங்கள் முன்னதைக் காட்டிலும் எத்தனையோ அரிய குணங்கள் வாய்ந்தும், அழகிற்கும், உருவகத்திற்கும், ஒரு முதிர்ந்த தேர்ச்சியைக் காட்டுவன எனத்

துணியலாம். மற்றும், இக்கோயில், சோழர்காலத்துக் கோயில்களுள் அழகிலும், சிற்பத்திறனிலும், ஒரு தனித்த நிலையை யெய்தியதாகக் கூறலாம்.


கங்கைகொண்ட சோழபுரத்தில் எடுத்த இப்பெரிய கோயிலேயன்றி இராசேந்திரன் தான் வென்ற இடங்களி லெல்லாம் வேறு கோயில்களையும் நிரூபணஞ் செய்தான். அக்கோயில்களுக்கு நிபந்தங்களையும், ஊர்ப்பொதுச் சபையா ரால் எப்போதும் குறைவின்றி நடத்திக்கொள்ளக்கூடிய ஏற் பாடுகளையும் செய்வித்தான். இச்செய்தி மைசூர் நாட்டில் கோலார் எனப்படும் குவளாலபுரத்திலுள்ள துர்க்காலய மொன்றில் வெட்டிய இவன் சாசனமொன்றால் புலனாகும். இக்கோயிலில் பூசை செய்வதற்காகச் சைவப் பிராமண னொருவ னும், பூசைக்கேற்ற மற்ற பணிகளைச் செய்வதற்கு நான்கு பிரமசாரிகளும், அபிஷேகத்திற்கு நீரும் புஷ்பமும் மாலை களும் மற்றப்பண்டங்கள் முதலியனவும் சித்தம் செய்து வைக்க வேலையாட்களும், ஆலயத்தைச் சேர்ந்த நந்தவனத்தைச் செப்பனிட்டு நீர் பாய்ச்சிச் சரிவர வைத்துக் கொள்வதற்காக இரண்டு குடும்பங்களும், கோயிற் காப்புக்காக மூன்று காவற் காரர்களும், மூன்று பைரவர்களும், நான்கு யோகீசுவரர்களும், தேவாரப்பாக்களைப் பண்ணுடன் பாடப் பத்துப்பெயர்களும், ஒரு கணக்கனும், இருபத்துநான்கு தேவர் அடியார்களான நடன மாதர்களும், ஒரு குயவனும், ஒரு வண்ணானும், ஒரு சோதிடனும், மேற்பார்வையிட அரசியல் பணியாளன் ஒருவனும், ஒரு தச்சனும், ஒரு கருமானும், திருப்பதியம் திருவாய்மொழி முதலியவற்றைப் பாடவல்லாரும், வியாகர ணம் முதலிய கலைகளைப் போதிக்கவல்ல ஆசான் ஒருவனும், கோயிலின் திருப்பணி செய்வதற்காகவும் அதன் கருமங்களை நடத்துவதற்காகவும் அமைக்கப்பட்டிருந்தனர். ஊர்ப்பொது மன்ற ஏற்பாடுகளின்படி நெய், எண்ணெய், அரிசி, காய்கறி வகை, பழம், சந்தனக்குழம்பு, சாம்பிராணி, கருப்பூரம், பன் னீர், வெட்டிவேர், ஏலக்காய் முதலிய பொருள்களை யெல்லாம் தம் தம் கடமைப்படி பலர் தாமாகவே கொணர்ந்து ஆலயத் துக்குக் கொடுப்பது வழக்கமாயிருந்தது. கோயிலுக்குத் தேவ தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்களைப் பயிரிட்டோர் நிலத்தில் விளைந்த நெல் முதலிய தானிய வகைகளைத் தாமே கோயிலதிகாரிகளிடம் கொண்டுவந்து சேர்ப்பித்து வந்தனர்.

அன்ன சத்திரங்களை நடத்துவதற்காகவும், ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காகவும், வேதமோதும் அந்தணர்களுக்கு வெகுமானங்கள் கொடுப்பதற்காகவும், கோயில் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகவும் பிரத்தியேகமாய் ஏற்பட்ட நிலதானம், வரிதானம், பணக்கொடை முதலியவற்றைப் பற்றிப் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பெரிய கோயிலிலும் உள்ள விசாலமான மண்டபங்களிலேயும், திருமுறைகளும், ஏனைய அறிவுநூல்களும், பயன் தரு கலைகளும் பயிலப்பெற்று வந்தன. கோயிலில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கும், அப்போதப்போது ஏற்படும் மராமத்து வேலைகளைக் கவனிப்பதற்கும், கோயில் சிப்பந்திகளைப் பராமரிப்பதற்கும் உரிய நிபந்தங்கள் பல அமைக்கப்பெற்றன. கோயிலின் ஒருபால் வேதமும், திருமுறைகளும், மற்றொருபால் பாரதம், தர்மசாத்திரம், புராண இதிகாசங்கள், வியாகரணம், யாப்பு, தர்க்கம், சோதிடம், வானநூல், மருத்துவம் என்பனவும், மற்றும் பல கலைகளும் ஆலய மண்டபங்களில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. திருவொற்றியூர்க் கோயிலில் வியாகரணம், சோம சித்தாந்தம், பாணினீயம் ஆகிய இவை கற்பிக்கப்பட்டன. கி. பி. 1023-இல் முதலாம் இராசேந்திரன் காலத்திலேயே கோயில் பராமரிப்புக்கும், மறைநூல் 340 மாணவர்கள் கற்பதற்கு, கோயிலை ஒட்டித் தங்குவதற்கான விடுதி ஒன்று கட்டித் தானஞ் செய்ததாக எண்ணாயிரம்[1] கோயிலிலுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. 1122-ஆம் வருடத்திய கல்வெட்டொன்று துறவிகளுக்குச் சோறும் துணியும் கொடுக்கவும். மறை ஓதுவோருக்கும், கற்பாருக்கும் தானம் அளிக்கவும், 44 கிராமங்கள் தேவதானமாகக் கொடுக்கப்பட்டனவெனக் கூறுகின்றது.

இவ்வாறாக, முதலாம் இராசேந்திரனுக்குப் பின் வழிப் போந்தார் சைவப்பற்றின் மிக்காராய் எடுப்பித்த கோயில்களும், அவைகளுக்கு விட்ட நிபந்தங்களும் பலவாகும். அவைகள் ஒவ்வொன்றினையும் தனித்துக் கூறுமிடத்துப் பெருகும். ஆயினும் குறிப்பாக விஜய ராசேந்திரனை **முதல் இராசாதிராசன்** (1018–53) எடுப்பித்த இராசராச சதுர்வேதி மங்கலம் என்ற மன்னார்குடியிலுள்ள சயங்கொண்ட சோழேச்சுரம்,

---

(1) Nos. 333 of 1917; M. E. R. 1918.



**ராஜகம்பீரன் மண்டபம்**

தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில்.

இராசாதிராசேச்சுரம் ஆகிய இரு கோயில்களும்[1], **விக்கிரம சோழன்** ஜமீன் புங்கனூருக்கு அணித்தாய்க் கோயாற்றூர் என்ற உத்தம சோழபுரத்தில் இருங்கோளீசற்கு எடுத்த கோயிலும், **இரண்டாம் இராசராசன்** திருப்பணி செய்த திருப் பனந்தாள் கோயிலும், அவன் படைத்தலைவன் திருச்சிற்றம்பல முடையான் பல்லவராயனால் கட்டப்பட்ட மாயூரத்துக்கு அண்மையிலுள்ள பல்லவராயன்பேட்டைக் கோயிலும், மற்றும் அவன் எடுத்ததும் திருப்பணி செய்ததுமான தாராசுரம் இராசராசேச்சுரமும் ஆகும்.

**தாராசுரம் ஸ்ரீ ஐராவதேசுவரர் திருக்கோயில்,** கும்ப கோணத்திற்கு அடுத்து தென்மேற்கில், தாராசுரம்* ரயில் பாதைத் தலத்திலுள்ளது. கோயில் எடுப்பித்த காலத்து பல பிராகாரங்களை யுடையதாய், சுவாமிக்கும், தேவியாருக்கும் தனிப்பட்ட கோயில்களையுடையதாய், நிருமாணிக்கப்பட்டு, கால அளவில் பிராகாரங்கள் அழிந்தன, சுவாமி கோயி லுக்கு எதிரேயுள்ள கோபுரம் ஒன்று மாத்திரம் நிற்கவும், அதன் அடுத்த பிராகாரத்தில் சுமார் 230 அடி அகலமுள்ள திருக்குளம், தேர்த்தளமண்டமும் உள்ளன. சுவாமிகோயிலில் நுழைந்தவுடன் எதிர்ப்படுகின்ற அழகிய "இராஜ கம்பீரன் திரு மண்டபம்" மிகவும் அழகிய சிற்ப நுட்பங்களாலமைந்த துடன், குதிரைகள் பூட்டியும், தேர்ச்சக்கரமுள்ளதுமான ஒரு இரதம் போன்று சித்தரித்திருக்கிறது. ஸ்ரீ அம்பிகையின்

---

(1) Epi. Rep. 1897. para 11 ; Tanjore Gazetter, I. p. 227.

* இவ்வூர்ப் பெயர் இராசராசேச்சுரம் என்றிருந்து, நாளடை வில் இராராசுரம், ராராசுரம் தாராசுரம் என மருவிற்றென்பர். பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீவல்லபதேவனின் (Ins. 23 of 1908) கல்வெட்டில் "இராராசுரம் உடைய நாயனாருக்கு கோயிலில் பழுது பார்ப்பதற்காகவும், விழாக்களுக்காகவும், பொருள் தானம்" என்றிருப்பதிலும் இதன் திரிபை நோக்கலாகும். சுவாமி பெயர் கல்வெட்டுக்களில் **இராசராசேசுவரமுடையார்** என்றிருப்ப, புராண வரலாற்றின்படி சுவாமி **ஐராவதேசுவரர்,** அம்பிகை **தெய்வநாயகி** என்றும் வழங்குகின்றது. அதன்படி, முனிவர் சாபம் பெற்ற யம தேவன் வெம்மைநோய் தணியாது, பலதலங்கள் திரிந்து சிவபெருமா னின் திரிசூலம் ஊன்றிய இடத்தில் தோன்றிய இத்திருக்குளத்தில் மூழ்கி அருள் பெற்றான் எனவும்; துர்வாச முனிவர் சாபம் பெற்ற இந்திரனது யானை தனது வெண்மை நிறம் மாற, அதனை மறுபடியும் இக்குளத்தில் குளித்துப் பெற்று, அது பூசித்தமையால் சுவாமிக்கு **ஐராவதேசுவரர்,** என்றும், திருக்குளத்திற்கு **யமதீர்த்தம்** என்றும் பெயராயது என குறிக்கப்பட்டுள்ளன,

முன் மண்டபமும், அஃது நீரில் மிதக்கக்கூடிய தெப்பம் போன்று நிருமாணித்திருப்பதும் புலனாகும். இவ்விரு கோயில்களும்' சுவாமி கோயிலின் பல பாகங்களாகிய, நடராஜர் மண்டபம் அதற்கடுத்த திருச்சுற்று மாளிகையிலுள்ள பிக்ஷாடனருடன் விரகவேதனையிலகப்பட்ட தாருகாவன ரிஷி பத்தினிகள், மற்றும் 108 சைவாச்சாரியர்களுடைய சிலைகளும், அவர்கள் பெயர் விபரங்களும், மற்ற சுற்றாலயத்து சந்நிதிகளும், சுவாமி கோயில் அடிப்பாகத்துப் பட்டியற் பகுதிகளில் சைவ நாயன்மார்களுடைய வாழ்க்கையில் முக்கியமான ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறித்த உருவங்களும், அதன் மீது அன்னார் பெயர் குறித்த எழுத்துக்களும் காண்பதாகும். இக்கோயில் · சிற்பக்கலைக்கு ஒரு நிலைக்களமெனக் கூறலாம். இப்படிப்பட்ட சிற்ப நுட்பங்களும், சைவ சமயாசாரியர்களுடைய வாழ்க்கையை * உணர்த்தும் உருவங்களும் இதனையொத்து வேறெந்தக் கோயிலிலும் காணக் கிடையாது. அக்காலத்தில் சைவ உணர்ச்சி உன்னத நிலையிலிருந்தமைக்கு இச் சிற்பங்களே சான்றாகும்.

புதை பொருள் இலாக்காவினரால் பரிசோதிக்கப்பெற்ற 52 கல்வெட்டுகள் இக்கோயில் மதிள்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகளுள் பெரும்பாலன, இராசராசன் II,[1] (*1146-1163*), இராசாதிராசன் II,[2] (*1163-1178*), குலோத்துங்கன் III, (*1178-1218*), வீரபாண்டியன் முதலியோர்களுடையதாகும். கவனிக்குமிடத்து இக்கோயில் இரண்டாவது இராசராசன் கட்டுவித்ததும், மூன்றுவது குலோத்துங்கன் பின்பு முழுதும் செப்பனிட்டதும் ஆகும். கோயில் கிழக்குத் திருச்சுற்று மாளிகையின் வடபாகத்தில் இக்கோயிலை எழுப்பிய இரண்டாவது இராச ராசனதும் அவனது தேவியாருடையதுமான உருவச்சிலைகள் இருப்பதைக் காணலாம்.[3]

முதலாம் குலோத்துங்கன் :

சுங்கந்தவிர்த்த சோழன் எனப் பெயரிய முதலாம் குலோத்துங்கனே தமிழ்நாட்டில் முதன்முதலாக ஞாயிறு வழிபாட்டிற்கெனத் தனிக்கோயிலைக் கட்டியவனாவான். சூரியனார் கோயிலென வழங்கும் கோயில் இவன் கட்டியதே. வேம்பற்றூர்த்

* *Vide*, Ins. 16 of 1908 ; Epi : Rep : 1920. p. 102 ; also J.I.S. O.A. II. i.p. 30.

(1) Ins. 17, 18 of 1908. (2) Ins 18, 19 of 1908.

(3) *Vide Periyapuranam* by J. M. Nallaswami Pillai—1924, edited and reprinted in 1955.

திருவியலூருக்கடுத்துக் கர்க்கடேசுவரர் எனப்பெயரிய அருமருந்து நாயகருக்கு[1]க் கோயிலும் முன்மண்டபமும், எடுத்தவன் இவனே. மேலைப்பழுவூரிலுள்ள குலோத்துங்க சோழேச்சுரமும், திருவைகாவூரிலுமுள்ள கோயிலும் இம் முதற்குலோத்துங்கன் ஆட்சியிலே கட்டப்பெற்றன.[2] மன்னார்குடியிலுள்ள குலோத்துங்க சோழ விண்ணகரம்[3] என்ற இராஜகோபாலன் கோயிலும் முதல் குலோத்துங்க சோழன் கட்டியதாகும். இதனையே, பிற்போந்த தஞ்சை மன்னன் விஜயராகவன் செம்மையும் திருப்பணி செய்து 780 ஏக்கர் நிலமும், 6000 ரூபாயும் அளித்து, ஹரித்ரா நதி திருக்குளம் வெட்டியும் சீர்திருத்தியதாகவும் தெரிகிறது. **விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன்** இவர்களால் கட்டப்பெற்ற சிதம்பரத்திலுள்ள ஆலயங்களும் **மூன்றாம் குலோத்துங்கன்** எடுப்பித்த திரிபுவனம் கம்பஹரேசுவரர் கோயிலும், சீர்காழிக்கு மேற்கே நான்கு மைலிலுள்ள தனிநாயக சதுர்வேதி மங்கலத்துள்ள (தலைஞாயிறு) கொகுடிக் கோயிலும் போற்றப் பெறுவன.

**திருக்கோயில்களும் மக்கள் வாழ்க்கையும் :**

பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வாழ்க்கையில் கோயில்களே தலைமை பெற்றிருந்தன. அவை கல்லூரிகளாகவும், பொது மண்டபங்களாகவும் உபயோகப்பட்டு வந்தன.

வீரராசேந்திர சோழன் கட்டளைப்படி மாதவன் எனப் பெயரிய வைசியன், ஜனநாதமண்டபம் என்றதொரு பெரிய மண்டபம் நிறுவி, அங்கு, மறைகள், மற்றக்கலைகள், ரூபாவதாரம் முதலிய நூல்கள் கற்பிக்கக் கலாசாலையும், மாணவர்கள் தங்க விடுதியும், 15 படுக்கைகளையுடைய 'வீரசோழன்' எனப் பெயரிய (Hospital) ஆதுலசாலையும் ஏற்படுத்தினனென்பது திருமுக்கூடல்[4] கல்வெட்டால் தெரிகிறது. மாணவர்களுக்குத் தங்க விடுதியேயன்றி, உணவும், சனிதோறும் நீராட எண்ணெயும், விளக்கெரிக்க விளக்கெண்ணெயும் கொடுக்கப்பட்டன. இவைகளைச் சேர்ந்த வேலைகளுக்காகப் பரம்பரை வழியாக வந்த ஒரு வைத்தியனும், ஒரு சல்லியக்கிரியை பண்ணுவானும்

(1) Ep: Rep: 1900. p. 91. (2) Ins. 390, 393 of 1924.
(3) Epi : Rep : 1897. para 11.
(4) Ins. No. 182 of 1915; Epi : Ind : XXI. pp. 220, ff.

(ரண வைத்தியன்), மருந்து மூலிகைகள் கொணருவதற்கு இரண்டு ஆட்களும், நோயாளிகளைக் கவனிக்க இரண்டு பெண்களும் (Nurses), வியாகரணம் முதலிய நூல், கற்பிக்க ஆசிரியரும், மற்றும் பொது வேலைக்கு என ஒரு ஆளும் நியமிக்கப்பட்டிருந்தனர். அறுபது வேலி நிலம் தேவதானமாக விடப்பட்ட வியாகரண தான மண்டபம் ஒன்று திருவொற்றியூர்க் கோயிலுள் நிருமிக்கப்பட்டதென அக்கோயிற் கல்வெட்டுக் கூறுகின்றது.

ஒவ்வொரு கோயிலைச் சுற்றியும் **அக்ரஹாரம், பிரம்மபுரி** முதலிய இடங்களில் அந்தணர் கூட்டங்கள் வசித்தனர் எனவும், அவர்கள் இருக்க வசதிகளும், **சரஸ்வதி பண்டாரம்** எனப் புத்தகசாலைகளும் இருந்தனவெனவும்; கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வாறுகக் கல்வி போதனைகளுக்கும், மற்றும் கலைகளை யொட்டிய ஆராய்ச்சிகளுக்கும் ஆலயமே நடுவிடமாக அமைந்திருந்தது.

மற்றும், நமது பேராலயங்களிலேதான் அரசர்கள் துலாபாரம், இரணியகர்ப்பம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கமாயிருந்தது. அவற்றை அவர்கள் தம் பட்டத்தரசிகளுடனிருந்து இயற்றியதும் கவனித்தற்குரியதொன்றும். உதாரணமாக, திருவியலூரில் நடந்த இச்சிறப்பொன்றினைக் குறித்து ஒரு கல்வெட்டு[1] கூறுவதாவது,

> "ஸ்ரீ கோவிராசகேசரிவன்மரான ஸ்ரீ ராசராச தேவருக்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராஜேந்திர சிங்க வளநாட்டு மண்ணி நாட்டுப் பிரம்மதேயம் வேம்பற்றூராகிய சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மகாசபையோம் கையெழுத்து : நம்முடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ ராசராசதேவர் இவ்வூர்த் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியார் இரணிய கருப்பம் புக்கருளி, இத் திருவிசலூர் மகாதேவர்க்கு அக்காரவடிசில் அமுதுக்கு வேண்டும் நிபந்தங்களுக்காக வைச்ச காசு"

மற்றும், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 13-ஆம் நூற்றுண்டில் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் துலாபார மண்டபங்களைக் கட்டிவைத்ததும், அந்நூற்றுண்டில் சோழ பாண்டிய மன்னர்கள் சிதம்பரம் பெரிய கோயிலிலேயே முடிசூட்டிக்கொண்டமையும் பிறவும் அறியற்பாலன.

---

(1) Ins. 42 of 1907.

பல கல்வெட்டுக்கள் பழங்கோயில்களைப் புதுப்பிக்கும் முறைகளைத் தெரிவிப்பன :

"திருமழுவாடி உடையார் ஸ்ரீராசராச தேவர் அருளிச் செய்த திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி ஸ்ரீ விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்க"

என்றும்,

"ஆக இவ்வனைவர் கண்காணியாலும், இவ்வனைவர் கணக்கிலும் கல்வெட்டுவித்தபடி முன்பு கல்வெட்டுச் சேர்ந்த பொத்தகப்படி"

என்றும் உள்ள கல்வெட்டுக்களால்[1] திருமந்திர ஓலை நாயகர் அரசன் அருளிப்பாட்டினைத் தம் கையெழுத்திட்டுத் திருமுகத்தினைத் தூதுவர் வாயிலாக ஊர்ச்சபைக்கும் ஊரதிகாரிக்கும் விடுப்ப, அவர்கள், திருப்பணி செய்வோர் விமானம் வாங்கு முன் அதன் கண் உள்ள கல்வெட்டுகளை அவர்களைக்கொண்டு ஓலையில் எடுத்தெழுதுவித்து, விமானம் கட்டிமுடிந்தபின்னர்ப் பலர் கண்காணிப்பின்பேரில், தாம் காட்டுமிடத்தில் அவற்றை மீளவும் வெட்டுவிக்கும் வழக்குண்மை தெரியலாம். இம்மாதிரியாகவே **பராந்தகன்**[2] காலத்துத் திருவிடைமருதூர்க் கோயிலிலும், திருவல்லம் கோயிலிலும், **முதலாம் குலோத்துங்கன்** காலத்துச் சித்தலிங்கமடம் ஸ்ரீ வியாக்ரபாதேசுவரர் கோயில்[3] திருப்பணியிலும் நடந்தேறினமையும் காணலாம்.

சிவன் கோயில்களின் நிபந்தங்களில், தேவாரத்[4] திருப்பதிகங்களும், மணிவாசகர் திருச்சாழல்[5] முதலிய பாக்களும், அகோபிலம் போன்ற வைணவத் திருப்பதிகளில் நாலாயிரப் பிரபந்தங்களும் பாடுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முதலாம் இராசராசன் சிவபக்தனாய் விளங்கி, முழுதும் மறைபட்டிருந்த திருமுறைப் பாசுரங்களைத் தேடி நம்பியாண்

---

(1) Nos. 91, 92 of 1895. (2) Ins. 199; 234 of 1907.

(3) Epi: Rep: 1900, p. 91.

(4) Ins. 97 of 1932. கும்பகோணம் தாலூகா, மானம்பாடி, கல்வெட்டில் இராஜேந்திரனின் தேவார நாயகம்—மறைக்காடன் பதஞ்சலி பிடாரன் என்றிருப்பதில், அரசன் அரண்மனையிலும் தேவாரம் பாடுகின்றவர்களிருந்ததாகவும், அவர்களுக்கு, முதன்மையோன் "தேவார நாயகம்" என்று தெரிகிறது.

(5) Ins. 165 of 1906.

டார் நம்பி அடிகளின் உதவியால் தில்லையில் அவைகளைக் கண்டதும், பின்பு அவை திருமுறைகளாக வகுக்கப்பட்டதும் அறிந்த விஷயங்களாகும்.

அக்காலத்தில் நடனங்களும், நாடகங்களும் அநேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்கமண்டபங்களிலேயே நடைபெற்றன. காமரசவல்லி, திருக்கார்க் கோடீசுவரர் உடையார் சந்நிதியில் மார்கழி, வைகாசித் திருவாதிரை விழாக்களில் மூன்றுநாள் சாக்கைக் கூத்து நடித்த சாக்கை மாராயனுக்கு நிலதானம் வழங்கினனென்றும்[1]; விக்கிரம சோழன் 14-ஆவது யாண்டுக் கல்வெட்டொன்றில், திருவேங்கவாசல் ஈசனுர் முன் ஒன்பது கூத்துக்கள் நடித்ததற்கு எழுநாட்டு நங்கை என்பாளுக்கு நிலதானம் செய்தான்[2] எனவும் கண்டிருத்தல் காண்க.

கோயில் கண்காணிப்பில் சோழர்கள் மிக்க ஊக்கங்காட்டினமை பல கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. அரசர்கள் தாமும், அரசருடைய அதிகாரிகளும் ஊர்தோறும் போய்க் கவனித்து வருகையில் கோயில்களையும் அவற்றின் பொருள்களையும் கண்காணித்தனர். திருமாற்பேறு[3] அக்னீசுவரர் கோயில் நிபந்தங்கள் நடவாமல் நிற்ப, அதன் தேவதானங்கள் பிறரால் அபகரிக்கப்பெற்றுத் தினசரி திருவமுது இரண்டு நாழியாகக் குறைவுபட்டிருந்ததால் மதுராந்தகன் கண்டராதித்தனுர் தாமும் அவ்வூர்ப் பஞ்சாயத்தாரும் விசாரித்து, கோயில் அறைகாரனுக்கு அபராதம் விதித்துத் தேவதான நிலங்களை மறுபடியும் சேர்த்துக்கொண்டதாக ஒரு செய்தி தெரியவருகிறது. மற்றும் அச் சோழனே வட ஆற்காடு ஜில்லா திருவல்லத்தில்[4] அம்மாதிரியான நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிகிறது. கூகூர்க்[5] கல்வெட்டொன்றில், அவ்வூர்க் கோயில் நிபந்தங்கள் நடைபெருதுபோக, முதலாம் இராசராச சோழனது அரசியல் பணியாளர் ஒருவரால் அது கண்டுபிடிக்கப்பட்டு, களவாடியவனுக்கு அபராதம் விதித்து அப்பொருளைக்கொண்டு ஒரு தங்கத் தட்டுச் செய்து கோயிலுக்குக் கொடுத்ததும்; முதலாவது இராசராசன் ஊர்களிற் பவனி வரும்போது, திருவெறும்பியூர்க் கோயிற் கணக்கு

(1) Ins. 65 of 1914.
(2) Ins. 253 of 1915.
(3) Nos. 282, 283 of 1906.
(4) S. I. I. iii, p. 102.
(5) No. 285 of 1918.

க்ளைச் சிறுகுடையூர்க் காளி ஆதித்தன் என்பான் தணிக்கை[1] (Audit of accounts) செய்தானென்பதும், அதனுல் கோயில் களின் வருமானம், செலவு திட்டங்கள் அரசனின் காப்புக்குள் அடங்கியிருந்த தென்பதும்; முதற்குலோத்துங்கன் காலத்து அரசியல் பணியாளர்கள் திருப்பனந்தாளில்[2] கோயில் திருக் கைக்கோட்டிப் பண்டாரத்தைத் தணிக்கை செய்யுங் காலத்து அர்ச்சகர்கள் மூன்று தடவைகளில் நகைகளையும் பரிகலங்களை யும் அபகரிக்கக் கண்டு அரசன் முன்கொணர, 540 காசு அபராதம் விதிக்க, அவர்களில் ஒருவன் தன் பகுதியான தொகையைக் கொடுக்கமுடியாது, கோயில் முறையான தனது பாகத்தில் 4½ நாள் விட்டுக்கொடுத்ததும்; மூன்ரும் குலோத் துங்கன் திருவொற்றியூர்[3] இராசராசன் மண்டபத்தில் அமர்ந் திருந்தபோது ஒரு தேவதானக் கிராமம் விளைவின்றிக் கிடப்ப தாக முறையிட, அது பின்னர்ச் சரியான குத்தகைக்கு விடப் பட்டதும் ஆகிய செய்திகளை அவரவர்தம் கல்வெட்டுகளால் அறிகின்ரேம்.

சோழமன்னர் கோயிலுக்கென விடுத்த தேவதான நிலங் களும், நிபந்தங்களும் எண்ணில. அவர்கள் கொடுத்த நிலங் களுக்குக் குடிமையைத் தவிர்த்து, அவற்றிற்குக் கடமை இன்ன இன்ன விளைபொருள்களில் இவ்வளவென்பதையும் வரையறுத்திருந்தார்கள். முதலாம் இராசராசன் பெரும்பற் றப்புலியூரில்[4] அறப்பெருஞ் செல்வி என்னும் தருமசாலையை உண்டாக்கி, அதற்குரிய நிலப்பட்டயங்களைக் கோயிலிலுள்ள **திருக்கைக்கோட்டியில்** (Temple treasury) சேர்ப்பிக்கவேண்டு மென அவன் கட்டளையிட்டதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக் கிறது. மூன்ரும் குலோத்துங்கன்[5] கல்வெட்டொன்றில் எண் ணெய், திரி, விளக்கேற்றுவதற்காக 1,100 காசு மூலதனமாக வைத்து, அம்மூலதனத்தை ஐந்து வருடத்திற் கொருமுறை கோயில் அதிகாரிகள் முன்பு கொணர்ந்து காட்டவேண்டு மென்ற செய்தி காணப்படுகிறது. அக்காலத்திய அரசியலில் பொருள் மறையாதிருக்கவேண்டிச் செய்த முறைகளுள் இஃது ஒன்ரும். தேவதானங்கள் போதாத முறையில். ஊர் மன்றத்

---

(1) Ins. 109 of 1914. (2) Ep. Rep. 1915, p. 46.
(3) Ins. 368 of 1912. (4) No. 267 of 1913.
(5) No. 264 of 1913.

109956
Q23:453 N193

தார், நாட்டிலும், சுற்றூரிலும் விளைநிலங்களில் மா ஒன்றுக்குக் குறுணி வீதம் தானியமும், பாக்குமரம் ஒன்றுக்குப் பாக்கு ஒன்ருகவும், ஒவ்வொரு குடியானவனும் ஓர் உழக்கு எண்ணெயும் கொடுக்கவேண்டியதென்றும், அவற்றையெல்லாம் அரசனின் குடிமையை வசூலிக்கும் அதிகாரியே வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்கவேண்டியதென்றும் காமரசவல்லிக்[1] கல்வெட்டொன்று குறிக்கின்றது.

சோழர் காலத்துக் கிராம பரிபாலனம்[2] மிக மேன்மையடைந்திருந்ததென்பது பிரசித்தம்.[3]. ஊர்ப் பொதுக்காரியங்களைக் கவனிப்பதற்குக் **கணப்பெருமக்கள், கணவாரியப் பெருமக்கள**ான கூட்டம் (Assembly) இருந்தது. இவர்களின் கீழ்ச் சிறிய (Sub-Committees) கூட்டங்களாகப் பொதுக்கிராமக் காரியங்களைக் கவனிக்க **வாரியம்** என்ற சபைகள் அமைக்கப் பெற்றிருந்தன. **ஸ்ரீ காரியம்** செய்வான் கோயில்களில் காரியங்களைக் கண்காணித்துவந்தனர். இவைகளின் அதிகாரிகள் மத்தியஸ்தர் என்ற பெயருடையவர்; கிராமக் கணக்குகளை எழுதுபவர் தினம் நான்கு நாழி நெல்லும் ஆண்டுக்கு ஏழு கழஞ்சுப் பொன்னும் ஒரணைக்கூறையும் (இரண்டு ஆடை) பெறுவர். இவர்கள் கணக்குகளுக்கு உத்தரவாதம் செய்யப் பழுக்கக் காய்ச்சிய மழுவைப் பிடித்து உறுதி கூறவேண்டும். அது சுடாதுபோயின் உண்மை விளங்குவதுடன் அவருக்கு அவ்வருட வருவாயிற் காற்பங்கு 'பாதசேஷ' மென வழங்கப் பெறும். சுட்டுவிடுமாயின் பத்து கழஞ்சுப் பொன் அபராதம் கொடுக்கவேண்டியதென்ற செய்தி வட ஆற்காடு ஜில்லா, செய்யாறு தாலூகா, கரைக்கோட்டுப் பிரம தேசம் கல்வெட்டுகளால்[4] தெரிகிறது.

---

(1) No. 139 of 1915.

(2) *Vide*, S. K. Ayyangar, *Hindu Administrative Instructions* also, K. A. N. Sastry, *Studies in Chola History and Administration.*

(3) Ins. 156 of 1919 : இராசராசன் I, காலத்து, தென் ஆற்காடு பிரமதேயம் கிளியனூர் கல்வெட்டு, கிராம சபைகள் ஒற்றனல், கொம்புகள் ஊதி அழைக்கப்பட்டமையும், அதற்காக அவ்வொற்றன் அக்கிராமத்திலிருந்து இரண்டு சோறுகள் பெறக்கடவன் என்றும் குறிக்கப்பெற்றுள்ளதும் காண்க.

(4) Ep. Rep. 1916, p. 115.

பொதுவாக, கோயில்களின் நன்மைக்கென கிராம சபையோர் எடுத்த சிரத்தைகள் பலவாகும். முதல் ஆதித்தன் காலத்து, குமார மார்த்தாண்டபுரம் நகரத்தார் (guild of merchants) வருடம் விட்டு வருடம், தமது "வரவைகள்" முழுதும், அவ்வூர்க் கோயில், கோபுரங்களை புதுப்பிக்கவும், நந்தவனம் வைக்கவும் செலவிட்டார்களெனவும்[1]; முதல் இராசராசன் காலத்தில், காஞ்சி இராசசிம்மேசுவரர் கோயிலிலிருந்து வாங்கிய மூலதனத்திற்காக, ஆண்டுதோறும், கோயில் "சிவபண்டாரியிடம்" ஒரு அளவை நெல் அளக்கவும், காலம் கடந்தால், தினம் கால் பொன் அபராதத்துடன் கொடுப்பதாகவும்[2]; அம் மன்னன் காலத்திலேயே (A. D. 1007). பெரியமழவர் சபையோர், ஜெயங்கொண்ட சோழ விண்ணகர் ஆழ்வாருக்கு, அக்கோயிலது நிலம் முழுவதையும், கிராமத்தாரே உழுது சாகுபடி செய்து. "ஜெயங்கொண்ட சோழன்" மரக்காலால் ஒரு அளவு நெல் அளக்கவும் ஏற்றுக்கொண்டதும்[3], பிறவும் கல்வெட்டுக்களால் தெரிகின்றன.

இவை போன்ற சரித்திர காலச் சோழர்களால் திருப்பணி செய்வித்த கோயில்களேயல்லாமல், சைவ சமயாசாரியர் தாம் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிய கோயில்கள் பல சோழநாடு முழுதும் பரந்து நிலவுகின்றன. அவைகளிற் பெரும்பாலானவைகளின் பெயர்கள் மாத்திரமே **தேவார க்ஷேத்திரக் கோவை, அடைவுத்திருத்தாண்டகம்** முதலிய திருப்பதிகங்களால் தெரிவன. இவை சைவ சமயாசாரியர்களின் சைவத்தொண்டினுக்கும், சோழதேசத்தினரது ஆழ்ந்தசமயப் பற்றிற்கும் சான்றுவன.

சோழமன்னர்கள் தொன்றுதொட்டு வெற்றியும் புகழுமே தம் அணிகலன்களாகக் கருதித் தமிழர்களது பேரரசைத் தமிழ் நாட்டில் நிலைநிறுத்தியும், இமயம் வரை தங்கள் கீர்த்தியை நிறுவியும் ஆண்டவன் அருளைப் பெறுதற்கு முயன்று கடவுள் பக்தியில் சிறந்து விளங்கினுர்கள். அவர்கள் எடுப்பித்த கற்

(1) S.I.I. III. iii. p. 224; (2) S.I.I. i. p. 140;
(3) S.I.I. III. i. p. 18.

றளிகளும், அவைகளுக்கான நிபந்தங்களும், அவைகளை என்றும் நினைப்பூட்ட அக்கற்றளிகளின் மீது பொறித்துவைத்த கல்வெட்டுகளும் என்றும் அழியாதிருப்பன. அவர்களின் அரசியல் முறையும், நாட்டை அமைதியுடன் பரிபாலித்து வந்த கிராமக் கூட்டங்களும். அவற்றின் சட்டதிட்டங்களும் யாவும் இக் கல்வெட்டுகளால் தெரிவன, அவற்றை நோக்கும்போது பண்டைச் சோழமன்னர்களின் நல்லறிவையும் அரசியற்றிறனையும் வியந்து பாராட்டுகிறோம். தெய்வங்களுக்கு இடமாகிய கோயில்களிலே, அரசியற் செய்திகளைப் பொறித்துவைத்து, அவற்றை உண்மைக்கும் அன்புக்கும் உரியனவாக ஆக்கியதை நினைந்து மகிழ்ந்து பெருமிதம் கொள்கின்றோம்.

---



[வெற்றிவேல்]

தஞ்சை இராசராசேச்சுரம்

சேர்க்கை 1.

# தஞ்சை இராசராசேச்சுரத்து திருப்பதிகங்கள்

(1)

## கருவூர்த் தேவர் திருவிசைப்பா

" தஞ்சை இராசராசேச்சுரம் "

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தொழுவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்று நூறுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படை செய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (1)

பொருள் :—காவல்கள் பல நெருங்கி (அமைந்து), பல விதமான படைகள் அமைக்கப்பட்ட நீண்ட நிலைகளையுடைய பெரிய மலை போலும் மிக உயர்ந்த மாடங்களின் பக்கங்களில் வெள்ளிய சந்திரன் தவழப்பெற்றிருப்பதும், தழைகள் விரவப்பெற்ற மதிலுள் மேடை (பதணம்) களையுடைய மதில் சூழ்ந்த தஞ்சை இராச ராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவருக்கு, உலகத்தவர்கள் வணங்கும்படியாக வந்து எழுகின்ற கிரணங்களையுடைய சூரியன் பல ஆயிர கோடி சேர்ந்தாற் போன்றிருக்கும் திருவுருவம் (அவ்வளவு ஒளியுடையது எம்பெருமான் திருமேனி) எவ்வளவு அழகுள்ளதாயிருக்கிறது !

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடி முழுதாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக் குறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச்சரத் திவர்க்கே. (2)

பொருள் :—மடங்கி விழுகின்ற அலைகளையுடைய வடவாற்றின் நீர் செல்லும்படியான மதகில் வாழும் முதலைகள் மோதும்படியான

நீர் நிறைந்த அகழ்சூழ்ந்த மதில்கள் சுற்றி இருக்கும்படியான தஞ்சை இராச ராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவருடைய நெற்றிக்கண்கள் என் கண்களைவிட்டு அகலவில்லை. ஒளி வீசுகின்ற சிலம்புகள் ஒலிக்கும் படியான பொன்போலும் அழகிய இவர் பாதங்கள், என்னுடைய குடி முழுவதையும் ஆட்கொள்ள என்னெஞ்சினுள் புகுந்தன. புகுந்த அவைகள் திரும்பவேயில்லை. (அதாவது எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தல் பற்றி) ஆதலின் எனக்கு வேறு இவரைத் தவிர உறவினர் எதற்கு?

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதுங்
குறிப்பெ(ன்)னே கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சி சூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (3)

பொருள் :—கொத்துக் கொத்தாக இருக்கும் கோங்கு மலர்கள் போலும் குடைகளையுடைய அரசர்களின் முடிகள் ஒரு முடியோடு ஒரு முடி மோதுதலால் செவ்விய ஒளியினையுடைய மணிகள் சிந்தி குவிந்து ஓங்கியிருக்கும் இடங்களையுடைய மாடங்கள் நிறைந்ததும், மதில் சூழ்ந்திருக்கப் பெற்றதுமாகிய தஞ்சை இராச ராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவர், தன்னுடைய சடையிற் பொருந்திய மகுடத்தோடு குளிர்ந்த பிறைச்சந்திரனும் ஒளியை வீச, ஒளி பரப்பும் முத்துக்கள் பதிக்கப்பெற்ற குடைநிழலில், இடபத்தின் மேல் ஏறிக் கொண்டு திருவுலா வரும்படியான குறிப்பு என்ன காரணம் பற்றியோ!

வாழியம் போதத் தருகுபாய் விடயம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வா யங்குலிகெழுமு
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (4)

[பொருள் இடந்தரவில்லை.]

எவரும்மா மறைக ளெவையும்வா னவர்கள்
ஈட்டமுந் தாள்திருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய் யாமறுகில்
உறுகளிற் றரசின ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (5)

பொருள் :—உவர்ப்பினையுடைய பெரிய கடலின் முழக்குப் போலும் ஒலியினையுடைய பெருமைபொருந்திய வீதிகளில், அரசனின் யானைக் கூட்டங்கள் சஞ்சரிக்கும்படியானதும், பெரிய மலைபோலும் மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராச ராசேச்சுரத்தமர்ந்த இவர் உலகிலுள்ள எல்லோரும், எல்லா வேதங்களும், தேவர்களின் கூட்டமும், அன்றலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமனும், விஷ்ணுவும் அறிந்துகொள்ள முடியாத பெருமை வாய்ந்த வன்மைமிக்க வெம்மை வீசுகின்ற நெருப்பு உருவானவர்.

அருளுமா றருளி ஆளுமா றுள
அடிகள் தம் அழகிய விழியுங்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றில் தண்நிலா ஒளியுந்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (6)

பொருள் :—முத்துக்களால் நிறைந்த பெரிய மலையைப்போல, குளிர்ந்த நிலவு ஒளியைத் தருகின்ற முத்துக்களின் குவியல்கள் பெருகியிருக்கின்றமையால், தெருக்களில் இருள் நீங்கி இருக்கும்படியானதும், மதில் சூழ்ந்ததுமான தஞ்சை இராச ராசேச்சுரத்தமர்ந்த எம் பெருமான் அருள் செய்யும்விதம் அருள் செய்ய, ஆட்கொள்ளும்விதம் ஆட்கொள்ள வேண்டி, அவர் தம்முடைய அழகிய விழிகளையும், மயிர்ச்சுருள்களையும், காதையும், காண்பித்து யான் பெற்ற குயில் போலும் மொழியினையுடைய பெண்ணை மயக்கஞ் செய்வது அழகாகுமோ !

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிரிறப்பிலை உதிர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடித் துருகுவ தென்னே,

சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கமுநீர்ச்
சூழன்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (7)

[பொருள் இடந்தரவில்லை.]

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்,
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (8)

பொருள் :—மின்னல் போலும் ஒளி வீசுகின்ற நீண்ட புருவத்தினையுடைய இளமயிலைப்போன்ற பெண்கள், பெரிய நாடகசாலைகளில் இனிய நடனம் செய்யும்படியானதும், மதிள்கள் சூழப் பெற்றிருப்பதுமாகிய தஞ்சை இராச ராசேச்சுரத்தில் அமர்ந்த இவர், நெடுங்காலமாகத் தங்களால் இயன்ற தொண்டுகளைச்செய்து முன்னோர்கள் பலர் எம்பெருமான் அருள் கிடைக்கப்பெறாது ஏமாறிக் கொண்டிருக்க, என்னுடைய பெரிய கோயிலாகிய நெஞ்சில் வந்து தங்கியிருக்கும் எம்பெருமானின் எளிமைத் தன்மையை யான் எப்பொழுதும் மறக்கவேமாட்டேன்.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனில்
அலர்கதிர் அனையவா ழியரோ
பொங்கெழில் திருநீ றழிபொசி வனப்பில்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (9)

பொருள் :—மிகுந்த அழகினையுடைய திருநீறு அழிந்து காணப்படுகின்ற அழகிய திருவுடம்பையும், கங்கை நதி ஆரவாரித்து விளங்குகின்ற சடை முடியை உடையவரும், எங்களுக்கு இனிமையானவரும், மதிள்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்துஅமர்ந்தவரும், வஞ்சகர்களுடைய நெஞ்சகத்து ஒளிப்பவரும், அழற்சுடர் ஆனவரும் ஆகிய எம்பெருமானை என்னெஞ்சம், துன்பம் வந்த காலத்திலும், மற்றும் எக்காலத்திலும் நீக்கமற நினைந்து, இளவேனிற்காலத்து அலரும் சூரியன் போல பிரகாசத்துடன் வாழக் கடவதாக!

தனியரெத் தனையோ ராயிர வருமாம்
தன்மையர் என் வயத்தினராம்
கனியரத் தருதீங் கரும்பர் வெண் புரிநூற்
கட்டியர் அட்ட ஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (10)

பொருள் :— அனேக மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவர் தனிமையானவர். எவ்வளவு ஆயிரம் பேர்களினுடைய தன்மையையும் உடையவர்! என்னிடத்து கனிந்த அன்பினையுடையார். இனிய தித்திப்பான கரும்பு போல்பவர். வெள்ளிய முப்புரி நூலையுடையவர். கடைந்தெடுக்கப்பட்ட அரிய அமிர்தம் போல்பவர். தூய்மையானவர். பொன் மயமான வீர கண்டையைத் தரித்தவர். முறுக்கடங்கின சடையினையும், மகுடத்தினையும் உடையவர். புண்ணியர். பொய் பேசாத உண்மை உடையவர்களுக்கே இனியராவார்.

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல் தீர் கருவூர்
அறைந்த சொல் மாலை ஈரைந்தின்
பொருள்மருந் துடையோர் சிவபதமென்னும்
பொன்னெடுங் குன்றுடையோரே. (11)

பொருள் :— தேவதாரு, மந்தாரம், சண்பகம், வகுளம் (மகிழ மரம்), சந்தனம் இவைகள் நிறைந்த நந்தவனத்தின் இருள் பரவியிருக்கிற உச்சியினையுடைய மதிள்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்து அமர்ந்த இவரிடத்து, மனத்தைச் செலுத்துதலாகிய அரிய மருந்தை அருந்தி, துன்பம் நீங்கப்பெற்ற கருவூரன் சொல்லிய இப் பாட்டுக்கள் பத்தின் பொருளையறிந்து தெளிதலாகிய ஓர் அரிய மருந்தை உடையோர், சிவபெருமான் பதவி என்னும் பொன் மயமான நீண்ட குன்றினை ஏறி அதனைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவர்களாவார்கள், (அதாவது சிவபதத்தை அடைந்து சிவ பெருமான் கிருபையைப் பெறுவர் என்பது கருத்து.)

திருச்சிற்றம்பலம்.

# அருணகிரியார்—திருப்புகழ்.

## "தஞ்சைமாநகர் ராஜகோபுரத்தமர்ந்த பெருமாள்"

தந்தன தானன தனதான தந்தன தானன தனதான.

அஞ்சன வேல்விழி மடமாதர் அங்கவர் மாயையில் அலேவேனே
விஞ்சுறு மாவுன தடிசேர விம்பம தாயருள் அருளாயோ
நீஞ்சமு தாவுணும் அரனார்தம் நன்குமர ராவுமை அருள்பாலா
தஞ்செனவாமடி யவர்வாழத் **தஞ்சையில் மேவிய பெருமாளே** (1)

பொருள் :— ஆலகால விடத்தை அமுதாக உட்கொண்ட, சிவ பெருமான் புதல்வா! உமாதேவியாரால் அருளப்பட்ட பாலனே! தம்மைச் சரணடைந்தவர்கள் வாழத் **தஞ்சையில் எழுந்தருளியிருக்கும் தலைவனே!** யான், மைதீட்டப் பெற்றனவும், வேல்போன்றனவு மாகிய (வேல் வருத்துமாறு போல கண்ணும் வருத்தும்!) கண்களை யுடைய மாதரின் மோகத்தில் முழுகித் திரிவேனோ! யான் மேன்மை யடையும்படி உன்னுடைய அடிகளைச்சேர அருள்புரிய மாட்டாயா?

தந்த தானனத் தந்த தானனத்
தந்த தானனத் தனதான

அன்பு ராசியிற் கெண்டை சேலொழித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்
அங்க ணாரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினாலே
எம்பி ரானுனைச் சிந்தியா தொழித்
திந்த்ர சாலவிப் ப்ரமைதீர
இங்கு வாவெனப் பண்பி னாலழைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய்
கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல் குழற் கனமேருக்
குன்று போல்முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா
சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
**தஞ்சை மாநகர்ப்** பெருமாளே (2)

பொருள் :— பூங்கொம்பு போலும் இடையையும் கொவ்வைக் கனிபோன்ற உதடுகளையும், மேகம்போலும் கூந்தலினையும், மேருக் குன்று போன்ற தனங்களையுமுடையவளாகிய, குறக்குலம் புகுந்த வள்ளியைத் தலைவியாகக் கொண்ட, நற்குணங்களையுடைய வேலா ! சம்பரன் என்பானைக் கொன்றவனாகிய மன்மதனை எரித்து அழித்த தாகிய நெருப்புக்கண்ணையுடைய சிவனுக்கு ஞானத்தை ஊட்டிய ஆசாரியனே ! மிகப் பெரிய கோபுரங்களும், செம்பொன்னாலாகிய மாளிகைகளையுமுடைய **தஞ்சைமா நகரில் எழுந்தருளியிருக்கும் உயர்ச்சி பொருந்தியவனே !** கடலில் உள்ள கெண்டை சேல் முதலிய வைகளை வென்று காதிற் குண்டலம் வரையில் நீண்ட அழகிய கண் களையுடைய பெண்களின் இன்பக்கடலாகிய நெருப்பிலே அழுந்தி மீளமுடியாது தவிக்கின்ற இச்சையினாலே எம்பிரானாகிய உன்னை நினையாமல் ஒழித்த இந்திர சாலம் போன்ற இந்த மயக்கந்தீர இங்கு வாவென்று உன் உயர்ந்த குணத்தினால் அழைத்து, எனக்கு மெய்யறிவைக் கொடுத்து அருள் புரிவாய் !

தந்தன தனதான தானதத்த தந்த
தந்தன தனதான தானதத்த தந்த
தந்தன தனதான தானதத்த தந்த தனதான.

கந்தவார் குழல்கோதி மாலையைப்பு னைந்து
மச்சளா வழகாக மேனியிற் றிமிர்ந்து
கண்டமா லைகளான ஆணிமுத்த ணிந்து தெருவூடே

கண்டபே ரையெலாம் வாயினிற்கொ ணர்ந்து
வண்பயோ தரபார மேருவைத்தி றந்து
கண்களா கியகூர வேலைவிட்டெ றிந்து விலைகூறி

வந்தபேர் களையேகை யாலெடுத்த ணைந்து
கொண்டுதே னிதழூறு வாயைவைத்த ருந்தி
மந்தமா ருதம்வீசு பாயலிற்பு ணர்ந்து மயல் பூணு

மங்கைமா ரநுபோக தீவினைப்ப வங்கள்
மங்கியே கெடுமாறு ஞானவித்தை தந்து
வண்டுலா வியநீப மாலைசுற்றி லங்க வருவாயே

இந்த்ரதா ருவைஞால மீதினிற்கொ ணர்ந்த
சங்கபா ணியனாதி கேசவப்ர சங்க
னென்றுவாழ் மணிமார்பன் வீரவிக்ரமன் றன் மருகோனே

எண்டிசா முகவேலை ஞாலமூற்று மண்டு
கந்ததா ருகசேனை நீறுபட்டொ துங்க
வென்றுபே ரொளிசேர்ப்ர காசம்விட்டி லங்கு கதிர்வேலா

சந்த்ரசே கரிநாக பூஷணத்தி யண்ட
முண்டநா ரணியால போஜனத்தி யம்பை
தந்தபூ ரணஞான வேள்குறத்தி துஞ்சு மணிமார்பா
சண்டநீ லகலாப வாசியிற் றிகழ்ந்து
கஞ்சன்வா சவன்மேவி வாழ்பதிக்கு யர்ந்த
**தஞ்சைமா நகர்ராஜ கோபுரத்த மர்ந்த பெருமாளே** (3)

பொருள் :— கற்பக விருக்ஷத்தைப் பூமியிற் கொணர்ந்தவனும், பாஞ்சசன்யம் என்ற சங்கை உடையவனும், எல்லாப் பொருள்கட்கும் ஆதியாகிய கேசவனும் என்று உலகோர் புகழ வாழும்படியான 'கவுத்துபம்' என்ற மணியை மார்பில் அணிந்தவனுகிய, திருவிக்ரமாவதாரம் எடுத்த திருமாலின் மருகனே! எட்டுத் திசை, பூமி இவைகள் முற்றும் நிரம்பப்பெற்ற பலம் பொருந்திய அசுரசேனை சாம்பற் பொடிபோல அழிய, வென்று, மிக்க ஒளி வீசும்படியான திருமேனியை உடைய வேலனே!

சந்திரனைத் தரித்தவளும், நாகங்களை ஆபரணமாகப் பூண்டவளும், உலகத்தை உண்ட நாரணி என்ற பெயரை உடையவளும், ஆலகால விடத்தை உண்டவளும், உலகத்திற்கெல்லாம் தாயுமாகிய உமாதேவியார் பெற்ற ஞானமிக்கவனே! குறத்தியாகிய வள்ளியம்மையார் உறங்கும் அழகிய மார்பை உடையவனே! பலமிக்க நீலமயிலாகிய வாகனத்தில் விளங்கி, பிரமனும், திருமாலும், அவ்வவர் வாழ்கின்ற பதிகள் எல்லாவற்றினுக்கும் மேன்மை பொருந்தியிருக்கும்படியான **தஞ்சைமா நகரின் சிறந்த கோயிலுள் அமர்ந்திருக்கும் தலைமையுடைய முருகனே!** வாசனைமிக்க கூந்தலைக் கோதி, மாலை தரித்து, மஞ்சளால் மேனியில் அழகு செய்துகொண்டு, கழுத்தில் நல்ல உயர்ந்த ஆணி முத்துகள் பொருந்திய மாலைகளை அணிந்து, தெருவின் நடுவே கண்டபேர்களையெல்லாம் அவர்கள்மேல் அன்புள்ளவள்போல அழைத்துவந்து, தனங்களாகிய மேருவைத் திறந்து, கண்களாகிய கூரிய வேலை விட்டெறிந்து, விலையைக் கூறி, வந்தவர்களையெல்லாம் கையினல் எடுத்து அணைத்துக்கொண்டு தேனூறும் உதடுகளையுடைய வாயை வைத்து உண்டு, மந்தமாருதம் வீசும்படியான படுக்கையிற் புணர்ந்து, மயக்கம் செய்யும் மங்கையரின் அனுபோகமாகிய தீவினைகள் ஒளிமழுங்கிக் கெடுமாறு எனக்கு அறிவைப் புகட்டி, வண்டுகள் உலாவும் கடம்பமாலை சற்றிலங்க வந்து அருள் புரிவாய்!





ஸ்ரீ பிரகதீச்சுரர் துதி.

1. नमो देवादिदेवाय चन्द्रचूडाय शम्भवे ।  
बृहदम्बाय ते तुभ्यं बृहदीशाय ते नमः ॥

2. विश्वनाथाय नित्याय व्योमकेशाय शालिने ।  
वामदेवाय भीमाय बृहदीशाय ते नमः ॥

3. महादेवाय शुद्धाय शङ्कराय कपर्दिने ।  
प्रणताज्ञाननाशाय बृहदीशाय ते नमः ॥

4. गङ्गाधराय विश्वाय सर्पहाराय ते नमः ।  
पशूनां पतये तुभ्यं बृहदीशाय ते नमः ॥

5. भस्मरुद्राक्षमालाय कुमारजनकाय च ।  
गणेशनन्दीसेव्याय बृहदीशाय ते नमः ॥

6. वृषध्वजाय सर्वाय ब्रह्ममुण्डधराय च ।  
कपालमालिने तुभ्यं बृहदीशाय ते नमः ॥

7. क्ष्मारथाय नमस्तुभ्यं नमस्ते मेरुधन्विने ।  
विष्णुबाणाय देवाय बृहदीशाय ते नमः ॥

8. त्र्यम्बकाय भर्गाय नीलकण्ठाय हेतवे ।  
सर्गरक्षाकरान्ताय बृहदीशाय ते नमः ॥

9. स्वधर्मकानां भक्तानां सद्यः क्षिप्रप्रसादिने ।  
श्रीरुद्रप्रतिपाद्याय बृहदीशाय ते नमः ॥

விளக்கம் தொடர்ந்து காண்க.

## ஸ்ரீ பிரகதீச்சுரர் துதி

1. தேவதேவரும், திங்களைச் சிரசில் சூடியவரும், மங்களத்தைச் செய்பவருமான பிரகதீசருக்கும், பெரியநாயகிக்கும் வணக்கம்.

2. உலகத்திற்குத் தலைவரும், அழிவில்லாதவரும், விண்ணளாவிய சிரமும், சூலம் ஏந்திய திருக்கரமும், உமையவள் தங்கிய இடப்பாகமும் உடையவரும், அச்சத்தைச் செய்பவருமாகிய பிரகதீசருக்கு வணக்கம்.

3. மகாதேவரும், தூய்மையரும், சுகத்தைச் செய்பவரும் சடையைத் தரித்தவரும், வணங்கினவர்களின் மலத்தைப்போக்குகின்றவருமான பிரகதீசருக்கு வணக்கம்.

4. கங்கையைத் தரித்தவரும், உலகவடிவாயிருப்பவரும், பாம்பாரம் பூண்டவரும், பசுபதியுமான பிரகதீசருக்கு வணக்கம்.

5. திருநீறணிந்து உருத்திராக்கமாலையைத் தரித்தவரும், முருகனைப் பெற்றவரும், கணபதி நந்தி முதலியோரால் வணங்கப்படுபவருமாகிய பிரகதீசருக்கு வணக்கம்.

6. இடபக்கொடியை யுடையவரும், பிரமகபாலத்தைத் தரித்துச் சிரமாலையை அணிந்தவரும், மங்களமூர்த்தியுமான பிரகதீசருக்கு வணக்கம்.

7. பூமியைத்தேராகவும், மேருவை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்ட சுயஞ்சோதியான பிரகதீசருக்கு வணக்கம்.

8. முக்கண்ணும், நீலகண்டமும் உடையராய், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிற்குங் காரணமாய் இருக்கும் பிரகதீசருக்கு வணக்கம்.

9. தன் குழந்தைகளாகிய அடியார்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுப்பவரும். ஸ்ரீருத்ரத்தில் கொண்டாடப்படுபவருமான பிரகதீசருக்கு வணக்கம்.

மொழி பெயர்ப்பு தஞ்சைப் பேராசிரியர்
வித்துவான் கி. உலகநாத பிள்ளை அவர்கள் அன்புடன் வழங்கியது.



நன்றி
இந்திய தொல்பொருள்
ஆராய்ச்சிக் கழகம்.

இரண்டாம் சரபோஜியும், இரண்டாம் சிவாஜியும்
(ஒரு ஓவியம்)

சேர்க்கை 2.

# தஞ்சைச் சரபோஜி மன்னன்*

(கி. பி. 1798—1832)

சோழவரசர்களுக்குப் பின்பு (கி. பி. 1279) தஞ்சை அரசியல் மூன்று நூற்றுண்டுகள் நிலைகுலைந்திருந்தது. பின்னர் 16-ஆம் நூற்றுண்டிலும் 17-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் விஜயநகர வமிசத்தவராகிய நாயக்கமன்னர் நால்வர் தஞ்சையில் 125 ஆண்டுகள் அரசுசெலுத்தித் தென்னிந்திய வளத்திற்கும் கலை வளர்ச்சிக்கும் புத்துயிர் அளித்தனர்; ஆனல், அவ்வரசும் திடீரென மறைந்தது. பின்பு, மத்திய இந்தியாவில் மகாராட்டிர சாம்ராஜ்யத்துக்கு அடி கோலிய கீர்த்திப்பிரதாப சிவாஜியின் தம்பியாகிய வெங்காஜி என்ற எக்கோஜி என்பார் 1674-ல் தஞ்சை மகாராட்டிர ராஜவம்சத்தைத் தொடங்கினுர். அவர் முதலாகப் பன்னிருவர் 181 ஆண்டுகள் தஞ்சையில் ஆட்சி செலுத்தினர்.

அவர்களுள், தலைசிறந்தவராக எண்ணுதற்கு உரியவர் இரண்டாவது சரபோஜி ஆவர். இவர் தந்தையாரின் பெயர் ஷாஜிபோன்ஸ்லே. இவர் போசலகுலம் என்பர்; இதனைப் போஸ்லே என்றும் போன்ஸ்லே என்றும் கூறுவர்; இப்பெயர்க் காரணம் செவ்வனே அறிந்துகொள்ள இயலவில்லை. சரபோஜி தஞ்சைக்கு அணித்தான திருநீலக்குடி என்ற கிராமத்தில் பிறந்தார்; இவர், அப்போது ஆட்சி செலுத்திய துளஜாஜியின் சகோதரி புதல்வர்; துளஜாஜிக்குப் புத்திரப்பேறு இன்மையால், தம் சகோதரியின் புதல்வரான சரபோஜியைச் சுவீகாரம் செய்துகொண்டார். அப்போது இவருக்கு இடப்பெற்ற பெயர்தான் சரபோஜி என்பது. துளஜாஜி தம் 49-ஆம் வயதில் காலமானுர். அப்போது அவர் நான்கு பத்தினிகளில் இருவர் சககமனம் செய்தனர். 1787-இல் அவர் சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டபோது சரபோஜிக்கு வயது 9 ஆகும். துளஜாஜி இறக்கவே அவர் மாற்றுந்தம்பியாகிய அமரசிம்மன், தனது சூழ்ச்சியால் மேற்கூறிய சுவீகாரம் சாத்திர விரோதமென்றும் சட்டவிரோதமென்றும் கூறித் தானே அரசுரிமை பூண்டான். அப்போதுள்ள கிழக்கு இந்தியக் கம்பெனியின் கவர்னராகிய ஆர்சிபால்ட் காம்பெல்லும் அதனை ஆமோதிக்கவே இளமைமிக்க சரபோஜியும் இவருடைய தாய்மாரான இராணியரும் புறக்கணிக்கப்பட்டு மிக்க அவதியுற்றனர். இது இங்கிலாந்தில் அரசியலாரின் கவனத்தை ஈர்த்தது. அதனுல்,

---

* கலைமகள் XXI. 1942. pp. 473. ஆசிரியர் கட்டுரையைத் தழுவியதாகும்.

சரபோஜியும் இராணியரும் சென்னையில் சுவார்ட்ஸ் (Rev. Fr. Schwartz) பாதிரியாரின் பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் இருந்தனர்.

### சரபோஜியின் கல்விப்பயிற்சி

சுமார் 12 ஆண்டுகள் பாதிரியாரின் பாதுகாப்பில் இருந்தபோது, பாதிரியார் சரபோஜியை நன்கு பாதுகாத்து வந்ததோடு அமையாது கல்வியில் மிகத்தேர்ச்சி செய்துவைக்க முயன்றார்; அம்முயற்சியின் பயனாகச் சரபோஜியும் மராத்தி, வடமொழி முதலிய மொழிகளைக் கற்றதோடு அமையாது, ஆங்கிலம், பிரஞ்சு லத்தீன் முதலிய பல பாஷைகளையும் அப்பாஷைகளில் உள்ள உயரிய நூல்களையும் கற்று வல்லவரானார். இது கண்ட பாதிரியார் மிக முயன்று சரபோஜியின் சுவீகாரம் சாத்திர சம்மதமென்றும், சரபோஜி அரசுரிமை தாங்குவது சட்டவிரோதமாகாதென்றும், இவரே வார்சுமுறையாலும் உரிமையுடையவரென்றும், தகுதியாலும் உரிமையுடையவரென்றும் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் டைரக்டர்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் எடுத்துக்கூறினர். அதுகேட்ட ஆங்கில அரசியலார் அமரசிம்மனைச் சிம்மாசனத்தினின்று விலக்கிச் சரபோஜியை அரசராக்கினர். அப்போது சரபோஜிக்கு வயது 20 ஆகும்.

சரபோஜியின் ஆட்சிக்காலம் கி. பி. 1798 முதல் 1832 வரை 34 ஆண்டுகள் ஆகும். அப்போது ஏற்பட்ட இராஜீயக் குழப்பத்தாலும், நாட்டில் அமைதியின்மையாலும், ஆங்கிலக்கம்பெனியாரின் செல்வாக்கு, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வந்ததாலும், சரபோஜி தம் அரசுரிமைப் பொறுப்புக்களை ஆங்கிலக் கம்பெனியாருக்கே கொடுத்துவிட்டுத் தமக்கென ஆண்டு ஒன்றுக்கு இராஜ்யத்தின் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு வரியாகிய ஒரு லக்ஷம் வராகன்களைப் பெற்றுக்கொண்டு இருக்கவேண்டியதாயிற்று. மற்றும் அப்போது இவருக்காக ஒதுக்கிவிடப்பட்ட நிலங்களும் தோப்புக்களும் ஆண்டில் 1½ லக்ஷம் ரூபாய் வருமானம் வரக்கூடியவையாகவும் இருந்தன. இங்ஙனம் சரபோஜியின் அரசியல் பெயர் அளவிலேயே நின்றுவிட்டதனல், இவருடைய எண்ணம் முன்பு தாம் பயின்ற கல்வித்துறையிலே இறங்குவதாயிற்று; இவர் அந்நாளில் முயன்று கற்ற கல்வியே பின்பு தஞ்சைக் கலைவளர்ச்சிக்குச் சிறந்த உதவி அளித்தது எனலாம்.

### சிவபக்தித்திறமும் திருப்பணியும்

சரபோஜி சிவபக்தர்; இவருடைய குலதெய்வம் சந்திரமௌலீசுவரர்; இவரது கோயில் தஞ்சை அரண்மனையின் கீழ்ப்பாகத்தில்

அரச பரம்பரையினருக்கு உரித்தானதாகக் கொள்ளப்படுவது. சரபோஜி தாம் சிறுவயதில் அரசுரிமை இழந்து, திரும்பவும் அவ்வுரிமையைப் பெற்ற பெரும்பேற்றைக் கருதியும், அங்ஙனம் அருள் சுரந்த தஞ்சைப் பெருவுடையாரது பெருங் கருணைத் திறத்தை நினைந்தும் தமது நன்றியைப் புலப்படுத்தும் பொருட்டுப் பெருவுடையார் கோயில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணி புரிந்து கும்பாபிஷேகம் (பெருஞ்சாந்தி) செய்வித்தார்; உட்பிராகாரத்தில் கல் தளவரிசை போடுவித்தார்; புதிதாக விநாயகர் கோயில் ஒன்றைக் கருப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றுடன் கட்டி முடித்து, அங்குள்ள விநாயகரது திருமேனி பழுதுற்றிருப்பதைக் கண்டு எடுத்துவிட்டுப் புதிய திருமேனியைச் செய்து பிரதிஷ்டித்தும், பெருவுடையாருக்குத் தங்கம், பொன் முதலியவற்றினால் பல ஆபரணங்களையும் பரிகலங்களையும் செய்வித்தும், வெள்ளியில் ரிஷபம், மான் முதலிய வாகனங்களைச் செய்வித்தும், நடராசர் சந்நிதிக்கு அடுத்த தேரைத் தீர்த்தக் குளத்தைக் கல்லால் மூடுவித்து இப்போதுள்ள கிணறு அளவாகச் செய்வித்தும் மற்றும் பணிகள் செய்தார்.

இன்னும் தஞ்சைக் கீழ் ராஜவீதியில் உள்ள புதுக்கோயில் என்னும் **மணிகர்ணிகேசுவரர்** கோயிலைக் கட்டுவித்தவரும் இவரே; இக் கோயில், சரபோஜி மன்னர் காசியாத்திரை செய்தபோது அங்கே கங்கைக் கரையில் மணிகர்ணிகா படித்துறையில் இவர் கட்டுவித்த கோயிலின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதென்பர்; இதில், நருமதா நதி தீரத்திலிருந்து கொணர்ந்த சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வித்தார்; இந்தச் சிவலிங்கப் பெருமான் பெயர் மணிகர்ணிகேசுவரர்.

திருவையாற்றில் காவேரிக் கரையில், இவரால் கட்டப்பட்ட கல்யாண மஹால் அரண்மனைகளும், இப்போது அரசர் கல்லூரி நிறுவியிருக்கும் மாடமாளிகைகளும் இவர் காசியில் கட்டுவித்த மணிகர்ணிகா படித்துறையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டவையாகும்.

இன்னும் தஞ்சை வடக்கு ராஜவீதியில், அர்ச். பேதுரு கலாசாலைக்கு அணித்தாக உள்ள **ஸ்ரீ ரத்னகிரீசுவரர் கோயில்** இவர் காலத்தே கட்டப்பட்டதென்பதும் குறிக்கத்தக்கது. சரபோஜி காசிக்குச்சென்று திரும்பிய பின்பு ஒரு யாகம் செய்து நவகோள்களுக்குப் பிரீதியாகப் பல தானங்களை வழங்கும்போது சனிபகவானுக்குரிய தானத்தை வாங்க எவரும் அஞ்சினர்; அரசர் அதனை ஏற்பவருக்கு அளவற்ற திரவியங்களைக் கொடுப்பதாகக் கூறினர்; அது கேட்ட பழமானேரியிலுள்ள அண்ணாசாஸ்திரிகள் என்பவர் அந்தத் தானத்தை ஏற்று அதனால் தமக்குக்கிடைத்த பெரும் பொருளைக் கொண்டு இக்கோயிலைப் பிரதிஷ்டித்தாரென்றும் சொல்லுவர். இக் கோயில் இப்போது செல்வாக்கில் இல்லை. இவர் காலத்தே ஏற்பட்ட

மற்றொரு கோயிலைப்பற்றியும் குறிக்கவேண்டுவது இன்றியமையாத தாகும். சரபோஜி தம் தங்கைக்கு ஏராளமான பொற்பணிகளை அணிவித்துத் திருமணஞ்செய்து கொடுத்தார். அவள் மணாளர் வ. ஸ்ரீ. ராமோஜிசர்ஜேராவ் காண்டிகேயாவர். ராவ்சாகேப், சிவ பக்தியால் அந்நகைகளை அவ்வப்போது விற்று அந்தப் பொருளைக் கொண்டு வெண்ணாற்றங்கரையின் வடபாலுள்ள **லக்ஷ்மிராஜபுரம் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி** என்கிற ஸ்ரீ தளிகேசுவர சுவாமி கோயிலைத் திருக்குளம், புஷ்யமண்டபம், படித்துறை, அக்கிரகாரம் முதலியவற்றுடன் நிறுவினார் என்றும் கூறுவர். இங்ஙனம் பல திருக்கோயில்களை நிர்மாணிப்பதற்குச் சரபோஜியின் தெய்வபக்தியே சிறந்த காரணமாக இருந்தது எனலாம்.

இவ்வாறாகத் தமது சைவசமயமே சமயமெனக் கடைப்பிடித்து ஆழ்ந்து நின்ற இவரது பற்று, மற்ற சமயங்களிலும் வெறுப்பில்லாது அவைகளையும் போற்றி வந்தது சிறப்புடைத்தாகும். தம்மை வளர்த்துக் காத்த சுவார்ட்ஸ் பாதிரியாருக்கெனவும் கிறிஸ்துவ மக்களுக்கெனவும், தஞ்சைக் கோயிலுக்கு அடுத்த சிவகங்கைக் கோட்டையில் அழகியதொரு கிறிஸ்துவக் கோவிலை 1779-இல் அமைத்துக் கொடுத்தார். அக்கோவில் இன்னும் புதுவருட தினத்தில் கிறிஸ்துவ மக்கள் கூடி ஆண்டவனைத் துதிசெய்யும் தலமாக வுள்ளது. அதன் பக்கம் ஒன்றில், மரணத்தறுவாயில் இருந்த சுவார்ட்ஸ் பாதிரியாரைச் சரபோஜி மந்திரிகளுடன் சென்று கண்டு அவர் ஆசியைப் பெறும் தோற்றம் அழகிய சலவைக்கல்லில் செதுக்கப் பட்டுக் காணப்படுகிறது. இக்கோயிலுக்கும் கிறிஸ்துவச் சபைக்கும் சரபோஜி கொடுத்த பொருளும் நிலதானமும் அள்விறந்தன. அம் மாதிரியாகவே, முகம்மதிய நாகூர் ஆண்டவர் மசூதிக்குச் சரபோஜி பல தானங்களைக் கொடுத்திருப்பதும் புலனாகின்றது.

## கல்வெட்டுக்கள்

சரபோஜியால் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பத்தாகும். இவை, தஞ்சைக்கோயிலில் பல பாகங்களில் காணப்படுகின்றன. இவை, அக்கோயிலில் சரபோஜி செய்த திருப்பணியை விளக்குவன ; அதனைப்பற்றி முற்கூறப்பட்டுள்ளது. ஆனால் இவைகளில் ஒன்று மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

தஞ்சைக் கோயிலில், தென் திருச்சுற்றுமாளிகையின் மேற்கு மூலையில், தென்பாகத்தில் இரு சுவர்நிறைய மகாராட்டிர லிபியில் 1803-ல் எழுதுவித்த ஒரு பெரிய கல்வெட்டுக் காணப்படுகிறது. அதனை தஞ்சை மகாராட்டிர போன்ஸ்லே வமிச மன்னர்களின் விவர மான சரித்திரமெனக் கூறலாம். அது, சரித்திர நிபுணர்களாகிய

ரானடே (Ranade), டப் (Duff) என்போர் இதுவரை எழுதிய குறிப்புக்களைவிட விவரமாகக் கூறுவதொன்றாகும். இது, சரபோஜி 9-ஆம் வயதில், அரசுரிமை ஏற்கமுற்பட்டபோது இவரைத்தடுத்து 12 ஆண்டுகள் அரசுரிமை தாங்கிய அமரசிம்மனின் வமிசாவளி சரியல்லவென்றும், சரபோஜியே அதற்கு வாரிசாக வருதற்குத்தகுதியுடையவரென்றும் காட்டக்கூடிய சரித்திரக் குறிப்பென்பர்.

### சரபோஜியும் கலை வளர்ச்சியும்

சரபோஜி பல சாத்திரநிபுணர். சிறு பிராயந் தொடங்கியே மேனாட்டு இலக்கியங்கள், விஞ்ஞான சாத்திரங்கள் ஆகியவற்றைப் பயின்றவர். இவர் புலமையையும் அறிவையும் ஹீபர், சுவார்ட்ஸ், ராபின்சன் போன்றவர்கள் வியந்து புகழ்ந்துள்ளார்கள். இவர் மகாராட்டிர பாஷையில் விற்பன்னர். இவர் பெயரால் ஏழு நாடகக் காவியங்கள் எழுதப்பெற்றுள்ளனவென்று தெரிகிறது. இவரது அவையில் மற்றும் முத்தமிழ் வல்லுநரும், வடமொழி, சங்கீதம், வைத்தியம் முதலிய பல கலைகளில் வல்லவர்களும் போற்றப் பெற்றனர். தமது அரண்மனையில், 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் நாயக்கர் காலத்தில் அமைக்கப்பெற்றிருந்த புத்தகசாலையைப் பெரிதாகப் புதுக்கியும், அதில் தமிழ், தெலுங்கு, மகாராட்டிரம் முதலிய பல மொழிகளிலுள்ள ஏட்டுப் பிரதிகள், அச்சுப் புத்தகங்கள், தாம் 1829-ல் காசியாத்திரை சென்றிருந்தபோது அங்கே கிடைத்த பல அரிய வடமொழி ஏட்டுப்பிரதிகள் ஆகியவற்றைத் தொகுத்தும் வைத்தார். இதுதான் தற்காலம், '**மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால்**' என வழங்குவது. இப் புத்தகநிலயம் உலகத்திலேயே சிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது. இப்போது இந் நூல்நிலயத்தில் 30,433 வடமொழி முதலிய பலமொழி ஓலைச்சுவடிகளையும், 6426 அச்சுப்பிரதிகளையும், பிரெஞ்சு, லத்தீன் முதலிய பலமொழி நூல்களையும் தொகுத்து வைத்துள்ளார்கள். அறிவு நூல்கள் பலவற்றையும் தொகுத்து அச்சிடுவதற்கு, இவர் தேவநாகரி லிபியிலும் ஆங்கிலத்திலும் ஒரு அச்சகமும் (Printing Press) ஏற்படுத்தினார். முதல் முதலாகத் தேவநாகரி எழுத்துக்களைக்கோர்த்து அச்சேற்ற முன்வந்தவர் நம் சரபோஜியேயாம்.

அதோடு முந்திய மகாராட்டிர மன்னர்களுடைய உருவ ஓவியங்களை, மேல்நாட்டு ஓவியம் வல்லாரைக்கொண்டு எழுதுவித்துத் தமது அரண்மனையைக் அழகுபெற அமைத்தார். இன்னும், அங்கே **பொருட்காட்சிச்சாலை** (Museum) ஒன்றும் நிறுவி, அதில் பலதேச நாணயங்கள், ஓவியங்கள், உடற்கூறு நூல் போதிப்பதற்கான தந்தத்தாற் செய்த மனித எலும்புக்கூடு, மின்சாரம் இயக்கும் கருவி, வானசாத்திர நுண்கருவிகள் முதலிய பலப்பல அரிய பொருள்களைத் தொகுத்தார்.

## பல்கலை நிபுணர் சரபோஜி

இவர் யானை, குதிரை முதலியவற்றின் இலக்கணங்களைக்கூறும் அசுவலக்ஷண கஜலக்ஷண நூல்களிலும் மிகுந்தபுலமை உடையவராய் இருந்தார், அரண்மனைக் கொட்டாரத்தில், பல யானைகளும் பல உயர்ந்த சாதிக் குதிரைகளும் வைத்துப் பாதுகாத்து வந்தார்; இதனால் இவரைப் "பரிக்காமனகுலனெங்கள் சரபேந்திர பூபதி" என ஒரு புலவர் கூறுதல் காண்க. இதற்குச்சான்றாக இன்றும் சரஸ்வதி மஹாலில் இரண்டு அரிய பரிமா நூல்கள் இருப்பதைக் காணலாம்.

ஹீபர் பாதிரியாரும் இவரது குதிரை நடத்தும் திறமையைப் பற்றியும், புலி முதலிய துஷ்ட விலங்குகளைக் குறிதவறாமற் சுடக் கூடிய இவரது வன்மையைப்பற்றியும் புகழ்ந்து கூறுவர்.

## கலா விநோதர் சரபோஜி

இவர் இங்ஙனம் பல அரிய நூல்களைத் தொகுத்து வைத்ததோடு அமையாது வடமொழிவல்ல புலவர்களையும், தண்டமிழ் வல்லபேரறிஞர்களையும் போற்றுங் கடப்பாடு உடையவர். சரபோஜியின் அரசவை எப்போதும் பல புலமை மிக்கோரால் நிறைந்து இருக்கும். இதனால், வடமொழியில் பல இலக்கண இலக்கியங்களும், தமிழில் அவ்வரசவையில் பெயர்பெற்ற சிவக்கொழுந்து தேசிகரென்னும் கவியரசரால் பல அரிய பிரபந்தங்களும் ஏற்பட்டன; அவைகளுள், சரபோஜியின்மீது பாடப்பெற்ற **சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும்** ஒன்றாகும். மன்னர்களையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடும் தமிழ்நூல் வழக்கத்தை அநுசரித்தே இயற்றப்பட்ட இக்குறவஞ்சி, கோயிலில் தியாகராஜப்பெருமான் திருமுன்னர், குறவஞ்சி மேடையில் பரதநாட்டியங்களுடனும், தற்போதைய கர்நாடக சங்கீதத்தைத் துணைக்கொண்டும். சிறிது காலத்திற்கு முன்வரை நடிக்கப்பட்டு வந்தது யாவரும் அறிந்ததாகும்.

## சரபோஜியும் வைத்தியமும்

சரபோஜி பல கலைகளில் ஈடுபட்டிருப்பினும் வைத்தியத்தில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தினர்; யாவருக்கும் வைத்திய முறை பயன்படுமாறு அரண்மனையில் ஆரோக்கியசாலை ஒன்றை நிறுவியும், '**தன்வந்தரி மஹால்**' என்ற வைத்திய சபை ஒன்றைக் கூட்டி அனுபவ வைத்திய முறைகளைச் செய்யுள் நடையிற் பாடச் செய்தும் பல நூல்களைத் தொகுப்பித்தார். அவ்வாறு தொகுக்கப் பெற்ற நூல்கள் 'சரபேந்திர வைத்தியம்' எனப் பெயருடையனவாகும். இவ்வாரோக்கியசாலையில், ஐயாக்கண்ணுபிள்ளை என்பவர் தலைவராய்

இருந்தார்; மற்றும் வைத்தியநூல் இயற்றியவர்கள்: குறவஞ்சி நூலாசிரியரான சிவக்கொழுந்து தேசிகர், திருவேங்கடத்தான் பிள்ளை, காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், வேங்கடாசலம் பிள்ளை, சுப்பராய கவிராயர் முதலியோராவர். இவர்கள் செய்த நூல்கள்: 'சரபேந்திரர் இரண வைத்தியம்; 'விஷவைத்திய முறை' முதலியனவாம். இம்முறைகள் இன்னும் பிரபல வைத்திய நிபுணர்களால் கையாளப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இந்நூல்கள் சமீபத்தில் சென்னை அரசியலார் உதவியால் பதிப்பிக்கப்பெற்று வருகின்றன.

இன்னும், சரபோஜியின் கலாவிநோதங்களை இவர் சேதுபாவா சத்திரத்திலும், சலுவநாயக்கன் பட்டணத்துக் கடற்கரையிலும் எடுப்பித்த அழகிய 'மனோரா' என்ற உயர்நிலை மாடங்கள் விளக்குகின்றன. நன்றியில் மிக்க சரபோஜி ஆங்கிலப்பற்றுடையவர். 1814-இல் வாட்டர்லூ பெரும்போரில் நெப்போலியன் முறியடிக்கப் பட்டதும், அம்மகிழ்ச்சியைத் தெரிவிக்கவே இவ்விரு வெற்றித் தூண்களையும் கட்டி, இவைகளில் தமது மகிழ்ச்சியைக் காட்ட கல்வெட்டு எழுத்துக்களால் பொறித்துள்ளதை இன்றும் காண்பதாகும்.

### தரும நிலையங்கள்

தஞ்சை மகாராட்டிர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட தரும சாலைகளும், அன்ன சத்திரங்களும் அவர்களுக்கு என்றும் அழியாப் புகழைத் தருவனவாகும். அவர்களுக்கு முன்போந்த நாயக்க மன்னர்களும், ராணி மங்கம்மாள் அரசியாரும் காசி முதல் இராமேச்சுரம் வரையில் பெருஞ் சாலைகள் நியமித்த பெரும் புண்ணியச் செயலைப் பின்பற்றி மகாராட்டிர மன்னர்களும் 1743 முதல் 1837 வரையில் தஞ்சை இராஜ்யத்தில் பதினெட்டும், இராமேச்சுரத்தில் ஒன்றும், சேதுக்கரையில் ஒன்றுமாக இருபது அன்ன சத்திரங்களை ஏற்படுத்தினர்.

இவை பெரும்பாலும், அரண்மனையில் உள்ள அரசியாரின் பெயராலேயோ, மன்னரின் தாயார், சகோதரி அல்லது அபிமான மங்கையரின் பெயராலேயோ அழைக்கப்பட்டுள்ளன. இத்தரும நிலயங்களுக்கென விடுத்த நிலதானங்கள் 76 முழுக்கிராமங்களும், சுரோத்திரியங்களும், பலதோப்பு, தோட்டங்கள் நிரம்பிய புன்செய், நன்செய் நிலங்களுமாகச் சுமார் 40,000 ஏக்கர்களாகும்.

இத்தருமநிலயங்களை இராமேச்சுர யாத்திரிகர்கள் தங்க வசதிக்காக ஏற்படுத்தியிருப்பினும், இவைகளுடன் இணைக்கப்பட்டிருந்த மருத்துவச்சாலைகளில், ஏழைகள், வயோதிகர், பிணியால் நலிவுற்றோர் ஆகிய இவர்களுக்கு வேண்டிய மருத்துவச் சிகிச்சையும்; ஒரத்தநாடு,

ராஜா மடம், நீடாமங்கலம் சத்திரங்களில் ஏழை அனாதைப் பிள்ளைகளுக்கு ஊண் உடையுடன் வேதம், சாஸ்திரப் பயிற்சியும் தமிழ் ஆங்கிலக் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளும் ஏற்படுத்தியிருந்தார். இப்பாடசாலைகள் 1877-இல் தனிப்பட்ட கல்லூரியாக தஞ்சையில் நிறுவப்பெற்றும், அதனை 1880-இல் திருவையாற்றிற்கு மாற்றியமைத்து The Rajah's College of Sanskrit and Tamil Studies என்ற பெயருடன் ஒரு தனிக் கல்லூரியாகவுமிருந்து, 1913-இல் வடமொழி மீமாம்சம், சாகித்ய சிரோன்மணி பட்டத்திற்கும், தமிழில் வித்துவான் பட்டத்திற்குமாக சென்னைப் பல்கலைக் கழகத்துடன் (Madras University) இணைக்கப்பெற்றுமுள்ளது போற்றுதற்குரியதாகும்.

இவற்றுள் சரபோஜி ஏற்படுத்தியவை ஒரத்தநாடு, அம்மாச்சத்திரம், நீடாமங்கலம், யமுனாம்பாள்புரம் சத்திரங்களாகும்.

**ஒரத்தநாடு** தஞ்சைக்குத்தென் கிழக்கில் 14-மைலிலுள்ள சிற்றூர். ஆங்கு முத்தாம்பாள் என்ற தம் அருமை அபிமான மங்கையின் பெயராலே தருமசாலை ஒன்றுகட்டி அதற்கு ஏராளமான நிலங்களையும், பொருளையும் அதன் காப்புக்காக விட்டும், பிறகு இச் சத்திரங்கள் கம்பெனியாரின் பாதுகாப்புக்கு வரவே இவற்றுக்கும் மற்றவைகளுக்குமாக 1805—1806-ஆம் ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்ட ஐந்து சன்னத்துக்கள் மூலமாக 27 கிராமங்களை இவற்றிற்காக ஊர்ஜிதப்படுத்தியும், இன்னும் வருமானம் போதாமைக்கு அரண்மனைப் பண்டாரத்தினின்றும் பொருள் கொடுத்தும் உதவினர் என்பது அறியக்கிடக்கிறது.

மகாராட்டிர மன்னரின் தரும நிலங்களின் ஆரம்பங்களைப்பற்றியும், சிறப்பாக ஒரத்தநாட்டுச் சத்திரத்தைப்பற்றியும் சில கர்ணபரம்பரைச் செய்திகள் உலவுகின்றன. அவை பின் குறிப்பிடுவன.

சரபோஜி மன்னர் தமது ஆரோக்கியசாலைக்குப் பயன்பட ஒரு கஞ்சாத் தோட்டம் வைத்திருந்தாரென்றும், ஒருநாள் அத்தோட்டத்தில் இவர் உலாவி வருகையில் ஒரு சிமிழ் அங்கே கிடக்கக்கண்டு அதனை எடுத்துப் பார்த்தன ரென்றும், அதனுள் ஒருவகை மை இருப்பதைக்கண்டு எடுத்துக் கண்ணில் இட்டுக்கொண்டபொழுது ஓர் இடத்தில் இருந்த புதையல் ஒன்று இவர் கண்ணுக்கு புலப்பட்டதென்றும், ஒருநாள் ஒரத்தநாட்டுப் பக்கத்தில் இருந்த காட்டிற்கு வேட்டையாடச் சென்றபொழுது அக்காட்டில் அந்த மையைக் கண்ணில் இட்டுப் பார்த்தாரென்றும், அப்பொழுது ஓர் இடத்தில் மிக்க புதையல் இருப்பதை அறிந்து அதனைக் கொள்ளுதற்கு முயல, அதனைக் காத்திருந்த பூதம் ஒன்று துன்புறுத்தியதென்றும், பின்பு அப்பூதத்தை வழிபட்டுக் கேட்க அது, 'கர்ப்பமுடைய பெண்ணொருத்தியை அவளுடைய உடம்பாடுபெற்றுப் பலியிட்டாற் புதையலை

உமக்கு அளிப்பேன்' என்று ஆவேசமுகமாக வந்து சொல்லிற் றென்றும், அரசர் அரண்மனை மீண்டபின்னர் அப்புதையலை எடுத்தல் பற்றிய கவலையோடு இருப்ப, அதனை அறிந்த முக்தாம்பாள் என்னும் அபிமானவல்லியின் உதவியால் அப்புதையலைப் பெற்றும் இங்கு முக்தாம்பாள் சத்திரம் என்ற அவளது பெயரால் ஒரு அறச் சாலையை நிறுவினர் என்றும் கூறுவா.

முக்தாம்பாள் கருப்ப நோயால் பிணியுற்றிருப்ப அவள் வேண்டு கோளுக் கிணங்க, கருப்பவதிகளுக்கு இங்குச் சிறந்த சலுகைகள் காட்டப்பட வேண்டுமென்றும், கருப்பவதிகள் பிரசவத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இங்கு வந்து, பிரசவத்திற்கு மூன்று மாதத் திற்குப் பின் செல்லவும், பிரசவத்தின் முழுப்பொறுப்பும் சத்திரம் ஏற்கவும், அவர்களுக்கும் சிசுக்களுக்கும் சுத்தமான பாலும், தாய்மார்களுக்கு நல்ல சத்துள்ள உணவும் கொடுக்கவும் ஏற்பாடு செய்தாள் என்றும் தெரிகிறது.

இவர் காசிக்குச் சென்றபொழுது வழியிலே சந்தித்த பல பைராகிகள் இவரை 'மூப்பனர் தேசத்து ராஜா' எனச் சுட்டித் தம்முள் பேசிக்கொண்டனரெனவும், அவ்வாறு அவர்கள் கூறுவதன் காரணத்தை இவர் விசாரிக்கையில், அக்காலத்தில் கபிஸ்தலமென்னும் ஊரில் இருந்த மூப்பனர் ஒருவர் அன்னதானம் நிரம்பச் செய்தா ராதலின் பல தேசங்களிலிருந்து வந்த யாத்திரிகர்கள் அவர் சத்திரத் தில் அன்னம் உண்டு வந்து அவருடைய தருமத்தைப் புகழ்ந்தன ரென்று அறிந்து, 'நம் நாட்டு மிராசுதார் ஒருவர் இவ்வளவு செய்து புகழ் அடைந்தபோது நாம் ஏன் இந்தத் தருமத்தைச்செய்து புகழ் பெறக்கூடாது?' என எண்ணித் தஞ்சை மீண்டவுடன் பல இடங் களில் சத்திரங்கள் கட்டுவித்தாரெனவும் ஒரு கர்ண பரம்பரைச்செய்தி யும் வழங்குகிறது.

ஒரத்தநாட்டுச் சத்திரத்தில் சரபோஜியின் இரு கல்வெட்டுக் களுள் ஒன்று வடமொழியிலும் மற்றொன்று மராத்தியிலும் பொறிக் கப்பட்டுள்ளன. அவைகளால் அங்கு இரண்டு யாகசாலைகள் நிறுவப் பெற்றன வென்றும், அவைகளில் அநேக வேதவேள்விகள் நடை பெற்றன வென்றும் தெரிகின்றது.

### அம்மாசத்திரம் ஸ்ரீ சப்தரிஷீச்சுரர் கோயில்

இவரால் ஏற்பட்ட மற்றொரு தருமநிலையம் சக்கவாரம்பாள்புரம் என்ற அம்மாசத்திரமாகும். இது சரபோஜியின் இராணிகளில்

ஒருவரான மாதுஸ்ரீ சக்கவாரபாய் அவர்கள் பெயரால் ஏற்பட்டதாகும். இது கும்பகோணம் சீர்காழிப் பெருவழியில் உள்ளது. இதற்கு அணித்தாக ஸ்ரீ ஸப்தரிஷீச்சுர சுவாமிக்கு ஒரு கோயில் உள்ளது. இதற்கும் சத்திரத்துக்குமாக விடப்பட்ட நிலங்களின் மொத்த சராசரி வருமானம் ரூ. 2,804-15-4 ஆகும். இந்தக்கோயில் தஞ்சை அரண்மனைத் தேவஸ்தானத்தாரின் மேற்பார்வையில் இன்றும் உள்ளது.

தஞ்சை மகாராட்டிர மன்னர்களுள் இன்றும் என்றும் நினைவுக்குரியவர் சரபோஜி மன்னரே யாவர். சலவைக்கல்லால் அமைந்த அவரது உருவச்சிலை அரண்மனை சரஸ்வதி மஹாலுக்கு எதிரேயுள்ள அரசவையில் கம்பீரமான தோற்றத்துடன் இலங்குவதைக் காணலாம். அவரது தெய்வ சிந்தனை நிறைந்த முகப்பொலிவும், அஞ்சலியாளராக நிற்கும் பாவனையும், அவரது அருமைக் குணாதிசயங்களை எடுத்துக்காட்டுவதாகும். ஹீபர் (Bishop Heber) 1825-இல் தஞ்சையில் சரபோஜி மன்னரைச் சந்தித்துப்பேசி மன்னரது பாஷாஞானத்தை வியந்து எழுதியதாவது: "நான் ஐரோப்பாவில் எத்தனையோ மகுடம் தரித்த மன்னர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இத்தனை அறிவாற்றல்களைப் படைத்த ஒருவரைக் கண்டதில்லை" என்பதாகும்.

தாம் அரசுரிமை ஏற்ற நாட்டின் நலத்தையே முதலாகக் கருதிச் சமூகத்துறையிலும் கலைத்துறையிலும் அவர் செய்துள்ள சேவை உலகப் புகழுக்குரியனவாம்.

ஆகையால் இவர் தஞ்சையை ஆண்ட காலம் தஞ்சையின் பொற்காலம் என்னலாம். இவரது அறிவையும், கலை ஆற்றலையும், தெய்வீக சிந்தனையையும் உலகம் உள்ளளவும் காட்டவல்லன. இவர் நிறுவிய சரஸ்வதி மஹாலும் * தரும சத்திரங்களும் சமீபத்தில் அவரது தரும நிலையங்களினின்று உதவிய பொருளால் ஸ்தாபிக்கப்பெற்ற **ராஜா சரபோஜி கல்லூரி**யுமாம். இக்கல்லூரி 4—7—1955-இல் சென்னை மாநில கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களால் சங்கீத மஹாலில் திறந்து வைக்கப்பெற்று, இதுபோது தஞ்சை வல்லம் பெருவழியில் தஞ்சை ரோட்டரி கிளப்பாரால் உதவிய 156 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் புதிய கட்டடங்களில் சிறந்து விளங்குவது சரபோஜியின் அருமை பெருமைகளுக்குச் சிறந்த சான்றாகும்.

---

* தஞ்சை மன்னன் சரபோஜி — ஸ்ரீமத் ராஜாராம் ராஜா - சத்ரபதி - **ஆனந்த விகடன்** தீபாவளி மலர் - 1955, பக். 101–112 பார்க்க.

சேர்க்கை 3.

# தஞ்சைத் தலமான்மியச் சுருக்கம்*

'பொன்னியாறு' என்று சிறப்பாக வழங்கப்பெற்ற காவிரி யாற்றின் தென்புறம் ஒரு யோசனை அல்லது எட்டு மைல் தூரத்தில் அமையப்பெற்ற நகரம் தஞ்சை. அதன் வடபாகத்தில் மணிமுத்தாநதி என்ற ஓர் சிற்றாறுண்டு. அது இப்போது 'வடவாறு' என்று அழைக்கப்படுகிறது. அதன் மேற்கு அருகாமையில் 'அமிருதபுஷ்கரணி' என்று ஒரு குளமுள்ளது. இந்நகரத்திற்கு 'தஞ்சை' என்ற பெயர் மஹாவிஷ்ணுவினிடப்பெற்றது,

முன்னொருகால், புராணபிரசித்தரான பராசரமுனிவர் இங்கு ஆசிரமத்தைக் கட்டித் தவம் புரிந்துவந்தார். பல சீடர்களைப் படிப்பித்து வந்தார். தேவாசுரர்கள் பண்டு பாற்கடலைக் கடைந்து அமிருதத்தை அடைந்தனர். அதிற் சிறிது பெற்றுப் பராசர முனிவர் இந்த அமுத புஷ்கரணியில் சேர்த்தார். அது காரணமாக அவரிருக்குமிடமெல்லாம் செழித்து ஓங்கி வளர்ந்து வந்தது. முனிவர் தமது தவத்தைச் செவ்வனே புரிந்து வந்த காலத்தில் உலகில் பன்னிரண்டாண்டு மழையில்லாமல் கடும் பஞ்சம் நேர்ந்தது. அதனால், தஞ்சகன், தண்டகன், தாரகன் என்ற மூன்று அசுரர்கள் தம் பரிவாரத்துடன் பராசர முனிவரின் ஆசிரமம் அணுகி அங்குள்ள அக்குளத்தின் நற்சுவை வாய்ந்த நீரை அருந்திக் களைதீர்ந்து தபோமுனிவர்களுக்கு இடையூறு செய்தார்கள். முனிவர் பலவாறு நல்லுரை சொல்லியும் கேட்கவில்லை. முனிவர் பிரமதேவரிடம் முறையிட்டனர். பிரமன் சிவபெருமானிடம் முறையிடச் சொல்லவே, அவரைக் குறித்துத் தவம் செய்ய, அவர் மனமிரங்கி காளி தேவியை அனுப்பினர். அந்தத் தேவியாரொருவரால் அவர்களைக் கொல்ல முடியாததாயிற்று. பெரியதோர் போர் நடந்தது. புஷ்கரணியின் அமுதம் கலந்த நீரை அருந்துவதினால் அவ்வசுரர்களுக்கு வன்மை குன்றாது போர் புரிய ஏதுவாக இருந்தது. அதுகண்டு மகரிஷி மஹாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்யவே, பகவான் 'கார்போன்ற' வடிவம்

---

* ஆசிரியரது **தஞ்சைத் திருக் கோயில்கள்,** (1939) என்ற நூலினின்று இங்கு சேர்க்கப்பட்டுள்ளவை.

கொண்டு அக்குளத்திலுள்ள தண்ணீரை முற்றும் தாமே அருந்தினர். அதுபற்றி அசுரர்களுக்கு வன்மை குன்றிவிட்டது. வன்மை குன்றவே தஞ்சகன் யானை வடிவமெடுத்துப் போர் புரிந்தான். விஷ்ணு பகவான் உடனே 'நரசிங்க' வடிவ மெடுத்துத் தஞ்சகனைக் கொன்ருர். சாகுமுன், தஞ்சகன் பகவானைக் குறித்துத் தாம் எடுத்துள்ள 'நரசிங்க' வடிவத் தோடு இங்கு சேவை சாதிக்கவேண்டுமென்றும், தன் பெயரால் இந்தப் பட்டணம் உலகில் வழங்கவேண்டுமென்றும் வரம் கேட்டுக்கொண்டான். பகவான் அப்படியே வரமளித்தார். அது முதல் இத்தலம் **தஞ்சாபுரி** என்ற பெயரை அடைவதா யிற்று.

பிறகு, தண்டகன் பூமியைக் குடைந்து பயந்து ஓடின தால் விஷ்ணு பகவான் வராகம் (பன்றி) உருவம் தரித்து அவனைக் கொன்ருர். தாரகனைக் காளி தேவியார் தனது **சக்திகுலிசம்** என்ற சூலத்தால் கொன்றனர். அதுமுதல் போரில் தமது உடம்பில் பட்ட காயமெல்லாம் அழகிய ஆபர ணங்களாக மாறி அவ்வம்மையார் '**பச்சைக் காளி**' '**பவழக் காளி**' என்று திருநாமங்களுடனும் **கோடியம்மன்**, கோடீச் சுரக்காளி எனப் போற்றப்பெற்ருர். அப்பொழுது பிரம்மா முதலியோர்களும் பராசர முனிவரும் மஹாவிஷ்ணுவை இவ் விடத்திலேயே அந்தந்த வடிவத்துடனே எழுந்தருளியிருந்து தங்களுக்குச் சேவை சாதித்தருள வேண்டிக்கொண்டதின் பேரில், பகவானும் அவ்விதமே செங்கமலவல்லித் தாயாருடன் **ஸ்ரீ நீலமேகப் பெருமாளாகவும்**, தஞ்சகனை வதஞ்செய்த இடத் திலேயே லக்ஷ்மியோடு கூடின **ஸ்ரீ நரசிங்கமூர்த்தியாகவும்**, '**மணிக்குன்ற**' வடிவமாகவும் தோன்றப்பெற்று இந்த மூன்று வடிவமாய், முற்காலத்தில் வடவாற்றிற்குத் தென்கரையில் 'வம்புலாஞ்சோலை'யிலும் அண்மையிலும் எழுந்தருளியிருந்து நாயக்க வம்ச அரசாட்சியின் பிற்காலத்தில் *விண்ணாற்றங் கரையில் எழுந்தருளச் செய்யப்பெற்று உலகமுய்ய ஸேவை ஸாதித்து வருகிருர்.

---

* விண்ணன் என்ற வேளாள குலத்து சிற்றரசனுல் வெட்டியது.

"சண்ணூர் உலகிற் பகீரதனுங் கண்டு கொணர்ந்தான் **கங்கையென்பார்**,
**விண்ணாறு எளிதோவாறுதந்த வேளாண்குரிசில் விண்ணன் அன்றே,**
தண்ணூர்முள்ளி ஒடம்வரச் சம்பந்தனும் செந்தமிழ்பாட,
மண்ணுள்செல்வம் பெருங்கீர்த்தி வகித்தார் சோழமண்டலமே."

சோழமண்டல சதகம்—90.

# விண்ணாற்றங்கரைத் திருக் கோயில்களின் வரலாறு

## தஞ்சைமாமணிக்கோயில்

---

மகரிஷிகள் தவப்பயன் பெறுதல், புராணப் பிரசித்தி, ஆழ்வார்களின் மங்களாசாஸனம், ஆசாரியர்கள் உகந்தருளுவது, இவற்றில் ஒவ்வொன்றும் புண்யதலங்களின் பெருமையை மேன்மைப்படுத்துவனவாகும். இவை யாவும் பொருந்தியுள்ள தலங்களுக்கு அவைகள் பொருந்தப்பெருத மற்ற தலங்களைப் பார்க்கிலும் மிகவும் ஏற்றமுண்டு. அத்தகைய பெருமை பெற்று விளங்குவது **தஞ்சைமாமணிக்கோயில்** என்னும் **திவ்ய க்ஷேத்ரமாகும்.**

பராசரர் போன்ற மகரிஷிகள் தவப்பயன் பெற்ற இடமாய், நூற்றெட்டு திவ்ய தேசங்களிலொன்ருய், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்களுடைய மங்களாசாஸனம் பெற்றதாய், ஸ்ரீமங்கிகமாந்தமகாதேசிகன் முதலிய ஆசாரியர்கள் உகந்தருளினதாய், பிரம்மாண்ட புராணத்தில் சிறப்புப் பெற்றதுமாயிருக்கின்றது இந்தப் புண்ணிய ஸ்தலம்.

பராசர மகரிஷி தமது சிஷ்யர் முதலியவர்களோடு இந்தத் திருப்பதியிலே தவம் செய்து சித்திபெற்றதாக இப் புராணம் கூறுகிறது. இம் மகரிஷியின் பிரபாவம் வேதத்திலே மேன்மையாயுள்ளது. "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" (தை-ஆ-1-ம்) (பராசரர் குமாரரான வியாசர் சொன்னர்) என்று இவர் சம்பந்தத்தையிட்டு வியாசருக்குள்ள ஏற்றத்தைக் காட்டியது வேதம்.

இந்தப் பராசரமகரிஷியின் பிதாவாகிய சக்தி என்னும் ரிஷியை அசுரனெருவன் விழுங்கிவிட்டான். இவர் கோபங்கொண்டு யாகம்செய்து அதன்மூலம் அநேக அசுரரை அழித்துவிட்டார். அதன்மேல் இவருடைய பிதாமகரான வசிஷ்டர் இவரைச் சமாதானப்படுத்தியுள்ளார். பின்பு புலத்தியர் என்னும் மகரிஷியும் " உமக்குப் பரதேவதையைப் பற்றிய தெளிவு

ஏற்படவேண்டும், நீர் புராணம் ஒன்றை இயற்றப்போகிறீர்'' என்று அருள்செய்தார். அதை வசிஷ்டரும் ஆமோதித்துள்ளார். அவர்கள் அருளினல் இந்தப் பராசரமகரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணத்தை இயற்றினர். இதைப் 'புராணரத்னம்' என்று ஸ்ரீ ஆளவந்தார் முதலிய பூர்வாசாரியார் வழங்குகிருர்கள். இப்படிப்பட்ட மகா பிரபாவமுள்ள பராசரமகரிஷீ இந்தத் தலத்தில் தவம்செய்ததின் பேரில் நீலமேகப்பெருமாள் பிராட்டியுடன் சேவை சாதித்து வரம் அருளி அவரை அனுக்கிரகித்துள்ளார் என்று இப்புராணத்தில் கூறியிருக்கிறது. இவ்வாருகவே ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் தஞ்சை நாயகியுடன் மார்க்கண்டேய மகாமுனிக்கு நேரில் வந்து அருள்செய்ததும் இந்தத் திவ்ய தேசத்திலேயே. இப்படி மகரிஷிகள் தவப்பயன் பெற்ற பெருமையும் இந்தத் திருப்பதிக்கே சிறப்பாகப் பொருந்தியுள்ளது.

பூதத்தாழ்வார் மங்களாசாசனமாவது—

'' தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண் பொருப்புவேலை, தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தையென்பரே
ஏவல்ல எந்தைக் கிடம்'' (இ.தி.பா. 70)

என்பது. ''ஆச்ரிதர்களுக்காக ஸர்வேசுவரன் சன்னிதி பண்ணுவது அவர்களின் இருதயத்திலும், தஞ்சை முதலிய தலங்களிலும் என்கிருர்கள்'' என்பது கருத்து. இப் பாசுரத்தில் தஞ்சையைப் பிறவிடங்களைவிட முற்படக் கூறியிருத்தலினல் மற்ற தலங்களைவிட இத்தலத்திற்குரிய முதன்மை தோன்றுகின்றது.

மற்றும்,

'' எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாணுள்
அன்பினல் அரக்கர் வெருக்கொள நெருக்கி
யவருயிர் செகுத்த எம் அண்ணல்!
வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணுவென்னும்நாமம்''

(பெரி. தி. ப. 1. தி. 1. பா. 6)

என்பதும்,

"உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்
உலகுய்ய நின்றானை, அன்று பேய்ச்சி
விடம்பருகுவித்தகனைக் கன்று மேய்த்து
விளையாட வல்லானை, வரைமீகானில்,
தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக்கு ஓர் பெருநெறியை, வையங் காக்கும்,
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே"
(பெ. தி. ப. 2. தி. 5. பா. 3)

என்பதும் திருமங்கைமன்னன் அருளிச்செய்தவை.

1

## ஸ்ரீ நீலமேகப்பெருமாள் கோயில்

தஞ்சை விண்ணாற்றங்கரை மேற்குக்கோடியில் திருவையாற்றுப் பெருவழியின் அணித்தாய் அமைந்துள்ளது.

பெருமாள் திருநாமம் : ஸ்ரீ நீலமேகப்பெருமாள்

தாயார் : செங்கமலவல்லித் தாயார்

கிழக்கே திருமுகமண்டலம் : வீற்றிருந்த திருக்கோலம்.

பராசர மஹரிஷிக்குப் பிரத்யக்ஷம் : சௌந்தர்ய விமானம்

கன்னிகா புஷ்கரிணி — அம்ருத தீர்த்தம்.

ஸந்நிதியில் ஸ்ரீ பெருமாள் திருவடிகளின்கீழ்த் தஞ்சகன் அபயக் கோலமாக வீழ்ந்திருப்பது காணலாகும்.

தனிக்கோயில்கள் : நாச்சியாருக்கும், ஆழ்வாராதிகளுக்கும், பின்னதில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியும் உள்ளது. பிரம்மோத்ஸவம் ஆகி வைகாசி மாஸம் விசாகத்தில் வம்புலாஞ் சோலையில், ராஜா கோரிக்குளம் என்று சொல்லப்படுகிற பராசரர் புஷ்கரணியில் தீர்த்தம். புரட்டாசி மாஸத்தில், ஸ்ரீதேசிகனும் உத்ஸவம் கண்டருள்கிறார். மற்ற திவ்ய தேசங்களிலில்லாத முறையாக, இக் கோயிலில் தஞ்சகாசுரன் வேண்டுகோளுக்கிணங்கிக் கருடஸேவையில் ஸ்ரீ ஆண்டாள் சமேதராய் ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஸேவை ஸாதிப்பது காணலாகும்.

கோயில் முன் மண்டபத்திலுள்ள ஒரு கல்வெட்டு சாஸனப்படி, 1870 நவம்பர் 10உ பிரமோதூத, அர்ப்பிசி 16-ம்

தேதியில் ஸந்நிதி கருடமண்டபம் 15 அங்கணமும், தளவரிசையும், தஞ்சாவூர். மென்னூல் ரெங்கசாமி என்பவரால் சொந்தத்தில் கட்டி முடித்துப் பிரதிஷ்டையாயின என்பது தெரிகிறது.

வெகுகாலமாக த்வஜஸ்தம்ப நிர்மாண பிரதிஷ்டையில்லாமலிருக்கும் குறையை நிவர்த்திக்க ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ மகாதேசிகன் ஸ்வாமிகளால் 10—1—1936 முதல் லக்ஷார்ச்சனை ஆரம்பித்து, யுவ-ஹூ பங்குனி-மீ 8-உ (20—3—1936)ல் நூதன த்வஜஸ்தம்ப பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

## 2

## தஞ்சை மணிபர்வதப்பெருமாள் கோயில்

### (மணிக்குன்றன்)

திருநாமம் ஸ்ரீமணிக்குன்றப்பெருமாள், ஸ்ரீஅம்புஜவல்லித் தாயார், கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். முன்காலத்தில் களிமோடு கிராமத்தின் கீழ்புறமாக அமைந்திருந்த இத்திருக்கோயில் பிற்காலத்தில் விண்ணாற்றங்கரையில் இப்போதிருக்கும் தலத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இச்சந்நிதி மங்களாசாசனச் செய்யுள் :—

என் செய்கே னடியேனுரையீர் இதற்கென்று
　　மென்மனத்தே இருக்கும் புகழ்
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
　　நெஞ்சமன்றிடந்தவனைத் தழலே புரை
மின் செய் வாளரக்கன் நகர்பாழ்படச்
　　சூழ்கடல் சிறைவைத்து இமையோர் தொழும்,
பொன்செய்மால் வரையை மணிக்குன்றினை
　　யன்றியென்மனம் போற்றி யென்னுதே.

(பெ. தி. 7-ப. 3-தி. பா. 9)

ஸந்நிதிக்கு நுழையும் முன் மண்டப வாயிற்படிகளில் பொறித்துள்ள கல்வெட்டால் மாதுஸ்ரீ காமாக்ஷியம்பா பாய் சாகேப் அவர்களின் ஆக்ஞைப்படி ஸ்ரீநாகராஜ ராமாஜி பண்டிதரவர்களால், இக்கோயிலில் நூதனமாகக் கட்டைகோபுரம்,

கதவுள்படவும், திருமதில்சுவர், பிராகாரம், தளவரிசை பலி பீடம், கருடன் கோயில் இவைகளைத் தாபித்தும், 1892 நவம்பர் 9-உ புதன்கிழமை ஷை ஆழ்வார்களுக்கும் பிரதிட்டை செய்யப்பெற்றதென்று கூறுகிறது.

இக்கோயிலில் தஞ்சை மூக்குக்கண்ணுடி வியாபாரம் த.கி. வீராசாமி நாயுடு அவர்களின் பாட்டனுர் சுப்பய்யாநாயுடு அவர்களால் கருட வாகனம் செய்து கொடுக்கப்பெற்றது. அவர்கள் சந்ததியில் த. வீ. ரகுபதி நாயுடு அவர்களால் ஆண்டு தோறும் பங்குனி-மீ உத்தரத்தில் கருடசேவை நடத்தப் பெற்று வருகிறது.

சமீபத்தில் விமானஸ்தூபி களவு செய்யப்படவே, தஞ்சை கரந்தை ஸ்ரீ கோ. ராமையா பிள்ளையால் நூதனமாக 1937 ஆகஸ்ட் 19ம் தேதி பிரதிட்டை செய்யப்பெற்றது.

## 3

### தஞ்சையாளி நகர்

## ஸ்ரீமேலசிங்கப்பெருமாள் கோயில்

இத் திருக்கோயில் பூர்வத்தில் தஞ்சை மேலவெளித்தோட்டத்தில் இப்போதும் காணப்படும் சிங்கப்பெருமாள் குளம் என்னும் சூரியபுஷ்கரணியின் மேல்கரையில் விளங்கியிருக்க, மற்ற திருக்கோயில்களை விண்ணுற்றங்கரைக்கு மாற்றும் போது, ஸ்ரீமேலசிங்கப்பெருமாள் சந்நிதியும் அவ்விடத்தில் பெயர்த்துப்போய் நிர்மாணிக்கப்பெற்றது. தஞ்சைக் கோட்டைக் கீழ்க்கோட்டத்தில் கீழசிங்கப்பெருமாள் கோயில் என்ற சந்நிதி அமைந்துள்ளதாலும் இந்தத் திவ்யதேச ஆதிக் கோயில் மேலவெளித் தோட்டத்திலுள்ள சந்நிதியாதலாலும் இதனை மேலசிங்கர் என அழைக்கலாயிற்று.

திருநாமம் : ஸ்ரீநரசிங்கப்பெருமாள் - ஸ்ரீ தஞ்சைநாயகித் தாயார்; கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், மார்க்கண்டேய மகாமுனிக்குப் பிரத்யக்ஷம். வேத சுந்தர விமானம். சூரிய புஷ்கரணி. ஸ்ரீராமதீர்த்தம்.

பிரம்மோத்ஸவம் சித்திரை-மீ சுவாதியில் தீர்த்தம். திருவத்யயனேத்ஸவமும் நடைபெற்றுவருகிறது.

தனிக்கோயில்கள் :—ஸ்ரீ தஞ்சை நாயகித் தாயாருக்குக் கோயிலும் ஆழ்வார்களுக்குத் தனிமண்டபமும் உண்டு.

மாதுஸ்ரீ காமாக்ஷியம்பாபாய் சாகேப் அவர்கள் காலத்தி லேயே இக்கோயிலின் சுற்று மதில் கட்டியும், முன்கட்டை கோபுரம், கதவுள்படவும், ஆழ்வார் சந்நிதி மண்டபமும், தளவரிசையும், அமைக்கப்பெற்றன எனத் தெரிகிறது.

இச்சந்நிதிக்கு வெகுகாலமாக த்வஜஸ்தம்ப பிரதிட்டை யில்லாத குறையை 1938-ல் விண்ணாற்றங்கரை ஸ்ரீவஞ்சுளத் தம்மாள், ஸ்ரீ து. கிருஷ்ணமாசாரியார் கைங்கர்யமாக நூதனப் பிரதிட்டையாகி இருக்கிறது.

தஞ்சைப் பள்ளியகரம் த்வாதச கருடாழ்வார் தாஸரென் னும் R. V. V. நாராயணசாமி ராஜு அவர்களால் திவ்யதேசப் பெருமாள்களுக்கும் மற்றும் பெருமாள்களுக்கும் துவாதச கருடசேவையென 1906 ஞு முதல் பிரதி ஆனி-மீ சிரவணத் தில் உபயமாகவும், தேவஸ்தான உதவியுடனும் 1930-ஞு வரை நடைபெற்றுவந்தும், பின்பு நிறுத்தப்பட்டு, மறுபடியும் 1935-ம் ஆண்டுமுதல் தஞ்சாவூர் இராமாநுஜதர்சநஸபையா ரால் திவ்யதேச கருட சேவையுடன் நவநீத சேவையும் நடத் தப்பெற்றுவருகிறது.

## ஸ்ரீ ஆநந்தவல்லியம்மன் - தஞ்சபுரிஸ்வரசுவாமி கோயில்

விண்ணாற்றங்கரை ஸ்ரீ ஆனந்தவல்லியம்மன் கோயில், சோழர் காலத்துக்கு முந்திய குபேரன் பூசித்த பழங்கோயி லாகவேண்டும். தஞ்சைநகரின் தலபுராணத்திற்கியைய ஸ்ரீ காளிதேவி தாரகாசூரனைக் கொன்றதன்பின் சூலத்துடன் ரிஷிகள் முதலானவர்களுக்கு ஆனந்தத்தையளித்த திருக் கோலத்துடனும் ஸ்ரீ தஞ்சபுரீசருடன் இனிதமர்ந்த அவசர மானது இத் திருக்கோயிலாகும். தஞ்சைத் தலத்திற்குப் பெயர்கொடுத்த பரமசிவமாகவும், தேவியார் அதன் காப்புத் தெய்வமாகவும் ஆயினமை காணலாம்.

இக்கோயிலின் புதிய மண்டபத் தூண்களிலொன்றில் வெட் டப்பட்டிருக்கும் சாஸனத்தின் மூலம் "சிவாஜி மகாராஜா ஸாஹேபவர்களுடைய ஜேஷ்ட பத்னியவர்களுமான ஹர் ஹைனெஸ் மாதுஸ்ரீ காமாக்ஷியம்பாபாய் ஸாஹேபவர்க ளுடைய ஆக்ஞையின்பேரில் ஏஜண்டு நாகராஜ ராமாஜி பண் டிதர் அவர்களால் ஸ்வாமி ஸந்நிதானத்தில் நூதனமாக

மூன்று நிலத்தில் கோபுரமும், வெள்ளைக்கல்லால் மட்டப்பாடு முப்பத்தி 18 அங்கணத்தில் அகலம் கிஜம் 11 நீளம் கிஜம் 25 விஸ்தீரணமுள்ள நர்த்தன மண்டபமும் பருகாரத்தில் செங்கலால் தளவரிசையும் அரைகுறையாய் இருந்த பருகாரத்தின் மதிளை பூர்த்தியாகவும் ஸ்வாமி அம்மன் விமானங்களைப் பழுது பார்த்தும் கலி. 4983. சாலிவாஹன சகா. 1804. சித்திரபானு-ஷூ மாசி-மீ 16உக்கு 1883ஷூ பிப்ரவரி மாதம் 26 தேதியில் ஆரம்பித்து 1889ஷூ மே மாதம் 31-ம் தேதியில் பூர்த்திசெய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது" என்று தெரிகிறது.

மற்றொன்றும் ஸ்ரீஅம்மன் வெளிமண்டபத்தில் மகாராட்டிர லிபியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டால் ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்கள் 1783 வருஷத்தில் ஸ்ரீ ஆனந்தவல்லியம்மன் சந்நிதியில் நர்த்தன மண்டபம் செங்கலால் கட்டப்பட்ட தருமம் என்பது கண்டிருக்கிறது.

## மற்றும் கோயில்கள்

இதன் உபகோயில்களாக, **சங்கிலிப் பிள்ளையார்**; மற்றொரு **விநாயகர்**; ஸ்ரீமேலசிங்கருக்கு **ஹனுமார்** சந்நிதிகளும் சமீபத்தில் பிரத்தியேகமாக உள்ளன.

**ஸ்ரீகலியாண வெங்கடேசப்பெருமாள்** சந்நிதி விண்ணாற்றங்கரையில் அமைந்திருந்த பூர்வ கோயிலாக இருக்கலாம். இது திருவையாற்றுப் பெருவழிக்கு வடக்கே ஸ்ரீ நீலமேகப் பெருமாள் சந்நிதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. தாயார் திருநாமம்: ஸ்ரீ அலமேலுமங்கைத் தாயார். புரட்டாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம் நடந்து வருவது.

ஸ்ரீ மணிக்குன்றன் கோயில் கல்வெட்டு மற்றொன்றால் மாதுஸ்ரீ காமாட்சியம்பாபாய் சாகேப் அவர்களின் ஆக்ஞைப்படி, 1892 நவம்பர் 9உல் இக்கோயில் உட்பிரகாரமதில், பிராகார தளவரிசை புதிதாகக் கட்டப்பெற்றதென்று தெரிகிறது.

**வேளூர் வரதராஜப்பெருமாள் கோயில்** ஸ்ரீ நீலமேகப்பெருமாள் சந்நிதிக்கு அடுத்து திருவையாற்றுப் பெருவழிக்குத் தெற்கே அமையப்பெற்றதாகும்.

ஸ்ரீபெருமாள், ஸ்ரீதேவி பூதேவிகளுடன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம். ஸ்ரீபெருமாள் உற்சவத் திருமேனி மாத்திரம் உள்ளது. கோயில் முற்காலத்திய பிரதிட்டையெனவே கூறலாம்.

ஸ்ரீ சொக்கநாதர் கோயில் விண்ணாற்றங்கரை இராஜா சத்திரத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமி கோயில் என்றதொரு சன்னிதி தஞ்சை விண்ணாற்றங்கரையில் திருவையாற்றுமார்க்கத்துக்குச் செல்லும் திரும்பும் வழியிலமைந்துள்ளது. இது தஞ்சை வெங்கடராயர் அவர்களால் எடுப்பித்து, தற்போது அவர்கள் சந்ததியில் திரு. த. ஆ. இராமச்சந்திர ராயரவர்கள் பரிபாலனத்திலிருந்து வருகிறது.

ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயில் விண்ணாற்றங்கரையில் தஞ்சை நகராண்மைக் கழகத்தார் தண்ணீர் பம்பிங் நிலையத்திற்குக் கீழ்புறம் அமைந்துள்ளது.

ஸ்ரீகாளத்தீசுரர் கோயில், விண்ணாற்றங்கரையில் தஞ்சை நகராண்மைக் கழகத்தார் தண்ணீர் பம்பிங் நிலையத்திற்கு மேற்புறமுள்ளது.

லக்ஷ்மீராஜபுரம் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி என்கிற ஸ்ரீ தளிகேசுவர சுவாமி கோயில், தஞ்சைப் பள்ளியக்ரகாரத்தில் விண்ணாற்றின் வடகரையில் அமைந்துள்ள அழகிய கோயில். தஞ்சை சரபோஜி மன்னரின் ஜனக மைத்துனராகிய வ. ஸ்ரீ ராமோஜீ சர்ஜேருவ் காண்டிகேருவ்சாகெப் அவர்களால் திருப்பணி செய்யப்பெற்றதென்பர். அவர் மிக்க சிவப்பற்றுடையவராகவும், மன்னரின் தமக்கையாராகிய தனது மனையாளின் நகைகளின் திரவியங்களைக் கொண்டு இக்கோயிலை எடுப்பித்ததாகவும் கூறுவர். கோயிலுக்கு எதிராக ஆற்றங்கரையில் புஷ்ய மண்டபமும், படித்துறையும் கிழக்கில் திருக்குளமும் பொருந்தியது, கோயிலுக்காக அக்கிரகாரம் ஏற்படுத்தி ஆறு வீடுகள் கட்டி, நஞ்சை புஞ்சை நிலங்களுடன் பிராமணர்களுக்குத் தானம் செய்துள்ளார்கள். இந்தக் குடும்பத்தினரின் பாதுகாப்பில் நாளடைவில் இருந்தும், வ. ஸ்ரீ செகோஜீ சுபான்ஜீ மாடிக் ருவ் சாகேப் காலத்தில் திருப்பணி, கும்பாபிஷேகம் நடந்தும், தற்போது அவர் குமாரர் வ. ஸ்ரீ கோபாலருவ் சுபான்ஜீ மஹாடிக் ருவ்சாகேப் ஆளுகையிலுள்ளது. இக்கோயிலை எடுப்பித்தவருடையதும், அவர் சுவீகார குமாரர் வ. ஸ்ரீ அமிர்த ருவ் சர்ஜேராவ் காண்டிகே அவர்களுடையதும், அவரவர்கள் பத்தினிமார்களினுடையதுமான உருவச்சிலைகள் இக்கோயிலில் உள்ளன.

# அரசூர் திருக்கோயில்கள்

**அரசூர் ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில்,** தஞ்சை திருவையாற்றுப்பாதை மேற்பக்கத்தில் அரசூர் கிராமத்திற்குத் திரும்பும் பாதைக்கு எதிரில் பழமையான சுப்பிரமணியர் கோயில் சமீபத்தில் புதுப்பித்திருப்பது காணலாம். இதன்கண் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கும் தமிழ் நாட்டில் ஒப்புயர்வற்று விளங்கிய பொய்யாமொழிப் புலவருக்கும் தொடர்பு உண்டு என்பர். புலவர் ஊர்கள்தோறும் சென்று வருங்கால் ஒருநாள் மதுரையை நோக்கிப் புறப்பட்டு இடையிற் பாலைவனத்தைக் கடந்து பெரிதும் இளைப்புடன் வரும்போது, முருகக்கடவுள் ஒரு வேடுவவுருக்கொண்டு வந்து "நீவிர் யாவர்" என்று கேட்க, "பொய்யாமொழி யென்னும் பெயருடைய புலவன் யான்" என்று கூற, "ஆயின் என்மீது ஒரு கவி பாடும்" என்று முருகர் சொல்ல, புலவர் "உன் பெயர் யாது" என்று கேட்க, முருகர் 'முட்டை' என்றனர்; என்றலும் புலவர்—

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே – மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு"

என்று அம் முருகவேளாகிய வேடனைப் பாடினர் என்றும், இவ்விடத்தில் முருகர் தம் உண்மையுருவத்தைப் புலவருக்கு வெளிப்படுத்தி, அவரது வழி இளைப்பையும் மாற்றித் தமது உண்மையுருவத்தைப் புலப்படுத்தி அநுக்கிரகித்துச் சென்றருளினர் என்றும் கூறுவர். இக்கோயில் அரசூர் சைவப்பெருமக்களின் பராமரிப்பில் இருப்பதாகத் தெரிகிறது.

**அரசூர் ஸ்ரீ அகஸ்தீசுவர சுவாமி கோயில்,** தஞ்சையிலிருந்து திருவையாற்று வழியில் 5-மைலுக்கு அணித்தாக அரசூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீ அகஸ்தீஸ்வரசுவாமி ஆலயம் உள்ளது. கோயில் சோழர்-நாயக்கர்களது இடைக்காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்தில் அரசூர்; சிற்றரசூர்; பேரரசூர், தென்மாவை, பூந்துருத்தி, கொத்தமல்லி, கண்டியூர், குருகாவூர் என்னும் ஊர்களுக்குத் தலைவனை

சீநக்கன் என்னும் சிற்றரசனின் இராஜதானியாக இருந்தது. சீநக்கன் மிக்க கொடையாளி. இவ்விடத்தில் இவனுக்கும் பொய்யாமொழிப் புலவர் என்ற புலவர் பெருமானுக்கும் உண்டான நட்பின் திறத்தையும் தமிழ் அருமையையும் தமிழுலகம் பாராட்டியுள்ளது.* பொய்யாமொழிப் புலவர் அரசனைப் பிரிந்து வேற்றிடம் சென்றிருந்த சமயம் அரசன் இறந்தானென்று கேட்டுப் புலவர் ஓடோடி வந்து அரசனைத் தகனம் செய்யப்போகும் சிதையில் கிடத்தியிருக்கக்கண்டு தன்னையும் அவனுடன் சேர்த்துச் சககமனம் செய்விக்க வேண்ட, ஊராரும் மற்றோரும் அதனைத் தடுக்கவும், அங்குள்ளார் ஒருவர், 'இறந்த அரசனே அதற்குச் சம்மதித்தால் தன்னிஷ்டப்படி நிறைவேற்றிக் கொள்ளலாகுமென்ன' புலவர் அதற்கிசைந்து,

"அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலக மேறினாய்—நன்று நன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட"

என்னும் அருமைப் பாடலைக் கூற, இறந்த உடலும் திரும்பிப் புலவருக்கு இடங்கொடுக்க, அவனுடன் தீப்பாய்ந்து உயிர் நீத்தனர் என்ற செய்தி இத்தலத்தைப் பொறுத்தது.

* செந்தமிழ் V. 12, p. 542.

# கருந்திட்டைக்குடித் திருக்கோயில்கள்

## ஸ்ரீ கோடியம்மன் கோயில்

ஸ்ரீ கோடியம்மன் கோயில் புராதன பிரதிஷ்டையாகவும் நகர்காப்புத் தெய்வமாகவுமிருத்தல் வேண்டும். இப்போது தஞ்சைக் கரந்தை விண்ணாற்றங்கரை பெருவழியில் அமைந்துள்ளது. ஆதிக் கோயில் தஞ்சையின் வடமேற்கில் பொந்திரிபாளையத்தினருகே அமைந்திருந்தும், பிற்காலத்தில் அங்கிருந்த மணிக்குன்றன் திருக்கோயிலும் மற்றவைகளும் விண்ணாற்றங்கரைக்கு மாற்றப்பட்டபோது இச்சன்னிதியும் இப்போதிருக்கும் தலத்தில் சாந்தாகார உருவமாகப் பிரதிஷ்டையாகியுள்ளது.

தஞ்சைத் தலமான்மியத்திற்கிணங்க, விஷ்ணுவால் தஞ்சகன், தண்டகன் முதலாய அசுரர்களிடமிருந்து இந்த நகரை மீட்கவும் ஸ்ரீ காளிதேவி தாரகனை வதஞ்செய்யவும், பராசரரும் மற்ற முனிவர்களும் அப்போது இலங்கிய ரூபத்துடன் நின்று காத்தருளவேண்டுமென வேண்ட, அம்பிகையும் கோட்டீரவமென்கிற சடைமுடியுடைய கோடிக்காளியாகவும், சாமளை ரூபமாய்ப் பச்சைக் காளியாகவும், தாரகனின் உதிரம் தம்மேல் சோரியிருந்தமையால் பவழக்காளியாகவும், கோட்டீர சாமள பிரவாளகாளியாய் நின்று காத்தருளுகிருள் என்பர்.

சரித்திரகால சோழவமிசத்திற்கு அடிகோலினவனை விஜயாலய சோழன் முத்தரையர்களிடமிருந்து தஞ்சைநகரைக் கைப்பற்றி, அதனைப் புதுப்பித்து அங்கு நிசும்பசூதனி என்ற துர்க்கைக் கோயிலை நிர்மாணித்தான் என்று முதலாம் இராஜேந்திர சோழனது திருவாலங்காடு செப்பேட்டில் * பொறித்துள்ளபடி, இக்கோயிலானது பொந்திரி பாளையத்திலிருந்த ஆதிக்கோடிக் காளியம்மன் கோயிலாக இருத்தல் வேண்டும். இதற்கேற்ப அங்குள்ள ஆதிக்குடிகளும், இராஜராஜசோழன் நாளது வரையிலும் தஞ்சைப் பெரியகோயில் சித்திரை வருடவிழா அஷ்டகொடியன்று பெருமைப்படுத்தும் அறுபத்து நான்கு மனைச் செட்டியார் குடிகளும் இத் தேவியாரைத் தம் குலதெய்வமாகக்கொண்டு போற்றி வருகின்றார்கள்.

---

* Vide S.I.I. III, p. 418 ; also Epi : Ind : XVIII, p. 42.

புராதன காலமாக இத்தலத்தில் குடியிருந்துவந்த பொந்திரி ஜாதியார் கோடியம்மனின் புராதன ஐதீக வரலாற்றை வருடந்தோறும் ஆட்ட ரூபமாக ஆடிவருங்கால், மகாராட்டிர மன்னர் ஒருவர் காலத்தில் அவ்வாட்டத்தினிடையில் ஆவேசமுற்று ஒருவரையொருவர் கொன்றுமாய்ந்தனர் என்றும், அரசன் கவலையுற்றுழி, தேவியானவள் அசரீரியாக தாம் ஒரு திரையின் நிழலில் தோன்றுவதாகத் தெரிவிக்கவும் அரசன் திரையிட்டுத் தீபங்கள் ஏற்றி ஆராதனை செய்ய, ஸ்ரீ காளிதேவியும், பச்சைக்காளி பவழக்காளி ரூபங்களாக அத்திரையின்மீது தோன்ற, அதுமுதல் அத்திருவுருவங்களையே உருவகப்படுத்தி ஆட்டை விழாவில் பங்குனிமாதந்தோறும் பதினொரு நாள் கொலுவிருத்தி, தாரகனைச்சங்கரித்த தினமாகிய மங்களவாரத்தில் நகர்முழுதும் பவனிவருதலாகிய விழாவும் நடந்துவருகின்றது என்றும் ஒரு கதை வழங்குகிறது. விழாத்தினங்களிலொன்றில் இக்காளிதேவியைக் கழுமோடு கிராமத்துக்கும் எழுந்தருளச்செய்து, அங்கொரு நாள் தங்கி மிக்கச் சிறப்புகளும் வழிபாடுகளும் நடந்து வருகின்றன.

மற்றும் இத்தேவியின் உத்ஸவத் திருமேனிகள் சுமார் 35-ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சை மேல இராஜவீதியின் மத்தியில் மேலசரகில் உள்ள **ஓம் அழகிய பிள்ளையார்** கோயிலின் தென்பாரிசத்தில் **உற்சவக்கோடியம்மன்** சந்நிதியாக பிரதிட்டித்து விளங்கி வருகின்றது. இக்கோயில்களுக்குப் பரம்பரை பூசாரியாகத் தற்போதுஉள்ளவர்கள் திரு சா. வெங்கடாசலம் பிள்ளை, ம. சுந்தரம் பிள்ளை, ரா. கரும்பாயிரம் பிள்ளை ஆவர்.

**ஸ்ரீ கருவேலநாத சுவாமி என்கிற வசிஷ்டேசுவர சுவாமி கோயில்,** அம்மையார் திருநாமம் பெரியநாயகி: **திரிபுரசுந்தரி அம்பாள்.** தஞ்சைக் கருந்திட்டைக்குடி கீழ்பாகத்திலுள்ள புராதனச்சோழர் கோயிலாகும். இத்தலத்திற்குப் பதும புராணத்திலும், பிரமாண்ட புராணத்திலும், சூத முனிவரால் அருளிச்செய்த அளகாபுரி புராணம் என்ற **"சமீவன க்ஷேத்திர மாகாத்மியம்"** * என்ற வரலாறு ஒன்றுண்டு. ஆதியில் இந்த இடம் வில்வ வனமாக இருந்ததென்றும், பின்பு குபேரன்

---

* கி. வாசுதேவ நாயக்கர்—**தஞ்சைமாநகரத் தலபுராணம்** *1893.* இந்நூலில் இதன் விரிவான வரலாற்றை அறிந்துகொள்க. Also vide, Sarasvathi Mahal Library MS. No. 1838. அழகாபுரீ என்ற சமீவன க்ஷேத்திரபுராணம்.

இவண் வந்து நகரமொன்றுண்டாக்கிச் சிவபிரானை வழிபட்டுத் தவஞ்செய்த சிவமூர்த்தங்கள் அழகீசர், அம்மை அசலாம்பிகையென்றும் தெரிகிறது. கருங்குட்ட மிருப்பதைக் கண்ட ஒரு சோழனுக்கு, சிவபெருமான் வேங்கையாகத் தோன்ற அதனைத் துரத்திக்கோண்டு செல்ல அது இத் திருக்குளத்தில் மறையவும், அரசன் அதனில் முழுகி எழ, குட்டநோய் தீர்ந்தானென்றும், அதுபற்றி அவ்வேந்தன் இக் கோயிலை எடுப்பித்துத் திருவிழாக்களை ஏற்படுத்தியதாகவும் சமீவன புராணங் கூறும்.

இக்கோயில் அப்பர் சுவாமிகளால் குறிக்கப்பெற்ற தேவார வைப்புத்தலங்களிலொன்ருகும்.[A] இக் கோயிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள 10 கல்வெட்டுகள் * அரசாங்க கல்வெட்டுப் பரிசோதகர்களால் ஆராயப்பெற்று "தென்னிந்திய கல்வெட்டுகள்" என்று வெளிவந்துள்ளன. ஈண்டு முழுதும் பிரசுரிக்கப்படுகின்றன. (பக்கம் 91—95 பார்க்க). 42-நெ. கல்வெட்டால் மதுராந்தகச் சோழன் மகன் கண்டராதித்தனுல் இக்கோயில் விளக்குகளுக்கு நெய்க்காக ஆடுகள் தானமாக விடப்பட்டதும்; நெ. 43-ல் மற்ருெரு தானமும், இராஜேந்திர சோழனது 3-வது வருடத்தியதான நெ. 44, 45-லும், இராஜராஜனது நெ. 46-லும் இக்கோயிலுக்காக நிலம் வாங்கியதும், நெ. 50-ல் இராஜேந்திரனுல் சுவாமிக்குக் கொடுத்த தங்க கிரீடத்தைப் பற்றிய செய்தியும், நெ. 51ல் இரண்டு துவாரபாலகர் உருவங்களைக் கோயிலில் நிறுவியிருப்பதான விபரமும் குறிக்கப்பெற்றுள்ளன.

இக்கோயில் மேல்புறத்தில் அமர்ந்துள்ள தண்டாயுதபாணி சந்நிதியில் பொறித்துள்ள கல்வெட்டுக்களில் (1) "ஷை சந்நிதி மண்டபம் 1767-ஷு விசுவாசு அற்பிசி தனுர் லெக்னத்

---

A நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்மங்குடி
நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி
கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி
**கருந்திட்டைக்குடி** சடயக்குடி காணுங்கால்
விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி
வேதிகுடி மானிகுடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே.
—அப்பர், அடைவு திருத்தாண்டகம் 3.

* Vide, Epi. Rep: 1897, Ins. 39 to 51; also, South Indian Inscriptions (Texts) Vol. V, pp. 506—510,

தில் சுப்ரமணியன் குமாரன் சொக்கலிங்கம் என்பவர் ஷ்டி சந்நிதி மண்டபம் கட்டி கும்பாபிஷேகம் செய்தாரென்றும், (2) சாலிவாகன 1710 பிரபவ, தை மாதத்தில் மாதந்தோறும் சஷ்டி உபயம் செய்கிறவர் மண்டபம் கட்டின ஆறுமுக வாத்தியார் என்றும், (3) சாலிவாகன 1879 வெகுதான்ய, மாசி ஸ்ரீவசிஸ்டேச்வரசுவாமி கோயில் ஸ்ரீ தெண்டாயுதபாணி உத்ஸவ விக்கிரகத்திற்கு சன்னிதி ஏற்படுத்தி பிரதிஷ்டை செய்து தென்புறம் அலங்கார மண்டபம் கட்டி ஷஷ்டி உத்ஸவம் நடந்துவருகிறதும் தவிர விஸிஸ்ரீ தை-மீ’த்தில் சுவாமி கைங்கரிய சாமான்களுக்கும் மண்டப அறை எற்படுத்தப்பட்டது. யாசகத்தில் பில்கலெக்டர் குப்புஸாமி அய்யர் உபயம்” என்றும் கண்டிருக்கிறது.

இப்போது இக்கோயில் திருப்பணிகளில் சிறந்த பற்றுடையவர்கள் S. லெக்ஷ்மணஞ் செட்டியார் வகையரு ஆவர்.

வைகாசி பிரம்மோத்ஸவ திருவிழாவில் ஈடுபட்டும் அவர்கள் அதனை அரண்மனை தேவஸ்தானம் பொருள் உதவி பெற்று நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறப்புக்கள் :—**கோயில் திருவிழாக்கள்.**

இராணிசாகேப் மாதுஸ்ரீ தீபாம்பாபாய்சாகேப், மாதுஸ்ரீ ராமகுமாராம்பாபாய்சாகேப் அவர்களால் செய்துகொடுக்கப்பட்ட பல்லக்கில் பெரியநாயகி அம்மையாருடன் ஸ்ரீசப்தரிஷீசுவரரும், வெட்டிவேர் பல்லக்கில் அருந்ததி சமேத வசிஷ்டரும் ஆண்டுதோறும் வைகாசி பிரம்மோத்ஸவத்தில் கேட்டையில் சப்தஸ்தானம் என்னும் ஏழுதலச் சுற்றுவிழா 1895 வருஷம் வரை தஞ்சையிலும், கரந்தை விண்ணுறு, மகர்நோம்புச்சாவடி முதலிய இடங்களிலும் ஏழுதலமாக நடந்தேறியது; அதன் பின்பு தேவஸ்தான ‘ஏஜண்டு’ துரைசாமி அய்யங்கார் உதவியால் ஊரார்கள் வேண்டுகோளுக்கிணங்கி இப்போது (1) கருந்திட்டைக்குடி, (2) திருவிண்ணுறு, (3) தென்குடித்திட்டை, (4) கூடலூர், (5) கடகடப்பை, (6) புன்னைநல்லூர்–மாரியம்மன் கோயில், (7) தஞ்சை திருப்பூமாலைராவுத்தன் கோயில் ஆகிய ஏழு தலங்களில் திருவுலா சுற்றிவருகின்றது. ஒன்பதாம் நாளில் திருத்தேர் உலாவும் நடைபெறுகின்றது.

ஆடிப் பூரத்தில், வைத்தியம் த. ஜி. நாராயணசுவாமி பிள்ளை கொடுத்த மூலதனத்தின் வட்டியாலும், மற்றும் கரந்தைச் சைவப் பெருமக்களின் உதவியாலும் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு விழா நடைபெறுகிறது. இச் சிறப்புக்காகத் திருப்பணியாளர்கள் அழகிய புதிய கோரதம் ஒன்று சமீபத்தில் செய்தும், ஏழாந்திருநாள் கைலாச வாகனத்தைப் புதுப்பித்தும் உள்ளார்கள்.

இத்தலவிருக்ஷம் - வன்னி; தீர்த்தங்கள் நான்கெனவும், அவற்றுள் ஆலயத்தின் கீழ்புறமுள்ள கோயிற்றிருக்குளம்—சூரிய புஷ்கரணியாகும். மார்கழி-தனுர்மாதத்தில் தீர்த்தமும் இத்திருக்குளத்தில் இம்மாதம் முழுதும் முழுக்கு அநுசரிப்பதால் சகல பிணிகள் விலகுமென்பதும் பங்குனி-மீ 3, 4, 5 தேதிகளில் கோயிலில் சூரியபூஜைச் சிறப்பும் குறிப்பிடத்தக்கன.

---

## ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் கோயில் கல்வெட்டுகள்.

**No. 1406** of S. I. I. Vol. V. (Texts).

(A. R. No. 43 of 1897) on the same wall of a private gift.

ஸ்வஸ்திஸ்ரீ இப்படைஇல் இருபத்தி இரண்டு கல்லுகிவங் ஆணை காவன் தாயாரூச்சூம் தனக்கும் இருபத்தொன்று காசுபற்றின.

**No. 1407**

(A. R. No. 44 of 1897) of the 3rd year of Rajendra choladeva from the same place.

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகேஸரி பன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு மூன்றுவது நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து பிரம்ம தேயம் பேராலத்தூர் சபை யோம் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் கருந்திட்டைகுடி மகாதேவர்க்கு மூலப்ருத்தியரான ஆதிசண்டேஸ்வரதேவர்க்கு ந — — ஒட்டிக் கைத்திட்டு இட்டு குடுத்த பரிசாவது இத்தேவர்பக்கல் நாங்கள் கொண்ட காசு எழுபத்தஞ்சு; இக்காசு எழுபத்தஞ்சுங்கொண்டு இத்தேவர்க்கு சந்திராதித்தியவற் இறையிலி செய்து கொடுத்த நிலம். இவ்வூர் பாலாஸ்ரியன் பரமேஸ்வரன் ஸ்ரீ ராகவன்பக்கல் விலைகொண்ட நிலம் முள்ளங்கால் என்று பெயர் கூவப்படும் நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை வெள்ளானூர் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை இச்செய்கெ புகுதப்பாதை வாய்க்காலுக்கும் வெள்ளானூர் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை வெள்ளானூர் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கிடங்கல் நின்றும் கிழக்குநோக்கிப் போன வாய்க்காலுக்கும் வெள்ளானூர் நிலத்துக்குத் தெற்கும் ஆக இவ்விசைத்த பெருநான்.

## 1408

(A. R. No. 45 of 1897) in the same place of Rajendra I

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகேஸரி பன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு — — — ர் பாலா — — — த்த நிலவிலையாவண மாவது தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் கருதிட்டைகுடி மகா தேவற்கு மூலப்ருத்தியரான சண்டேஸ்வர தேவர்க்கு நான் விற்றுக் கொடுத்த நிலமாவது இவ்வூர் என் நிலம் முள்ளங்காலென்று பெயர் கூவப்படும் நிலம் பொத்தகப்படி நூற்று இருபத்தெட்டுக் குழி கொண்டது ஒரு மாவாக வந்த நிலம் து மா முக்காணி அரைக்காணி — — முந்திரிகை நிலமும் — — வெள்ளானூர் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்செல்லை இச்செய்க்கே புகுபாதை வாய்க்காலுக்கும் வெள் ளா — — — முந்திரிகைநிலமும் — — — வெள்ளானூர் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை இச்செய்கை புகுதபாதை வாய்க்காலுக் கும் வெள்ளா — — — லை காட்டக்கடவரல்லாதாராக இப் பரிசு விலைக்கறவிற்று பொருளறக்கொண்டு இக்காசு இருபதுக்கும் விற்று விலைபாவணம் செய்து குடுத்தேன். ஸ்ரீ சண்டேசுவர தேவர்க்கு பாலா ஸ்ரீயன் பரமேஸ்வரன் ஸ்ரீ ராசவனென் இவர் பணிக்க இந்நில விலையாவணம் எழுதினேன் இவ்வூர் மத்தியஸ்தன் நானூற்று வன் ஸ்ரீ கிருஷ்ணனுன கற்பகப் பிரியனென் இவை என் எழுத்து. இப்படி அறிவேன். இப்படி அறிவேன், வாதுலன் கண்ணன் உலோக நாதநாதனென். இப்படி அறிவேன் பாரதாயன் குஞ்சரமல்லன் நின்ற னென். இப்படி அறிவேன், பாரதாயன் நின்றன்கதினென். இப்படி அறிவேன். வைகாஸனன் பாரத்துவாசி வாசுதேவன் அப்பியேன் இப்படி அறிவேன் பாரதாயன் காடன் சாத்தனேன். இப்படி அறி வேன் பாரதாயன், பரமேஸ்வரன் திருவரங்கனென். இப்படி அறி வேன். பாரதாயன் பாண்டன் பாண்டனென். இப்படி அறிவேன், வைகாசனன் கைசிகன் சிதரன் அருமொழியேன்.

## 1409

(A.R. No. 46 of 1897) of Rajaraja I of a sale of land to the temple On the south and west walls of the same shrine.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள்ளக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத் தருளி வேங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும், தடிகைபாடி யம் குடமலைநாடும், கொல்லமும், கலிங்கமும் எண்திசை நிகழ ஈழம மண்டலமும், திண்டிறல்வென்றி தண்டாற்கொண்டு தன்எழில்வளர் ஊழியுள் எல்லா ஆண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ ராஜராஜகேஸரி பன்மர்க்கு யாண்டு பதி னேழுஆவது நித்தவிநோத வளநாட்டுநல்லூர் நாட்டுப்பிரம்மதேயம் ஸ்ரீராஜகேஸரி சதுர்வேதிமங்கலத்து மகாஸபை யோம் விற்ற நில விலையாவணம் நம்மையுடைய சக்கிரவர்த்தி பிராம்மண ஊர்களில் பிராமணர்க்குக் கீழ்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணி செய் மக்கள் பணிசெய்காணி யொழிய நின்றூர் காணி விற்கவென்று அருளிச் செய்ப புக்க சேழ்விப்படி அதிகாரிகள் வானவன் மூவேந்த வேளார் அடைவுகுத்துவித்து வரிசை விட்டபடி விற்று காசு தண்டுக என்று

அருளிச்செய்து உடையார் பணிமகன் சாத்தம்பியாரை ஏவ, இச் சாத்தம்பியார் தண்டமஹா சகயோகம்விற்ற நிலவிலையாவணம் நம்மையுடைய சக்கரவர்த்தி ஸ்ரீ பாராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவை பிராட்டியார் இந்நித்தவிநோதை வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வடகரை கருந்திட்டைக் குடி தேவர்க்கு திருநொந்தாவிளக்கு வைப்பதற்காக இ. ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் ஸ்ரீகுந்தவை பிராட்டியார்க்கு மகா சபையோம் விற்றுக்குடுத்த நிலமாவது இவ்விராஜகேஸரிச் சதுர்வேதி மங்கலத்து நரதோங்கவதிக்கு மேற்கு ஏழாங்கண்ணாற்று ராஜகேஸரி வாய்க் காலுக்கு தெற்கு மூன்ரும் சதிரத்து வடக்குடைய நிலம் மூன்று மாவும் நரதோங்கவதிக்கு மேற்கு 4-ம் கண்ணாற்று ராஜகேஸரி வாய்க் காலுக்கு தெற்கு 2-ம் (ஞ்ச) சதிரத்து தெற்கடைந்தவ காலிலெதற் கடைந்த ஒருமாவரையும் ஆகநான்மாவரை செய்யும் விற்று விலையா வணம் செய்துகுடுத்தோம் ஸ்ரீபராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந் தவை பிராட்டியாருக்கு ஸ்ரீராஜகேஸரிச் சதுர்வேதிமங்கலத்து மகா சபையோம் இந்நிலன் நான்மாவரைசெய்யும் விற்று விலையாவணம் செய்துகுடுத்துக்கொண்ட விலைப்பொருட்காசு ஈழக்காசு வாசிபடா மைச் செல்லுங்காசு எம்மில் இசைந்த விலைப்பொருட் காசு — இவ் எண்பத்தொண்ணரையை மூன்றுமா அரைக்காணிக்குக் கீழ்பட்ட ஜாதிகளிலார் காணிவிலைக் காசுக்கே செலவாக — — — டுப்பித்து இந்நிலத்திற்கு இதுவே விலையாவணமும் இதுவே போருமாவறுதிப் பொருள்மாவறுதிப் பொருள் சிலவோலையும் இதுவே ஆவதாகவும் இதுவல்லது வேறு பொருட் சில வோலை காட்டக்கடவர் அல்லாதா ராக இப்பரிசு ஒட்டி விலைக்கற விற்று பொருள் அறக்கொண்டு விற்று விலையாவணம் செய்துகுடுத்தோம், நம்முடைய சக்கிரவர்த்தி ஸ்ரீபராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவை பிராட்டியார்க்கு ஸ்ரீ ராஜகேஸரி சதுர்வேதிமங்கலத்து மகாசபையோம் பணியால் இவ்வூர் மத்யஸ்தன் திருவேங்கடவன் ஆயர் கொழுந்தினேன் இவை என் எழுத்து. இப்படி அறிவேன் இவ்வூர் வைகானசன் காச்யபன் ஸ்ரீவாசுதேவன் ஆராவமுதனேன் இப்படி பணியால் மத்யஸ்தன் வெங்கடவன் அரங்கனென் இவை என்னெழுத்து. இப்படி பணியால் இவ்வூர் மத்யஸ்தன் வில்லிற்கிடந்தானை மங்கலாச்சன் இவை என் எழுத்து. இப்படி அறிவேன் வைகானச சூத்திரத்து கௌதமன் கோவிந்தன் சிங்கப்பிரான் (னென்) எழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கம்பூதியான மங்கலோத்தமனென் எழுத்து. இப்படி பணியால் இவ்வூர் வெட்கோவன் புறம்பியனெச்சில் மண்டையன் எழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கம் உலகனை சாதுப் பிரியனென் இவை என்னெழுத்து. இப்படி பணியால் இவ்வூர் வேட் கோவன் பொய்யிலிதெவன் எழுத்து. இப்படி பணியால் இவ்வூர் வேட்கோவன் நக்கன் முத்தரையன் எழுத்து. இப் பதினேழாவது இவ்வோலை மேற்பட்ட நிலம் நான்மாவரையும் இத் தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வடகரைக் கருந்திட்டைக்குடி தேவர்க்கு சத்திராதித்யவல் நொந்தாவிளக்கு நன்கெரிப்பதற்கு இத்தேவர்க்கே உரித்தாகக் குடுத்தேன் பராந்தகன் குந்தவையேன் இப்படி பாடருளி செய்ய எழுதினேன். இவர்க்கு அதிகாரஞ்செய்கின்ற சிறுபெறு உடையான் கோ......................ரன் தென்னவன் எரியூர் நாட்டு வேளானென் இவை என் எழுத்து இப் பரிசு ............ அறிவேன். இப்பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கிழான் அங்காடி சூற்றிய்யென் இவை என் எழுத்து இப்படி குடுத்தமை அறிவேன்.

இப் பிராட்டியார் கணக்கு பூவனூர் உடையான் வர குணன் சிங்க ---- படி குடுத் — — — வேன் ஆழ்வார் கரணத்தான் மருதங்குடையான் மாயிலெட்டி ஆச்சனேன்.

## 1410

(A.R. No. 47 of 1897) On the west wall of the same shrine a fragmentary record of Rajaraja I

திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராஜ ராஜ தேவர்க்குயாண்டு இரு பத்தினுலாவது கும்ப — — — ஒரு நாள் பாண்டி குலாசனி வள நாட்டுத் தஞ்சாவூர் கூற்று — — —

## 1411

(A. R. No. 48 of 1897) On the same wall of the 24th year of Rajaraja I of a gift of a lamp.

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கைபாடியுநுளம்பாடியுந் தடிகைபாடியுங் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் எண்திசை புகழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டால் கொண்ட தன்னெழில் வளருழியுள் எல்லாயாண்டும் தொழுதெழவிளங்கும் யாண்டே செழிஞரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ ராஜகேஸரி பன்மரான ஸ்ரீ ராஜராஜா தேவர்க்கு யாண்டு இருபத்தி நாலு ஆவது ஸ்ரீராஜராஜதேவர் சிறுதனத்து சிங்களாந்தக தெரிஞ்ச குதிரைசேவகரில் அரங்கன் காரியான சோழவிச்சாதிர முத்தரயனேடு இளையபடை இருமுடி சோழவீரரில் காரிகுளிர்வாகை ஸ்ரீராஜராஜ தேவர் கர்னவில்லெகத்தொளம் எய்து காரிகுளிர்வாகைபட்டமையில் இவனுக்குறவுமுறை சடவரான காரினக்கத்தின் மகன் கண்டன் காரியும் காரிகொற்றத்தின் மகள் கண்டன் பொற்காரியும் இவள் கொழுந்தன் குட்டிபொன்னுடையும் உள்ளிட்டாரோடும் திருந்தி இந்த ஸ்ரீ கோயில்மகாதேவர்க்கு வைத்த நொந்தாவிளக்கு சந்திரா ஆதித்தவர் எரிக்கக்கடவாரித்தளியில் ஸ்ரீ கோயிலுடையார்கள்.

## 1412

(A. R. No. 49 of 1897)

A damaged record on the north wall of the same shrine.

ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரி பன்மர்க்குயாண்டு இரண்டு ஆவது புறம்படி கருந்திட்டைகுடி மாதேவர்கோயில் உடைய கௌசியன் கணபதி சூற்றியனும் பக்குடி சுதந்தியும் இவ்விருவோம் இதஞ்சாவூர் வீரசோழப் பெருந்தெருவில் திருதான சோமபிரான் கோயில் காணியுடைய ஆத்திரையன் சிதரந் தாழியான இராமேஸ்வர முடையானுக்கு இக்கருந்திட்டைக்குடி மாதேவர் கோயிலில் விற்றுகுடுத்த நாள் திங்கள் முப்பது வட்டத்து இருபதும் இவ்வூர் பிடாரிகோயில் நாள் இருபதும் நந்திமாகாளிகோயில் நாள் இருபதும் இவன் அனுபவிக்க நாங்கள் முவரொடந்தபடி.

## 1413

(A.R. No. 50 of 1897) On the same wall of the 5th year of Rajendra I, records gift of a gold diadem

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தையும்போர்ச்செயப் பாவையும் சீர்தனிக் செல்வியும் தன்பெருந் தேவியாராகி இன்புற நெடிதியல் ஊழியுள் இடைதுறை நாடும் துடருவன வேலிப்படர் வனவாசியும் சுள்ளிசூழ் மதிள் கொள்ளிபாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக்கடகமும் மாபெருந்தண்டால் கொண்ட கொப்பரகேசரி பன்மரான ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு ஐந்து ஆவது தஞ்சாவூர் புறம்படி கருவிட்டகுடி மகாதேவர்க்கு யாண்டு நான்காவதுவரை பலவகையாலும் இட்டார் இட்ட பொன்னால் மட்டங்களும் பொற்பூக்களும் கண்மணிகளும் நெருஞ்சிப்பூக்களும் பிடிலிகை வாரியால் கூடின பொன்னும் ஆக பலவகையாலுங்கூடி பொன் ஒன்பதுமாரி குடிஞைக்கல்லால்நிறை பொன் இருபதின் கழஞ்சே அரைக்காலினால் ராஜேந்திரசோழன் பட்டமொன்று.

## 1414

(A. R. No. 50 of 1897) On the same wall of the 5th year of Right of entrance, of the 10th year of Ko Parakesarivarman. Records the setting up of the images of two dvarapalakas near which the inscription is found.

ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி பன்மற்கு யாண்டு பத்தாவது இத்துவாரபாலகர் இருவரையும் செய்வித்து எழுந்தருளிவிச்சாள் செம்பொர்க் கொட்டத்து பட்டிநாட்டு பழம்பட்டினத்து இருக்கும் வெள்ளாட்டி அருணிலிமலைப்பிராட்டி.

## 1405

(A. R. No. 42 of 1897)

On the south wall of the central shrine in the Vasishteswara Temple at Karuntattangudi ; of Gandaraditya son of Madurantaka Gift of sheep for a lamp.

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகேஸரி பன்மற்கு யாண்டு பத்தாவது தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புறம்படிக் கருந்திட்டைக்குடி மகாதேவர்க்கு மதுராந்தகன் கண்டராதித்தன் வைத்த ஆடு தொண்ணூற்றாறும் கொண்டு நெய்யட்டக்கடவமன்றாடி.


## கருந்திட்டைக்குடி
## ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் கோயில்

இது கருந்திட்டைக்குடி பெருவழியில், மேல சரகில் உள்ளது; மதுரைத் திருவிளையாடலிற் குறித்த மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திர சிறப்புக்களை நினைப்பூட்டக் கூடியதோர் புராதனக் கோயிலாகும். இதற்குச் சம்பந்தப்பட்ட மற்றொரு தஞ்சைக்கோயில், பூமாலைராவுத்தன் கோயிலாகும். ஸ்தலவிருக்ஷம் வன்னியாகும்.

பிரம்மோத்ஸவம் ஆவணி மூலத்தில் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறும். இக்கோயிலில் காணும் இரண்டு கல்வெட்டுகள், அர்த்தஜாமக் சட்டளைக்காக விடப்பட்ட இரண்டு தானங்களைக் குறிக்கின்றன. மற்றும் இக்கோயிற் பணியில் சிறந்த அபிமானஸ்தர்களில், திரு வ. மருதப்பா பிள்ளை, P. V. ராமய்யர் முதலியவர்களைக் குறிப்பிடவேண்டியதாகும்.

சொத்து: காசாத்தோட்டம் கொடிக்காலூரில் ந. 0. 18.85. அரசாங்க மோஹனித் தொகை ரூ. 78—12—0 உடன் மொத்த வருமானம் ரூ. 772—1—4.

இக்கோயில் வெளிவாயிலுக்குத் தென்புறத்தில் **ஆனந்த உச்சி விநாயகரது** ஆலயம் ஒன்றுண்டு. அன்பர்களால் விநாயகருக்கு நவராத்திரி விழாவும் ஏழைகளுக்கு அன்னதானமும் சிறப்பாக நடைபெறுகிறது.



புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில்.

# மாரியம்மன்கோயில் திருக்கோயில்கள்

## ஸ்ரீ மாரியம்மன் கோயில்

தஞ்சாவூருக்குக் கிழக்கே 3½மயில் தூரத்தில் புன்னை நல்லூர் என்ற புராதனப் பெயருள்ள கிராமம், பின்பு ஸ்ரீமாரியம்மன் கோயில் பிரபாவத்தாலும் தேவியின் அருட்சக்தியாலும், சிறப்புற்று கிராமத்துப் பெயரே தேவியாரின் பெயரால் ஆயது. இக்கோயில் மிகப்புராதனமென்றே சொல்ல வேண்டும். **சோழேந்திர விஜயம்** என்ற வடமொழி நூலில் இக்கோயில் குறிப்பிடப்பட்டுள்ளதால் சோழர் காலத்துக் கோயிலேயாதல் வேண்டும். அதற்குச் சான்று இக் கோயிலுக்கு விடப்பெற்ற இனும் கிராமம் முதலாம் இராஜராஜனின் பெயராகிய அருண்மொழித் தேவன் என்பதைத் தாங்கி அருண்மொழிப்பேட்டை என்றிருப்பதுமாகும். மற்ற மானிய நிலங்கள் – மாரியம்பாள்புரம் முதலிய மகாராட்டிர துளஜா ராஜாவினுலும் (1763—87) அவருக்குப்பின் சரபோஜிராஜா (1798—1832) முதலியவர்களாலும் விடப்பட்டதென்பர். கோயிலின் வரலாறு :—மகாராட்டிர அரசிற்கு அடிகோலிய வெங்காஜி (கி.பி. 1675—84) இராமேச்சுரம் யாத்திரை செய்து திரும்புகாலில் திருச்சிராப்பள்ளி சமயபுரத்து ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் தங்கியபோது, அவன் கனவில் தோன்றி, தான் தஞ்சை மாரியம்மன் என்றும், அவன் அங்கு செல்வானுகில் அங்கு மகாராட்டிர அரசைத் தான் ஆரம்பிப்பாள் என்றும், அவனுக்கும் அவன் வழியினேருக்கும் தான் உற்ற துணையாக இருப்பாளென்றும் சொல்லி மறைந்ததாகவும் ஒரு கதை வழங்கிவருகிறது.

மற்றும், அவ்வரச பரம்பரையில் எட்டாவதான துளஜா ராஜா (1729—1735) காலத்தில், இக்கோயில் சாதாரண கிராம எறும்புப் புற்ருக இருந்ததாகவும், அரசனுக்கு ஒருநாட் பகலில் தேவியானவள் பிராமணச் சிறுமியாக முன்தோன்றவும், யாரென வினவ, தான் புன்னைநல்லூர் மாரியம்மன் என்றும், அரசனது மகள் கண்பார்வை மங்கி வருவதை நீக்குவதாகவும் சொல்லி மறைந்ததாகவும்; பின்பு, அரசனும் புதல்வியும் ஸ்ரீமாரியம்மனைத் தரிசித்துக் கற்பூரம் ஆரத்திகாணும்

போது மகவின் கண்ணினின்று ஒரு சுடர் விழ கண்நோய் நீங்கியதாகவும்; பிறகு ஸ்ரீ அம்மனுக்குப் பல நிலதானங்களும் விடுத்து, கோயிலையும் இப்போதிருக்கும் நிலைமையில் கட்டியதாகவும்; இக்காலந் தொடங்கியே அம்மனுக்குப் பிராமண குருக்களால் சைவ ஆகம விதிப்படி பூசை நடந்துவருகின்றதென்றும்; துளஜா மன்னர் காலத்திலேயே சதாசிவ பிரம்மம் என்ற ஞானியாரால் ஸ்ரீஅம்மனைப் புதியதாக ஸ்ரீசக்கர யந்திர பிரதிஷ்டை செய்விக்கப்பெற்றதென்றும் தெரிகிறது. ஆண்டு விழா ஆவணி மாதத்திலும்; அதன் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் திருத்தேர் விழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

ஸ்ரீ மாரியம்மன்கோயில் திருக்குளத்தின் தெற்கு, மேற்கு படித்துறைகளின் பகுதிகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் சிதைவுற்று விழுந்துவிட அதனைப் புதுப்பிக்கக்கருதி பக்தர்களின் பேருதவியால் திருப்பணி தொடங்கி கருங்கற்படிகளாக முற்றுப்பெற்றிருப்பதும், கோயிலில் போதிய விளக்கு வசதியில்லாததால் அக்குறையை அன்பர்கள் உதவியால் மின்சார ஒளி பரப்ப ஏற்பாடு செய்து, 1938-ஆு செப்டம்பர்-மீ 9உ தஞ்சைக் கலெக்டர் திவான்பகதூர் வி. என். விசுவநாதராவ் அவர்களால் மின்ஒளி விளக்குகள் ஏற்றிவைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கவை.

## ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி கோயில்

இக்கிராமத்தின் மேற்குத் திக்கிலுள்ள உன்னத தோற்றத்தினதாய் விளங்குவது ஸ்ரீகோதண்டராமர் கோயில். இத்திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்டராமர், யமுனாம்பாள்புரம் அதாவது நீடாமங்கலத்துக்கு அடுத்த பூவனூரிலிருந்து மகாராட்டிர மன்னர் காலத்தில் கொணர்ந்து கோயில் எடுப்பித்து பிரதிஷ்டை செய்வித்ததெனத் தெரிகிறது. ஸ்ரீ கோதண்டராமப் பெருமாள், ஸ்ரீசீதா பிராட்டி, ஸ்ரீஇலக்குமணர், ஹநுமான் நின்ற திருமேனிகள் கம்பீரமான தோற்றங்களுடன் ஸேவை ஸாதிக்கின்றனர். கிழக்கு திருமுகமண்டலம். தனிச்சந்நிதிகள் ஆழ்வார்களுக்கும் ஹநுமாருக்கும் உள.

பிரம்மோத்ஸவம் ஸ்ரீராமநவமியில்—முன்னுள் திருத்தேர் இப்பொழுது பழுதாகி நின்றுவிட, தற்போது சட்டத்தேர் இழுத்துவருகின்றனர்.

இக்கோயிலுக்கு மின்சார ஒளி விளக்குகள் அன்பர்களின் உதவியால் ஸ்ரீ மாரியம்மன்கோயில் உள்பட 9—9—1938-ல் ஏற்றி வைக்கப்பெற்றன.

## ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோயில்

ஸ்ரீ மாரியம்மன் திருக்குளத்திற்குத் தென்பாரிசத்திலுள்ளது. இக்கோயில் ஏற்கனவே களுமோட்டிலிருந்தும், பிறகு விண்ணாற்றங்கரை இராஜா சத்திரத்துக்கு எதிரிலிருந்தும், அதன்பிறகு புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் கோயில் திருக்குளத்திற்குத் தென்புறத்தில் கட்டி தாபனம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசேஷ விழா, கார்த்திகையில் திருக்கல்யாணம்.

---

சேர்க்கை 4.

# ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் *

பாட்டுடைத்தலைவர்

தஞ்சை சரபோஜி II மன்னர்மீது அவைப்புலவர்

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றியது.

## ஸ்ரீ கணபதி பிரவேசம்

ராகம் - மத்தியமாவதி] [தாளம்-ஆதி

பல்லவி

கணபதி வந்தாரே —கருணைகரரான
கணபதி வந்தாரே.

அனுபல்லவி

மணமலர்ச் சோலைசூழ் தஞ்சைச் சரபோஜி
மகராஜன் சபைதனி லனைவரு மகிழ்ந்திட (கணபதி)

சரணங்கள்

ஆகுவா கனர்வந்தார் அம்பிகை தனயர் வந்தார்
பாகசா தனன்போற்றும் பாதபங் கயர்வந்தார் (கணபதி)

வாமன ரூபர் வந்தார் மகேசுவர புத்ரர் வந்தார்
சோமசே கரர்வந்தார் சூர்ப்பகர் ணர்வந்தார் (கணபதி)

ஐந்து கரத்தர் வந்தார் ஆனைமா முகத்தர் வந்தார்
தொந்தி வயிற்றர்வந்தார் தொழுமொற்றைக் கொம்பர்
வந்தார் (கணபதி)

---

## சகிகள் சம்மதித்ததைப்போல் பேசாமலிருக்க அதைக் கண்டு மகிழ்ந்த மதனவல்லி சந்தோஷத்துடன் பாடுகிருள்.

ராகம் - தோடி] [தாளம் – மிச்ரம்

பல்லவி

சொல்லும் வகையெல்லா முறையா யுனக்குநான்
சொல்லுகின் றேனடி தேனே.

அனுபல்லவி

வல்லோர் புகழ்தஞ்சைச் சரபோஜர் மகாராசர்
மனத்துக் கிசைந்திடுந் தூதுநீ யினிதாகச் (சொல்லும்)

---

* இந்நூலின் 37-38-ஆம் பக்கம் பார்க்க. நாடகத்தின் சில பகுதிகள் அவற்றின் நயத்தையும் ரஸிகர்களது விருப்பத்தையும் கருதி இங்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சரணங்கள்

செஞ்சுட ருதிக்குமுன் னெழுந்து புனல் படிந்து
திருநீறணிந்து ருத்ராக்ஷ மணி பூண்டு
நெஞ்சினி லெழுமன்பி னுடுசந்தி வந்தனம்
நிலைதரு சிவபூஜை புரிகுவ ருடனுண்டு (சொல்லும்)

விஞ்சை தருவேத புராணங்க ளோதிடுவோர்
விருப்புடன் பெரியோர்பா லிருப்பார்கேள் வியினீண்டு
கஞ்சமலர்த் தாரினர்க்குஞ் செம்பொன்முதற் றனங்கள்
கனக்கவே செய்வரிந்தக் காலங்களிற் கூறுதே(சொல்லும்)

மச்சங்கொங் கணமீழ மலையாளஞ் சாளுவம்
வங்காளந் துலுக்காண மராடஞ்சீ னத்தோடு
கொச்சி முதலான தேசமன் னவர்வந்து
கூடிப் பணிந்துநிற்குஞ் சமயத்தி லுரையாதே(சொல்லும்)

மெச்சுமதி மந்திரிமார் தளகர்த்தர் முதலான
மேலோர்தஞ் செய்கைசொல்லி வினவுங்காற் பகராதே
கச்சணி முலைமாதர் நடனஞ்செய் வேலையிலும்
கவிவாணர் பிரசங்கஞ் செய்போதும் புகலாதே (சொல்லு)

நீலத் தடங்கண்மாதர் தூதுக ளங்கங்கே
நீள்கடை தோறுநிற்குஞ் சமயம்பார்த் தன்பாலே
சாலப் பெருஞ்சேனை சூழப் பவனிவரத்
தாம்வரு மகாராஜர் சபையதன் முன்பாலே (சொல்லும்)

பாலுற்றிடும் போதவ் வாசற் புறநின்று
பணிந்துரைத் தாலது பலித்திடு நம்பாலே
மாலுற்ற துவும்நான் மேலுற்ற துஞ்சொல்லி
மாலைகைக் கொண்டிங்கு வந்திடு கென்பாலே (சொல்லும்)

**மோகினி வசனம் :**—சகிகாள் சகல சாஸ்திர சம்பன்னரும் சகல தேசத்தரசர்களும் மந்திரி பிரதானிகளும் சூழச் சிம்மாசனதில் விற்றிருந்து அரசு செலுத்தும் அச் சரபநரேந்திர பூபதியை வாசலில் காத்திருந்து பணிந்துரைத்தாவது என் குறையைத் தீர்க்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.

**சகிகள் வசனம் :**—அம்மா மதனவல்லி ஏதோ எங்களால் கூடியவரையில் சென்று முயன்று பார்க்கிறோம்.

## குறத்தி வாசல் வளம் கூறுதல்

ராகம் - பரசு] கண்ணிகள் [தாளம் - திச்ரம்

வாசலிது வாசலிது மகராஜன் வாசலிது

தீர்மானம்

தோதிந்த, தக்க, தோதிந்த, தத்தோம், தத்தோம், தொங்கா
தகதோம், தொங்கா, தத்தோங்கா, தகதோங்கா,
தளாங்குதோம், ததிங்கிணதோம் (வாசலிது)

பாட்டு

தேசுறுபோ சலகுலத்தைச் செழிக்கவைக்கும் வாசலிது
(வாசலிது)

நன்னயஞ்சேர் தஞ்சைதனி னலம்பெருகும் வாசலிது
மன்னுசர போஜிமன்னர் மகிழ்ந்திருக்கும் வாசலிது(வாச)

திருமகளு நாமகளுஞ் சிறந்திருக்கும் வாசலிது
வரமுதவும் பெரியோர்கள் வாழ்த்திசைக்கும் வாசலிது
(வாசலிது)

விதிதரும்வே தாகமங்கள் விளங்குமணி வாசலிது
சதுரங்க சேனைகளுஞ் சந்ததஞ்சூழ் வாசலிது (வாசலிது)

நேசமுறு சேனைகட்கு நிதியளிக்கும் வாசலிது
பூசுரர்க்கும் புலவோர்க்கும் பொன்சொரியும் வாசலிது
இத்தரணி மன்னரெல்லா மிறைஞ்சிநிற்கும் வாசலிது
மொய்த்திடுசீர் மும்முரசு முழங்குமணி வாசலிது
(வாசலிது)

---

## குறத்தி பாட்டு

ராகம் - சௌராஷ்டிரம்] [தாளம் - மிச்ரம்

பல்லவி

எங்கள் குறச்சாதிவள மெடுத்துரைப்பே னம்மே

அனுபல்லவி

மங்களஞ்சேர் தஞ்சைநகர்ச் சரபநர பாலன்
மகிழ்ச்சியுட னுளுமிந்தப் புவிக்குளுயர் மின்னே (எங்கள்)

சரணங்கள்

மானினொடு பன்றிமரை யொளிவிருந்து கொல்வோம்
வந்தெதிர்த்தோர் தங்களைமேன் மிஞ்சவிடோம்
வெல்வோம்
கானகத்திற் கிழங்காளை மருப்பதனைற் கெல்வோம்
கைக்குறிகண் மெய்க்குறிக ளெக்குறியுஞ் சொல்வோம்
(எங்கள்)

வாவுமொரு முயலைவிட்டு மதகளிற்றைப் பிடிப்போம்
மனலதனைத் தகவறுத்து வருதைலம் வடிப்போம்
மேவுமவ லிடிப்பதுபோ லுரலதனை யிடிப்போம்
மேன்மைதனக் கிழிவுவரின் மிகவதற்குத் துடிப்போம்
(எங்கள்)

செந்திருமா லென்றனக்கு மைத்துனன்கா ணம்மே
திங்களணி சிவனெனக்குத் தமையன்முறை யம்மே
அந்தமிகுங் கந்தனெங்கண் மருமகன்கா ணம்மே
அன்னநடை வள்ளியெங்கள் கன்னிகைகா ணம்மே (எங்)

மாமனைமுன் கைபிடிப்போங் கொழுந்தனொடு படுப்போம்
வாழுமெங்கள் சாதிமெத்த மானமுள்ள சாதி
நாமமுறு மாமிதனைத் தாயெனவே மதிப்போம்
நாத்தியெனுஞ் சொல்லுரையோம் போற்றிடுவோம் நீதி
(எங்)

அம்மே இதுவரை சாதிவளம் சொன்னேன் இனி
மலைவளம் சொல்வேன் கேளு.

## குறத்தி பாட்டு.

ராகம் – பைரவி] பல்லவி [தாளம் - ஆதி

மலைவளஞ் சொல்வேன்கே ளம்மே நானறிந்த
மலைவளஞ் சொல்வேன்கே ளம்மே

அனுபல்லவி

சிலைவளங்கொள் சரபோஜி மன்னர்தென் றஞ்சைத்
திருநகர் தனில்வாழு மருமலர்க் கோதாய் (மலைவளம்)

சரணங்கள்

மல்லிகார்ச் சுனமெனவோர் விண்டு
மனத்தொன் றதிலெண்ணிக் கொண்டு
மகிழ்ந்தேறி விழுந்தவர்கள் பண்டு
மதித்ததெல் லாமடைவர் கண்டு (மலைவளம்)

சொல்லுமதைப் புகழுமிந்த ஞாலம்
தொகு பணிக்கு மயில்களினீள் சாலம்
தோகைநிழ லுதவியனு கூலம்
தோற்றிடவே யாற்றும் பகற்காலம் (மலைவளம்)

கனமாம் பொதியமலைச் சித்தர்
கருத்தினில் வெகுபரி சுத்தர்
கறைக்கண்டர் தமக்கவர் பத்தர்
காலங்கள் பலகண்ட நித்தர் (மலைவளம்)

தினமுஞ் சிவாகமம் படிப்பார்
சித்தாந்த மேபெரிதாய் முடிப்பார்
செறிந்திடைம் புலன்களை யடிப்பார்
சிவபதம் நிலைபெறப் பிடிப்பார் (மலைவளம்)

இனுமதி லொருநெல்லி யடுக்கும்
எடுத்தருந் திடின் மூப்பைத்தடுக்கும்
எழிலுறு மிளமையைக் கொடுக்கும்
இமையவ ருணவினைக் கெடுக்கும் (மலைவளம்)

தனுவாய் வளைந்ததொரு வெற்பு
தழலா யெழுந்ததொரு வெற்பு
சலமாய் நிறைந்ததொரு வெற்பு
தனிக்குடை யானதொரு வெற்பு (மலைவளம்)

திருவுட னெருமலை வாழும்
தேறிரு கழுகதிற் சூழும்
தெரிசிக்கி னதைப்பிறப் பேழும்
சேர்ந்துமேற் றேடராம லாழும் (மலைவளம்)

தாரணியிற் பலவுள நாகம்
தகுமதி சயங்கள நேகம்
தந்நிகர் சரபோஜி மன்னர்
தஞ்சைக் கணிதரும் வஞ்சி (மலைவளம்)

## மங்களம்

ராகம் - சுருட்டி] பல்லவி [தாளம் - ஆதி

மங்களம் சரபேந்திரர்க்கு ஜயமங்களம்

சரணங்கள்

புகழ்சோழ தேசருக்குப் போசலகு லேசருக்குச்
சகலருக்கும் நேசருக்குத் தஞ்சைநகர் வாசருக்கு (மங்கள)

சித்தபரி சுத்தருக்குத் தேறுசிவ பத்தருக்குச்
சத்துவகு ணத்தவருக்குத் தண்மதிமு கத்தருக்கு (மங்கள)

நிலைமதிவி சாலருக்கு நீடுறுசெங் கோலருக்குத்
தலமதனின் மேலருக்குச் சரபபூபாலருக்கு (மங்களம்)

ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்
முற்றிற்று.

---

திருச்சிறுப்பள்ளி யூனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி-2.

சேர்க்கை 5.

## சோழர் காலத்துச் சுவர் ஓவியங்கள். *

சோழர் கால ஓவியங்கள் 11-வது நூற்றுண்டினதாகும். நாயக்கருடைய ஓவியம் 17-ஆவது நூற்றுண்டினவை. இரண்டும் அந்தந்தக் காலத்தில் இருந்த சமயப் போக்கினையும், சமூக உணர்ச்சியினையும் உணர்த்துமாறு அமைந்துள்ளன.

### சில ஓவியங்களின் விளக்கம்

சோழர் கால ஓவியங்களிற் சிலவே அவற்றை மூடப்பெற்றிருந்த சுண்ணச்சாந்து கீழே விழ, இதுபோது தோற்றமளிப்பன. அவற்றின் ஒரு பெரும் பகுதி சைவசமயாசாரியர் சுந்தரமூர்த்தி நாயனரது வாழ்க்கைக் குறிப்பாகும்.

சுந்தரரது திருமணப்பந்தல்: திருமணத்தைக் கண்டு களிக்கப்பலர் கூடியிருக்கின்றனர். சிவபெருமான், கிழவேதியர் உருவங்கொண்டு ஒரு கையில் குடையும், மற்றொரு கையில் ஒரு ஓலையும் தாங்கிச் சுந்தரருக்கு முன் நிற்கின்றார். ஓலை சுந்தரரது அடிமைச் சீட்டாகும். கிழ வேதியர் இவ்வடிமை ஓலையைக் காட்டி திருமணத்தைத் தடை செய்து பக்தனை ஆட்கொள்ள வந்துள்ளார். சுந்தரர் வியப்புடன் வேதியரை நோக்குகின்றார். திருமணச்சுற்றம் திகைக்கின்றது. அவர்களுக்கு எதிரே திருவெண்ணைநல்லூர் கோயில் தீட்டப்பெற்றுள்ளது ஒருதிரள் கூட்டம் அதனுள் செல்லுகின்றது.

2. அதற்கடுத்து ஒரு குடியானவர் வீட்டுத் தோற்றம். பெண்கள் மண் பானையில் உலை வைத்துச் சோறு சமைக்கின்றனர். வேலையாள் ஒருவன் ஒரு பெண்ணிடமிருந்து உணவு பெறுகின்றான்.

3. இவைகளுக்குமேல் கயிலாய மலைத்தோற்றம். சிவனார் ஒரு புலித் தோலின்மீது தோற்றமளிக்கின்றனர், அவருக்கு முன்னர் நந்தி படுத்திருக்கின்றது. சிவகணங்களும், முனிவர்களும் சூழ்ந்திருச்கின்றனர். இவர்களுக்கு இடையே அப்சர மாதர் நடனமாடுகின்றனர்.

5. இதற்குச் சற்று கீழ்ப் பாகத்தில் சுந்தரர் வெள்ளை யானையின்மீது அமர்ந்து கந்தர்வர்கள் புடைசூழவும், தேவர்

---

* மற்றும் விபரங்கள் காண்பன :— 39-ஆம் பக்கம் பார்க்க.

இன்னும் Journal of the Annamalai University II. i. pp 1-10 : 1933., J. I. S. O. A. pp. 73—80, 1933 ; Technical Studies, Harvard V. iv. 1937 ; Indian Art and Letters. IX. 2. pp. 1—8 ;

N.58

கானம் முழங்கவும் கயிலாயம் செல்கின்றனர். யானையின் வேகம் உயிர்த் தன்மையுடன் விளங்க, அதற்கு முந்தியதாகச் சேரமான் பெருமாள் தன் குதிரையின்மீது ஆவேசத்துடன் விரைகின்றார். அவர்கள் ஒரு கடலைக் கடப்பதான தோற்றம். விண்மீன்கள் போன்று, சில தண்ணீர் பிராணிகளும் தோற்றமளிப்பன. கந்தர்வர் இவ்விருவர்மீதும் பூமாரி சொரிகின்றனர். தேவ அப்சர மாதர் நடனங்கள் சிலவற்றைப் படங்களிற் காண்க.

மற்றும் ஒருபுறம், சோழர்பிரான் இராசராசன் I பல தோற்றங்களுடன் திகழ்கின்றான். தில்லைச் சிற்றம்பலத்தின் தோற்றமும், ஆடவல்லானின் ஆட்டமும், அரசனும், தேவியரும் இறைவனைப் பணிகின்றனர். அரசனது பணியாட்களின் தோற்றமும் ஒருபுறம் காண்பன. மற்றொரு ஓவியத்தில், அக்கால மக்கள் சிலரின் மேற்சட்டை இக்கால Bush Coat போன்று காணப்படுவது.

மற்றொரு பெருங்காட்சி - வடபுறச் சுவர்ப் பத்தியில் காண்பது விரிசடைக் கடவுள் திரிபுர சம்ஹாரம் செய்யும் காட்சியாகும். தேவகணங்கள் சூழ, விநாயகர், முருகன் அருகிருப்ப, சிவனார் தமது இரதத்தின்மீது ஏறுகின்றனர். சிவனார் தமது நெற்றிக்கண்ணைத்திறந்து நோக்க, அசுரர்கள் உயிரற்று வீழ்கின்றனர். சில அசுர மாதர் தமது வீரக் கணவர்களின் கழுத்தைச் சுற்றிக்கொண்டு தொங்குகின்றனர். திரிபுர சம்ஹாரமும், தேவர்களாலாய தேர் அச்சு முறியவும், தேவர்களது கர்வமும் அடங்குகின்றது.

மற்றொரு பக்கத்தில், இறைவனது சத்யோஜாதமூர்த்தம் விளங்க ஐந்நிறத்தோற்றம். பல வர்ணத்தோற்றத்துடன் இறைவன் கிரீடாதிபதியாக விளங்குகின்றார். மற்றும், சோழர் ஓவியங்களை மறைத்துக்காணும் நாயக்கரது ஓவியங்கள் பொதுவாகப் புராண சம்பந்தமானவையும்; திருப்பாற்கடல் கடைவது, விஷ்ணுவின் தசாவதாரக் காட்சிகள், நடன பாவங்கள், அக்கால மக்கள் நடை, உடுக்கும் உடை, பாவனை, அவர்களது அணிகலன்கள், மற்றும் பலவற்றை விளக்குவன.

தென்னிந்தியத் திருக்கோயில்கள் சம்பிரதாய நிலையங்கள் மாத்திரமேயன்றி பொதுவாக மக்களின், கலைப்பண்டாரமாகவும் விளங்குவதற்கு இச்சோழர்—நாயக்கர்கால ஓவியங்களும் ஒருபெரும் சான்றாவன.

9B/54 | 109956

9B / 5-5-4